# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 291 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 27, திங்கட்கிழமை 12.09.2016


## ஐ.நாவுக்கான ராணுவ அதிகாரியாக மேஜர் ஜெனரல் சுமேத

கொழும்பு, செப். 12
நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. பொதுச் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகத்துக்கு இராணுவ இணைப்பதிகாரியாக மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா நியமிக்கப்பட்டார்.
ஐ.நாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகத்துக்கான இராணுவ இணைப்பதிகாரியாக கடந்த ஓர் ஆண்டாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் உபய மெடவெலவின் சேவைக்காலம் முடிவுற்றதையடுத்தே, மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். (வ-5)



ஆணைக்குழுக்கள் அமைத்தே காலத்தை இழுக்கும் தந்திரம் யாரிடம் இருக்கு...

# தம்முடன் கலந்தாலோசிக்காமல் பட்ஜெட்டா? வடமாகாண சபை உறுப்பினர்கள் போர்க்கொடி


யாழ்ப்பாணம், செப். 12
மக்கள் பிரதிநிதிகளின் ஆலோசனைகள் - சிபாரிசுகள் எதுவும் உள்வாங்கப்படாமல், அதிகாரிகளின் கருத்துக்களை மாத்திரம் உள்வாங்கியே, அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கு வடக்கு மாகாணசபை நிதி கோரியுள்ளது.
இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டாகத் தெரிவித்தனர்.
வடக்கு மாகாண அரசினால், அடுத்த ஆண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 10 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா தேவை என்று கொழும்பு அரசிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 10 ஆயி >> 23ஆம் பக்கம்

# நல்லிணக்க முயற்சிகள் மெதுவாகவே நகர்கின்றன

### சிலோவேனியாவில் தெரிவித்தார் அமைச்சர் மங்கள



கொழும்பு, செப்ரெம்பர் 12
போரின் பின்னரான நல்லிணக்கத்தை எட்டுவதில் அரசு மிக மெதுவாகச் செயற்பட்டு வருவதாக அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
சிலோவேனியாவில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இதன்போது அவர் தெரிவித்ததாவது: >> 25ஆம் பக்கம்



இல்லாமியர்கள் அனைவருக்கும் உதயனின் ஈதுல் அல்ஹா ஹஜ் திருநாள் வர்ழ்த்துக்கள்

## இரணைமடுக் குளச் சீரமைப்பு
# தடை நீங்கியது

யாழ்ப்பாணம், செப். 12
இரணைமடுக் குளச் சீரமைப்புக்குத் தேவையான மண் அகழ்வுக்கு நேற்று அனுமதி வழங்கப்பட்டது. மண் அகழ்வுக்கு முன்னர் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், ஜனாதிபதியின்கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து நேற்று முதல் தடை நீக்கப்பட்டது.
கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயிகளின் முதன்மை வாழ்வாதாரக் >> 24ஆம் பக்கம்

## இலங்கை அரசின் போக்குக்கு மன்னிப்புச் சபை அதிருப்தி

ஜெனிவா, செப்.12
இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பில் மெதுவான நடைமுறைகளையே காணமுடிவதாக அனைத்துலக மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது.
ஐ. நா. மனித உரிமைகள் சபையின் 33ஆவது அமர்வு நாளை ஆரம்பமாகவுள்ளநிலையில் அனைத்துலக மன்னிப்புச் சபை எழுத்துமூல அறிக்கை ஒன்றை நேற்று முன்வைத்தது. அதில் இலங்கை அரசு மேற்கொள்ளும் மெதுவான நடைமுறைகள் மற்றும் வெளிப்படைத்தன்மையில்லாமை என்பன தொடர்பில் மனித உரிமை காப்பாளர்கள் அதிருப்தி >> 24ஆம் பக்கம்

## வெனிசுலா செல்கிறார் மைத்திரி

கொழும்பு, செப்.12
அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெனிசுலாவுக்கு பயணம் மேற்கொள்கிறார்.
எதிர்வரும் 17, 18 ஆம் திகதிகளில் இந்த உச்சி மாநாடு நடைபெறவுள்ளது.
வெனிசுலா மாநாட்டின் பின்னர் ஐ. நா. சபையின் 71ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு ஜனாதிபதி செல்லவுள்ளார். இந்தப் பொதுச் சபைக் கூட்டம் செப்டம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. (வ)




உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கு நேற்று வருகைதந்த கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன், உதயன் குழுமத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோருடன் கலந் துரையாடினார். (ற-21)

## முன்பள்ளி ஆசிரியர் நியமனம் வடக்கில் ஓராண்டாகத் தாமதம்

யாழ்ப்பாணம், செப். 12
கொழும்பு அரசினால் அனுமதிக்கப்பட்ட வடக்கு அரசின் உள்ளூராட்சி அமைச்சின் கீழான முன்பள்ளி ஆசிரியர் நியமனம் ஒரு வருடத்துக்கு மேலாக இன்னமும் நிரப்பப்படாமல் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
இதற்குரிய சேவைக் குறிப்பு தயாரிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதமே கடந்த ஒரு வருட காலமாக இந்த நியமனம் மேற்கொள்ளப் படாமைக்குக் காரணம் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.
கொழும்பு அரசினால் கடந்த ஆண்டின் நடுப்பகுதியில், உள்ளூராட்சி அமைச்சின் கீழான முன்பள்ளி ஆசிரியர் நியமனத்துக்கு ஆளணி >> 23ஆம் பக்கம்

# வடக்குக் கல்வி அபிவிருத்திக்கு ரூ. 6,533 மில்லியன் நிதி ஒதுக்கீடு

### கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 12
வடக்கின் கல்வி அபிவிருத்திக்கு என இந்த வருடம் 6 ஆயிரத்து 533 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதாக இராஜாங்க கல்வி அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் தற்போது தங்கியுள்ள அவர், உதயன் அலுவலகத்துக்கு நேற்று வருகை தந்தார். அங்கு உதயன் குழுமத் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், உதயன் பிரதம ஆசிரியர் வ.ம.கானமயில்நாதன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போது இந்தத் தகவலை அவர் தெரிவித்தார்.
மாகாண >> 25ஆம் பக்கம்

# ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடத்த நெறிமுறைகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 12
மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை ஒவ்வொரு மாதமும் நடத்துமாறு ஜனாதிபதிசெயலகத்தினால் சகல மாவட்டச் செயலர்களுக்கும் சிறப்புச் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு எஞ்சியுள்ள மாதங்களிலும், அடுத்த ஆண்டும் எந்தத் தினங்களில் கூட்டம் நடத்த வேண்டும் என்ற திகதியும் குறிப் பிடப்பட்டு இந்தச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது.
மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் சீராக நடத்தப்படுவதில்லை. ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களின் நேர ஒதுக்கீட்டில் இழுபறி ஏற்படுவதால் இதனை ஒழுங்காக நடத்த முடியாமல் இருப்பதாக கடந்த காலங்களில் அதிகாரிகள் தெரிவித்து வந்தனர்.
இந்த நிலையில் ஜனாதிபதி செயலகத்தினால், சகல மாவட்டச்செயலர்களுக்கும் சிறப்பு >> 24ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வட்டுக்கோட்டையின் அபிவிருத்தியில் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளேன்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவிப்பு

என்னுடைய பரிந்துரையில் சுழிபுரம் சத்தியக் காட்டு சந்தை, வட்டுக்கோட்டை சந்தை, சங்கானை தபாலகம் ஆகியவை அடுத்த ஆண்டு முன்னுரிமையில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. வட்டுக்கோட்டைத் தொகுதியின் அபிவிருத்தியில் நான் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளேன். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்தார்.



வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற இரு மாடி கட்டடத்திற்கு அடிக்கல் நடும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்ததாவது:

30 வருட போராட்ட காலத்தில் எங்களுக்கு எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. போர் முடிவுக்கு வந்த பின்னர் ஆட்சி பீடமேறிய அரசும் எங்களுக்கு தேவையான அபிவிருத்தியைப் செய்து தரவில்லை. நல்லாட்சி அரசு தற்போது முயற்சி எடுக்கின்றது. நான் அதை முயற்சி என்றுதான் சொல்வேன். பல விடயங்களை நாங்கள் முன்னெடுக்க முனைகின்றோம். ஆனால் அவை தற்போதும் தடுக்கப்படுகின்றன. எந்த விடயமாக இருந்தாலும், கூட்டு எதிர் அணிஇருக்கின்றது. அந்த அணி எதிர்ப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கின்றது. மகிந்தவின் தலைமையின் கீழ்தான் அந்த அணி உள்ளது. தற்போது நல்லாட்சி அரசுக்கு எங்களுடைய ஆதரவைத் தெரிவிக்கின்றோம். எங்களுக்கு உரித்தான உரிமைகளை பெற்றுக் கொள்வதற்குத்தான் இந்த ஆதரவு. உரிமைக்கான போராட்டத்துக்குச் சமாந்தரமாக அபிவிருத்திகளையும் நாங்கள் செய்கின்றோம். மக்கள் போரினால் துன்பப்பட்டுள்ளனர். அபிவிருத்தியில் ஏனைய மாகாணங்களை விட மிகவும் பின்தள்ளப்பட்டு இருக்கின்றோம். போர்க் காலத்தில் கல்வியில் கொடி கட்டிய நாம் தற்போது மிகவும் பின்னடைந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். மகிந்த அரசு எங்களது கல்வியைப் பாழடிக்க பல்வேறு வழிகளிலும் நடவடிக்கை மேற் கொண்டது. தற்போது நாங்கள் கல்வியில் முன்னேறுவதற்கு, நல்லாட்சி அரசு ஓரளவு பௌதிக வளங்களை எங்களுக்குத் தருகின்றது.

அடுத்த நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நவம்பர் மாதம் 10ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு வர இருக்கின்றது. இந்த வரவு – செலவுத் திட்டத்தில் எனது ஒதுக்கீட்டின் ஊடாக, சத்தியக் காட்டு சந்தை, வட்டுக்கோட்டை சந்தை, சங்கானை தபாலகம் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானித்துள்ளேன்.

சங்கானை கட்டடத் தொகுதியை கட்டி முடிப்பதற்கு எமக்கு 82 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது. இதனை பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி திணைக்களப் பொறியியலாளர்கள் ஆய்வு செய்து சமர்ப்பித் துள்ளனர். கொழும்பு அரசிடம் இந்த நிதியைக் கோரியுள்ளேன். அவர்கள் கொடுப்பார்கள். ஆனால் இதனை அமைத்து முடிப்பதில் பெரிய சிக்கல் இருக்கின்றது. தற்போதைய அரசு பூச்சிய வரவு-செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது. இந்த ஆண்டு முடிவில் – டிசெம்பர் 31 ஆம் திகதி கட்டடம் எந்த அளவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றதோ அதற்குத்தான் நிதி கிடைக்கும். எஞ்சிய நிதி திரும்பி விடும்.

தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் தற்போது அவர்களது நியாயமான கோரிக்கையை முன்வைத்து தொடர் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். எமது கட்டட நிர்மாணப் பணிக்கு அவர்கள் தான் முதுகெலும்பு. அவர்களின் போராட்டத்தினால் இதனை உரிய காலத்தில் கட்டி முடிக்க முடியுமா என்பது மிகப் பெரிய சவாலாக உள்ளது. மழை ஆரம்பிப்பதற்கு முன்னர் முடிக்க வேண்டும் என் பதும் கூடுதல் சவால். இதனைச் செய்ய முடியும் என்று நினைக்கின்றேன். இரவு பகல் முழுமையாக வேலை செய்தால் இதனைச் செய்யலாம். எனது நேரடிக் கண்காணிப்பில் இதனைச் செய்து முடிக்க எண்ணுகின்றேன் – என்றார். (வ-5-21-ரி7)

# இளைஞர் குழுக்களிடையே நல்லூரில் நேற்றிரவு மோதல்

நாயன்மார்கட்டு மற்றும் அரசடிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு இடையே நேற்று இரவு 8 மணியளவில் இடம்பெற்ற குழு மோதலினால் பாரதியார் சிலையடிப் பிரதேசம் போர்க்களமானது.

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டுப் பகுதி இளைஞர்களுக்கும் நல்லூர், அரசடிப் பகுதி இளைஞர்களுக்கும் இடையிலேயே இந்தக் குழுமோதல் இடம்பெற்றது. இந்தமோதலின்போது இருதரப்பும் அதிக போத்தல்கள், கற்கள், தடிகளைப் பயன்படுத்தி நடுவீதியில் மோதிக் கொண்டதனால், அரசடி வீதியால் பயணித்தோர் மற்றும் அருகில் இருந்த வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் பிரதேச மக்கள் பெரும் பதற்றமடைந்தனர். மோதலின்போது, வீதியால் பயணித்த ஹைஏஸ் வாகனம் ஒன்றும் மோதலில் ஈடுபட்ட வர்களால் அடித்துச் சேதப்படுத்தப்பட்டதோடு, போத்தல் தாக்குதலுக்கு இலக்காகியும் பலர் காயமடைந்தனர். இது குறித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சுமார் 15 நிமிட இடைவெளியில் சம்பவ இடத்துக்கு பொலிஸார் வருவதை அவதானித்த மோதலில் ஈடுபட்ட இருதரப்பினரும் அங்கிருந்து ஓடித்தப்பினர். இதேவேளை மோதலின் போது காயமடைந்த எவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சேர்க்கப்படவில்லை. (வ-10)

# பரவிப்பாஞ்சானில் மேலும் சில காணிகள் புதனன்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், செப். 12

கிளிநொச்சி, பரவிப்பாஞ்சானில் ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவருக்கு வாக்குறுதியளித்த நிலப்பரப்பின் எஞ்சிய பகுதியின் 1.5 ஏக்கர் நிலம் நாளைமறுதினம் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்படும் என இராணுவத்தினரால் அறிவிக்கப்பட்டது.

பரவிப்பாஞ்சான் பகுதி மக்களின் வாழ்விடங்கள் உட்பட மொத்தம் 45 ஏக்கர் நிலப் பகுதியைப் படையினர் ஆக்கிரமித்து நிலை கொண்டிருந்தனர். எனினும் மக்கள் தொடர் கோரிக்கைகள் – போராட்டங்களால், காணிகள் பகுதி பகுதியாக விடுவிக்கப்பட்ட நிலையில் மிகுதி 17 ஏக்கர் நிலப்பரப்பில் நிலை கொண்டுள்ளனர்.

கடந்த மாதம் மக்கள் மீண்டும் நடத்திய போராட்டத்தின்போது எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நேரில் சென்று குறித்த பிரதேச மக்களைச் சந்தித்து விவரத்தைக் கேட்டறிந்து பரவிப்பாஞ்சான் விடுவிப்புத் தொடர்பில் அரசுடன் பேசி நிலவிடுவிப்புத் தொடர்பில் வாக்குறுதியளிக்கப்பட்டதன் பிரகாரம்; இதுவரை இரு கட்டங்களாக 7 ஏக்கர் நிலப் பகுதி விடுவிக்கப்பட்டது. இதன் இறுதி நிலப்பகுதியாக 1.5 ஏக்கர் நிலப்பகுதி நாளை மறுதினம் விடுவிப்பதாக இராணுவத்தினர் பிரதேச செயலகத்துக்கு அறிவித்தனர்.

இதன் பிரகாரம் இறுதியாக படையினர் வைத்திருந்த 17 ஏக்கர் நிலப்பரப்பினுள் 8.5 ஏக்கர் நிலம் விடுவிக்கப்படுகின்றபோதும் மேலும் 8.5 ஏக்கர்நிலம் படையினர் வசம் உள்ளது. குறித்த நிலப்பகுதியையும் பெற்றுத்தருவதாக இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் வாக்குறுதியளித்துள்ளார். (வ -10)

# கைத்துப்பாக்கியைக் காட்டி இளைஞர்களுக்கு மிரட்டல்

## யாழ்.நகர திரையரங்கில் சம்பவம்

யாழ். நகரில் உள்ள திரையரங்கில் திரைப்படத்துக்கான நுழைவுச் சீட்டை கறுப்புச் சந்தையில் விற்பனை செய்ததற்கு எதிர்ப்புத்தெரிவித்து,திரையரங்கஊழியர்களுடன் வாக்குவாதப்பட்ட இளைஞர் குழுவை யாழ். பொலிஸ்நிலையத்தைச்சேர்ந்த உதவிப் பொலிஸ் பரிசோதகர் எனத் தெரிவித்த நபர் ஒருவர் கைத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினார் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெற்றது.

திரைப்படத்தின் இரவு 7 மணிக் காட்சியை பார்வையிடுவதற்கான நுழைவுச் சீட்டைப் பெறுவதற்கு பலர் வரிசையில் காத்திருந்தனர். திரையரங்கில் நுழைவுச் சீட்டு விற்கும் சிலர், பின் கதவினால் நுழைவுச் சீட்டின் விலையை விட 100 ரூபாய் அதிகரித்த விலைக்கு கறுப்புச் சந்தையில் விற்பனை செய்தனர்.

அது தொடர்பில் நுழைவுச் சீட்டை பெறுவதற்கு வரிசையில் காத்திருந்த இளைஞர் குழு, நுழைவுச் சீட்டு விற்றவர்களிடம் கேள்வி எழுப்பினர். கறுப்புச் சந்தையில் விற்கப்பட்ட நுழைவுச் சீட்டின் விற்பனை நிறுத்தப்பட்டது.

கறுப்புச் சந்தை விற்பனை தொடர்பில் கேள்வி எழுப்பிய இளைஞர்குழு, தமக்குரிய நுழைவுச் சீட்டைப் பெற்றுத் திரையரங்கினுள் சென்று அமர்ந்தனர். சிவில் உடையில் அங்கே வந்த ஒருவர், தன்னை யாழ். பொலிஸ்நிலைய உதவிப் பொலிஸ் பரிசோதகர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். கேள்வி எழுப்பிய இளைஞர் குழுவை வெளியே அழைத்தார். அவர்களிடம் தனது கைத்துப்பாக்கியைக் காண்பித்து துப்பாக்கி முனையில் இளைஞர் குழுவை நிறுத்தி கைது செய்யப் போவதாக தெரிவித்தார். இளைஞர்கள் தமது பக்க நியாயத்தை எடுத்துக் கூறினர். இதன் பின்னர் தன்னைப் பொலிஸ் உத்தியோகத்தர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டவர், இது உங்கள் திரையரங்கு இல்லை. படம் பார்க்க அவர்கள் உங்களை அழைக்கவில்லை. உங்களுக்கு இங்கே படம் பார்க்க விருப்பமில்லை என்றால், வேறு திரையரங்குக்குச் சென்று பாருங்கள் என்று மிரட்டினார் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான (நேற்று முன்தினம் இடம் பெற்ற சம்பவம்) முறைப்பாடுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. இது தவறான தகவல். முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டால் நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்' என்று யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை குறித்த திரையரங்கில் கடந்த சில மாதங்களுக்கு முன்னரும், சிவில் உடையில் வந்த ஒருவர் தன்னைப் பொலிஸ் உத்தியோகத்தர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு திரைப்படம் பார்க்க வந்த இளைஞர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியிருந்தார். இது தொடர்பில் குறித்த இளைஞன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யச் சென்ற போது, அங்கிருந்த பொலிஸார் இளைஞனை சமாதானப்படுத்தி அனுப்பிவைத்தனர். இவ்வாறான நிலையிலேயே நேற்று முன்தினம் மேற்படி சம்பவம் இடம்பெற்றது. (வ-5-ரி4-37)

# பெண் மீது துர்நடத்தை; மதபோதகருக்கு மறியல்

இளம் பெண்ணை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் வெளிநாட்டில் இருந்து வந்த மதபோதகர் ஒருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள காப்பகத்தில் பணிபுரிந்த 20 வயது இளம் பெண்ணை கடந்த வெள்ளிக்கிழமை, மதபோதகர் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தியுள்ளார். இளம்பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். பின்னர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு நேற்று முன்தினம் சென்று வாக்குமூலம் வழங்கினார்.

வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்தேகநபர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். நீதிவானின் இல்லத்தில் அவரைக் கொண்டு சென்று பொலிஸார் முற்படுத்தினர். இதன் போது, சந்தேகநபரை எதிர் வரும் 23ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (வ-5-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்செயல்களுக்கு விரைவில் முற்றுப்புள்ளி

## ஜனாதிபதியிடம் உறுதியளித்தார் நீதிபதி இளஞ்செழியன்

யாழ்ப்பாணம், செப். 12

யாழ். குடாநாட்டில் இடம் பெறும் போதைப் பொருள் கடத்தல் போதைப் பொருள் வியாபாரம் மற்றும் அடாவடித்தனமான குற்றச் செயல்களுக்கு விரைவில் முற்றுப் புள்ளி வைக்கப்படும்.

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியிடம் உறுதிபடத் தெரிவித்தார் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன்.

யாழ்ப்பாணத்துக்கு கடந்த வெள்ளிக் கிழமை வருகை தந்த ஜனாதிபதி யாழ். பொலிஸ் நிலைய கட்டடத்தைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் தேநீர் இடை வேளையின்போது, யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், யாழ்ப்பாண நீதிவான் எஸ்.சதீஸ்தரன், யாழ்ப்பாண சிறுவர் நீதிமன்ற நீதிவான் கருப்பையா ஜீவராணி ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்தனர்.

யாழ். குடாநாட்டில் போதைப் பொருள் கடத்தல் மற்றும் போதைப்பொருள் வியாபாரம் அதிகரித்துள்ளமை மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக இதன்போது கலந்தாலோசனை செய்யப்பட்டது.

தென்னிந்தியாவில் இருந்து யாழ். குடாநாட்டுக்குப் போதைப்பொருள்கள் கடத்தப்படுகின்றன. கடத்தல் மட்டுமல்லாமல், போதைப் பொருள் வர்த்தகமும் இங்கு இடம்பெற்று வருகின்றது. இந்த வர்த்தகம் தற்போது, மாதகல் மற்றும் பருத்தித்துறை கடற்கரைப் பிரதேசங்களை நோக்கி நகர்த்தப்பட்டிருக்கின்றது. கடலோரப் பிரதேசங்களில் அண்மைக்காலமாக பெருந்தொகையான கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது. பல சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து வருகின்றனர். இங்கு நடைபெறும் போதைப் பொருள் கடத்தல் மற்றும் வர்த்தகத்தில், முக்கியமாக 10 வீதமான கஞ்சா மட்டுமே, யாழ். குடாநாட்டுக்குள் விடப்படுகின்றது. மிகுதி 90 வீதமான கஞ்சா யாழ்ப்பாணத்தில் இருந்து தென்னிலங்கைக்குக் கடத்தப்படுகின்றது.

இந்த போதைப்பொருள் கடத்தலையும் வர்த்தகத்தையும் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமானால், நெடுந்தீவில் இருந்து மன்னார் வளைகுடா வரையில் கடற்படையினரின் ரோந்து அதிகரிக்கப்பட்டு போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடும் படகுகளை கடலில் வைத்து கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

வடபிராந்திய கடற்படைத் தளபதிக்கு இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என நீதிபதி இளஞ்செழியன், ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட வட பிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் பியால் டி சில்வா, சட்டம் ஒழுங்கு மற்றும் தென்பகுதி அபிவிருத்திக்கான அமைச்சர் சாகல ரட்நாயக்க, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, யாழ். மாவட்டத்துக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன ஆகியோரைத் தன்னிடத்தில் அழைத்து, நீதிபதி இளஞ்செழியன் முன்வைத்த கோரிக்கைகள் பற்றி ஆராயப்பட்டன.

குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகக் காணப்பட்டவர்களுக்கு நீதிமன்றங்கள் கடும் தண்டனைகளை வழங்கி வருகின்றன. இதனால் யாழ். குடாநாட்டில் குற்றச்செயல்கள் குறைவடைந்து தற்போது அமைதி நிலவுகின்றது. அத்துடன் யாழ். குடாநாட்டில் போதைப் பொருள் வியாபாரம் மற்றும் கடத்தல் செற்பாடுகளுக்கு மிக விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என நீதிபதி இளஞ்செழியன் ஜனாதிபதியிடம் உறுதியளித்தார்.

போதைப் பொருள் கடத்தல் விடயத்தில் கடற்படையினர் விழிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். சிறப்பு அதிரடிப்படை, பொலிஸ் படை என்பவற்றுடன் இணைந்து கடற்படையினர் கடலோரப் பிரதேசங்களில் கூட்டு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு, அண்மைக்காலமாக பெருந்தொகையான கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டிருக்கின்றது. அவற்றைக் கடத்தி வந்தவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று வட பிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் பியால் டி சில்வா, ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இறுதியில் நெடுந்தீவில் இருந்து மன்னார் வளைகுடா வரையிலான கடற்பிரதேசத்தில் கடற்படையின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும் என்றும் ஜனாதிபதி நடத்திய இந்தக் கலந்தாலோசனையின்போது வட பிராந்திய கடற்படைத் தளபதி உறுதியளித்தார். (வ-4)

# முள்ளந்தண்டு பாதித்தவர்களுக்கு நேற்று சிறப்பு மருத்துவ சிகிச்சை

யாழ்ப்பாணம், செப். 12

முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களுக்குத் தேவையான மருத்துவ பொருள்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம் பெற்றது.

முள்ளந்தண்டுவடம் பாதிப்புற்றோருக்கு உதவும் உயிரிழை அமைப்பும், யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையும் இணைந்து மேற்கொண்ட இந்தச் சிறப்பு மருத்துவ முகாமில் 40க்கும் அதிகமான முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்கள் பயனடைந்தார்கள்.

முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு குருதிப்பரிசோதனை, சலப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், நோய்த்தாக்கத்துக்கு உள்ளானவர்களுக்கு தொடர்ந்து மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக ஏற்பாடும் செய்யப்பட்டது. (வ-ரி7)

வேலை ஆள் தேவை
யாழ். நகரை அண்மித்த இடத்தில்
இயங்கிவரும் பல்பொருள் வாணிப நிலையத்துக்குத்
தகுதியான வேலை ஆள் தேவை.
தொடர்புகளுக்கு - 076 7851067

தேவை
கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள
அச்சக நிறுவனமொன்றிற்கு
* வரவேற்பாளர்
* பக்க வடிவமைப்பாளர்
* தட்டெழுத்தாளர்
உடன் தேவை.
தொடர்பு: 077 1659845

அனைத்து தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கான
விசேடமானதும் அவசரமானதுமான கூட்ட அறிவித்தல்
இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கத்தினால்
13.09.2016 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு
இணுவில் பொது நூலகத்தில் தற்பொழுது நடைபெற்றுக்
கொண்டிருக்கும் தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பாக ஆராய
இருப்பதனால் சகல தொழில் நுட்ப உத்தியோகத்தர்களையும்
தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
தலைவர்
இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம்
வடமாகாணம்

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 11.09.2016 | வெற்றி வாரம் 2029 | ஊதா
கும்பம்
வெற்றி இலக்கங்கள் 17 37 45 59
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 30,93,780 /-

Galaxy Star
வெற்றி வாரம் 091 | திகதி 11.09.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
07 18 26 39 52
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,464,180/-

யாழ்ப்பாணக்கல்லூரி
தமிழ் மன்றம் நடத்தும்
பாரதி விழா
காலம் - 13.09.2016 செவ்வாய்க்கிழமை
நேரம் - 10.00 மணி
இடம் - ஒட்லி மண்டபம்
பிரதம விருந்தினர் -
கவிஞர்.சோ. பத்மநாதன்
(ஓய்வு நிலை அதிபர்
ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, பலாலி)
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்
அதிபர்.

J/UDUVIL GIRLS' COLLEGE
TEACHERS' FORUM
பாடசாலை நலன் மீது அக்கறை கொண்டவர்களுக்கு.
எமது ஆசிரியர் குழாம் மாணவர்களை தாக்கியதாகவும் மேலும் பல அடக்கு முறைகளை பிரயோகித்ததாகவும் சிலர் உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிடுவதையிட்டு மனம் வருந்துகிறோம். இவ்விதமான எந்தவித சம்பவங்களும் இடம் பெறவில்லை என்பதை நாம் அனைவருக்கும் வெளிப்படுத்தி நிற்கிறோம்.
தலைவர். செயலாளர்.

இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான
அழகுக்கலை கல்லூரி
Olialankan Studio British College of Beauty Studies
இணைந்து நடத்தும் பெண்களுக்கு பொருத்தமான துறைசார் பாடநெறிகள்
*தையல்கலை, *அழகுக்கலை, *கேக்ஐசிங்,
*கணினி *ஆங்கிலம் ஆகிய பாடநெறிகளும்
நடைபெறுகின்றன.
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க
பயிற்சி வகுப்புக்களின் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.
குறிப்பிட்ட மாணவர்களே சேர்த்துக் கொள்ளப்படுவர்.
பலாலி வீதி, திருநெல்வேலி
சந்தி, யாழ்ப்பாணம். 076 7011645
கஸ்தூரியார் றோட்
(உதயன் பணிமனை அருகில்) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏகாதசி விரத பூசை

நாகேஸ்வரம் அளவெட்டி மேற்கு ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று திங்கட்கிழமை ஏகாதசி விரத பூசை இடம்பெறும். காலை 7 மணிக்கு விடே அபிசேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகும். காலை 9 மணிக்கு சமய நிகழ்வுகள் இடம் பெறும். முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீமத் நாராயண சுவாமி ஸ்ரீதேவி பூமாதேவி புடைசூழ அலங்காரத் தண்டிகையில் வீதியுலா எழுந்தருளுவார்.
நண்பகல் 12மணிக்கு அடியார்களுக்கான மகேஸ்வர பூசை நடைபெறும். (ந-160)

யாழ்.மெடி கெயார்
ஆனைப்பந்தி சந்தி, பருத்தித்துறை வீதி
(அம்பாள் பேக்கரி முன்பாக)
வைத்திய ஆலோசனை, பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள்
பார்வையிடும் நேரம்
காலை - 7.00 - 8.00, மாலை - 4.00 - 10.00
ஞாயிறு - 8.00- 11.00 / 4.00 - 10.00

சுகாதார துறையில் இணைந்து கொள்வதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம் உலக அங்கீகாரம் பெற்ற தொழில்சார் பயிற்சி பாடநெறிகள்


Apply with G.C.E.(O/L).
Course fee starts from 8000 AUD$
Pathway to be a Qualified Nurse at
JTI
Job Training Institute
யாழ்ப்பாணத்தில்
Sep 14th
Tilko City Hotel
கல்லூரி பிரதிநிதிகளைச் சந்திக்கும் வாய்ப்பு யாழ்ப்பாணத்தில்
Meet JTI Marketing Manager
MS.Anne Theodore
9.00am to 3.00pm
Sep 18th Colombo The Kingsbury Hotel
Sep 16th -17th Ethics Office Negombo
அனுமதி இலவசம்
ETHICS INTERNATIONAL
No. 28, 2nd Floor, Keells Super Building, Colombo Road, Negombo.
Hot Line 0773 849399
Jaffna - 077 250 3598

BM. Naash Enterprises இன்
இனிய ஹஜ்ஜி பெருநாள் நல்வாழ்த்துக்கள்
தீபாவளி வெளியீடு
தனுஷ், த்ரிஷா, ஷாமலி நடித்த


பொங்கல் வெளியீடு
இளையதளபதி விஜய், கீர்த்தி சுரேஷ் நடித்த


Special Show - 075 7090251



தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் சப்பைரதத் திருவிழா நேற்று இடம்பெற்றது. இதன்போது அம்மன் சப்பைரதத்தில் எழுந் தருளி வீதி உலா வந்தார்.

## மின்தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், செப்.12
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் மறவன் புலோ கேரதீவு வீதி, கோகிலாக் கண்டி, காளிகோயிலடி, வதிரி, இரும்புமதவடி, தேவரையாளி, திக்கம், சக்களாவத்தை, சித்தி விநாயகர்,மனோகரரா ஆகிய இடங்களில் மின் தடைப்படும். வவுனியாவில் குருமன்காடு சந்தியிலிருந்து குருமன்காடு பிள்ளையார் கோயில் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும். (ந-[illegible])

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் பகிரங்க பிஸ்கால் ஏல விற்பனை

சிவகுமாரன் சிவசங்கர்
சோதி வேம்படி ஒழுங்கை,
மானிப்பாய்.
வழக்காளி
எதிராக
வழக்கு இலக்கம் .ஈடு/183/2014
01.கந்தசாமி ரகுநாதனும்
02.பெண் மணிமேகலாவும் இருவரும்
ஆனந்தா வீதி, மானிப்பாய்.
எதிராளிகள்.

2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி இந்நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளையின்படி மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பிஸ்காலாகிய திருமதி.ஆ. நந்தினிதேவி ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும் எனக்களிக்கப்பட்ட இவ் விற்பனை அதிகாரத்திற்கமைவாகவும் இவ் விற்பனையை நடாத்த மன்று நியமித்துள்ளதால் இதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனத்தை குறித்த ஆனைக்கோட்டையில் உள்ள "புளியன் கன்றடியுளும் நாவற்புலமும் " நில.பர.குளி 5.61 விஸ்தீரணமுள்ள ஆதனத்தில் நின்று 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகிறேன். எதிராளிகள் வழக்காளிக்கு ரூபா 18.93.000/= வும் வழக்குச் செலவும் கொடுக்க வேண்டியுள்ளது.

### ஆதன அட்டவணை.

வடமாகணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டையிறை: சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவு வலி தென் மேற்கு பிரதேசசபை மானிப்பாய் கிராம சேவகர் பிரிவு J/133 "புளியன்கன்றடியும் நாவற்புலமும்" நில.பர. குளி 5.61 உம் கட்டடமும் இப்பாகம் உத்தரவு பெற்ற அளவையாளர் மு.இராசையாவால் 03.11.2012 இல் அளந்து 1309 A இலக்கத்தில் தயாரித்த படத்தில் துண்டு 1, 2, 3 என காட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லை கிழக்கு றோட்டு, வடக்கு வீரேசன் சுந்தரம் பூபாலனினதும் மனைவியினதும் ஆதனம், மேற்கு மீதியாதனம், தெற்கு மீதியாதனம் இருடங்கலும்.

வாங்குற்காரன் கொள்விலையில் நாலில் ஒரு பங்கை (¼) உடன் அவ்விடத்தில் செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிகமாக செலுத்த வேண்டும்.

அரச இறை (பவுண்டேஜ்)1%
பிஸ்கால் செலவு சிவில் நடைமுறை கோவையின் படி
விளம்பரச் செலவுகளும் பிரசித்த செலவுகளும்
விற்பனை சம்பந்தமான போக்குவரத்து செலவுகள்
விற்பனை கமிசன் 2½ %
விற்பனவு ஒப்பந்தக் கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின்படி)
2016 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 09ஆம் திகதி

நீதிமன்ற கட்டளைப்படி பதிவாளர்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
துன்னாலை வடக்கு புலோலி
மஹோற்சவ தற்காலிக கடை அமைத்தல் - 2016
இவ் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு கீழ் வரும் கடைகளுக்கான இட ஒதுக்கீடு எதிர்வரும் 17.09.2016 சனிக்கிழமை
முற்பகல் 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் வழங்கப்படவுள்ளன. கடைகளை ஏலத்தில் எடுப்பவர்கள் காலை 9.30 மணிக்கு சமுகமளித்து வாடகைப்பணத்தினை அன்றைய தினமே முழுமையாகச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
* ஐஸ்கிறீம் கடை
* இனிப்புக் கடை
* கச்சான் கடை
* புடைவைக் கடை
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமிகோவில்,
துன்னாலை வடக்கு, புலோலி.
021 226 3074, 021 205 6644
அறங்காவலர் சபை.

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....

யாழ். கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,
மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 18.09.2016 (ஞாயிறு)
கிழமைநாள் பிரிவுகள்: 19.09.2016 (திங்கள்)
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகள் எதுவுமின்றி இயங்கும் திருமண மண்டபங்கள்

## நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 12

திருமண மண்டபங்கள் என்ற பெயரில் இயங்கும் அடிப்படை வசதிகளற்றகட்டடங்களில்நிகழ்வுகள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சில கட்டடங்கள் உரிய முறைப்படி உள்ளூராட்சிச் சபைகளில் அனுமதி பெறாமலும், சில கட்டடங்கள் வேறு தேவைக்கெனக் கட்டியபின்னர் அந்தத் தேவைக்குப் பயன்படுத்த முடியாது என நிராகரிக்கப்பட்ட பின்னர் அவை திருமண மண்டபமாகவும் பயன்படுத்தப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

மண்டபங்களில் போதிய அளவு குடிநீர் வசதி, காற்றோட்ட வசதி, ஆண் பெண்களுக்கென தனித்தனியான கழிப்பறை வசதி என்பன இல்லாத நிலையில் சுகாதாரப் பகுதியினர் அவற்றைக் கண்டு கொள்வதில்லை என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

அண்மையில் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல் பிரகாரம் பொது நிகழ்வுகளுக்கு வரும் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தக் கூடிய வகையிலான கட்டடம் மற்றும் கழிப்பறை அமைந்திருத்தல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவை மண்டபங்களில் அமைக்கப்படாதுள்ளன. சில மண்டபங்கள் உள்ளூராட்சிச் சபையில் உரிய அனுமதி பெறாமலும் திரு மண மண்டபமாக இயங்குவது தொடர்பான பதிவு இல்லாமலும், வருடாந்த உரிமம் பெறாமலும் பொதுமக்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லாத நிலையிலும் இயங்குகின்றன.

இவ்வாறான கட்டடங்கள் தொடர்பான மேலதிக பரிசோதனைகள் உள்ளூராட்சிச் சபையாலோ அல்லது சுகாதாரப் பகுதியாலோ மேற்கொள்ளப்படுவதில்லை. இவ்வாறான கட்டடங்களில் மின் ஒழுக்குகள் உள்ளிட்ட பாதிப்புக்கள் ஏற்படின் அவற்றுக்கு யார் பொறுப்பேற்பது? தற்போது ஆலயங்கள் பலவற்றில் மடங்கள் எனக் கட்டப்பட்டு அவை தற்போது மங்கல நிகழ்வு மண்டபங்களாக மாற்றப்பட்டுள்ளன. அவற்றில் போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படுவதில்லை. கலந்து கொள்வோரும் நிகழ்வு முடிந்தால் போதும் என நினைத்து வெளியேறுகிறார்களே தவிர இவ்வாறான வசதிகள் இல்லையென்பதை உரியவர்களுக்குத் தெரிவிப்பதில்லை.

திருமண மண்டபங்களாகச் செயற்படுகின்ற கட்டடங்கள் அனைத்தும் அந்தந்த உள்ளூராட்சி சபைகளாலும், சுகாதாரப் பகுதியினராலும் கண்காணிக்கப்பட வேண்டும். இவ்வாறான குறைபாடுகள் உரிய அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டு குறைபாடுகள் காணப்படும் மண்டபங்களை மங்கல நிகழ்வுகளுக்குப் பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டும் - என்றும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

இவ்வாறான மண்டபங்கள் குறிப்பாகஎந்தப் பகுதியில் அமைந்துள்ளன என அறியத்தரப்படின் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறான கட்ட அனுமதிகளைப் பிரதேச சபையினரே வழங்குகின்றனர். கட்டங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் தாம் விசாரணை செய்து தவறாகக் கட்டப்பட்டிருப்பின் நீதி மன்ற அனுமதியுடன் உடைக்கப் படும். இந்த முறைப்பாடு தொடர் பாக அனைத்துப் பிரதேச சபைகளுக்கும் அறிவிக்கப்படும். இந்த முறைப்பாடுகள் நிவர்த்தி செய்யப்படும் - என்று வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர்தெரிவித்தார். (ற-4,ரி3)

## வீட்டுத் தோட்ட உதவிகள்

யாழ்ப்பாணம், செப். 12

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட 480 பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

28 கிராம அலுவலர் பிரிவு ரீதியாக பொருளாதார அபிவிருத்தி அலுவலர் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குப் பயன்தரும் மரங்களான மாதுளை, மா, பலா, ஜம்பு மற்றும் விதை உட்பட 07 வகையான உதவிகள் வழங்கப்படவுள்ளன. எதிர்வரும் 15ஆம் திகதி முதல் அவை வழங்கப்படும் என்று என்று பிரதேச செயலக தகவல்கள் தெரிவித்தன.

(ற-50)

மாங்கல்ய தாரண விவாஹ நிகழ்வு மாற்றம் பற்றிய
முக்கிய அறிவித்தல்

அன்புடையீர்!
எமது கனிஷ்ட புதல்வன் திருநிறைசெல்வன் நிருபசர்மா
அவர்களுக்கும், எமது ஏக புத்திரி திருநிறைசெல்வி ஜெஹானு
அவர்களுக்கும் 14.09.2016 புதன்கிழமை நடைபெற இருந்த மாங்கல்யதாரண
விவாஹ நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது.
இந் நிகழ்வானது துர்முகி வருடம் ஆவணி மாதம் 31 ஆம் நாள்
16.09.2016 வெள்ளிக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 8.22
மணிவரையுள்ள கன்னி லக்கினமும் சதய நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய
சுபமுகூர்த்த வேளையில் கோண்டாவில் சந்திக்கருகில் அமைந்துள்ள
ராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அனைத்து உறவினர்கள்,
நண்பர்கள் மற்றும் அன்புள்ளம் கொண்டவர்களுக்கும் அறியத் தந்து நிகழ்வில் கலந்து
மணமக்களை ஆசிர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாலை 6.00 மணிக்கு மணமகள் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் இடம்பெறும்.

சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள்
கௌரிபாலா - குடும்பத்தினர்
சிவன்கோயில், வல்வெட்டித்துறை.

(இரு வீட்டார் அழைப்பு)

திருமதி சிவபாதசர்மா நகுலாம்பிகை
அருளம்பலம் ஒழுங்கை,
கல்வியங்காடு, நல்லூர்.

(J.4438)(13.18)

edexcel | PEARSON | London South Bank University | University of Wolverhampton | CIOB | RICS

After A/Ls...

UGC அங்கீகாரம் கொண்ட UK Degree
பட்டப்படிப்புகளை யாழ்ப்பாணத்தில்
பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பு...

INTAKE NOW ON



BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)

ENG — ENGINEERING
Civil & Construction
Telecommunication
Electrical | Electronics

IT — COMPUTING & SYSTEM DEVELOPMENT

LLB — LAW

BM — MANAGEMENT
Business Management | Marketing
Human Resource Management

BMS — BIOMEDICAL SCIENCE
BIOTECHNOLOGY

QS — QUANTITY SURVEYING

UGC Recognized
TVEC Approved

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

JAFFNA 077 710 2131
077 960 3753
COLOMBO 077 283 4595

18 YEARS of Trust & Excellence in Higher Education

ISO 9001:2008 CERTIFIED

Jaffna Campus 16, Point Pedro Road, Jaffna.

HOTLINE : 021 2219910
Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
ஆசீர்வாதம் தோமாஸ்



தோற்றம்
17 . 03 . 1940

மறைவு
12 . 09 . 2005

உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அப்பாவே!
பதினோர் ஆண்டுகள் ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா-----
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் நினைவில்
மனைவி,பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

மெலிஞ்சிமுனை,
ஊர்காவற்றுறை.


# நெற் செய்கைக் காணி விவரம் காணி இடாப்பில் பதியப்படும்

யாழ்ப்பாணம், செப்.12

நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் அனைத்து விவசாயிகளது காணி விவரங்களும் முழுமையாகக் காணி இடாப்பில் பதியப்படவுள்ளன. விவசாயிகள் எம்மால் கோரப்படும் விவரங்களை உரிய காலத்தில் பதிவுகளை மேற்கொண்டு உதவ முன்வர வேண்டும். இவ்வாறு சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் கே.கோகுலன் தெரிவித்தார்.

நவாலி வடக்கு விவசாய சம்மேளன பெரும்போகக் கூட்டம் சம்மேளனத் தலைவர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைமை அதிகாரியாகக் கலந்து கொண்ட பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் பெரும்போகத்துக்கு வழங்கப்பட்ட மானிய உரம் போன்று இந்த வருடம் வழங்கப்படமாட்டாது. மானிய உரத்துக்குப் பதிலாக இந்த வருடம் முதல் பணம் வழங்கப்படவுள்ளது.

விவசாயிகள் புதிதாக வரும் நடைமுறைக்கு ஏற்ப எம்மால் கோரப்படும் ஆவணங்களைச் சமர்ப்பித்து உதவவும். கட்டாக்காலி கால்நடைகள் கட்டுப்படுத்தப்படும், இதை மீறுபவர்கள் மீது சட்டத்தின் முன் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

நிகழ்வில் நவாலி வடக்கு கிராம அலுவலர், கமநல சேவை நிலைய அலுவலர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வழங்கப்படும் உள்ளீடுகள், உபகரணங்கள் மற்றும் உதவித்திட்டங்கள் தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடன் அனைத்து விவசாயிகளுக்கும் தெரியப்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று விவ்சாயிகள் கூட்டத்தில் கோரிக்கை விடுத்தனர். (ற-50)


21 ஆம் ஆண்டு உன் நினைவில்



செல்வன்
சிறிஸ்கந்தராஜா
ரமேஷ்குமார்
(யாழ்.யூனியன் கல்லூரி - ஆண்டு 11 மாணவன்)

மண்ணில் மழலையாய்
12.06.1979

விண்ணில் தெய்வமாய்
12.09.1995

ஆண்டு இருபதோடொன்று
ஆகியதே உன் அழகு முகம் கண்டு
பச்சிளம் பாலகனாய் ரமேஷா உன்னைப்
பறி கொடுத்தோமே அன்று
நினைதொறும் நெகிழ்கிறதே நெஞ்சு
குடும்பத்தின் ஒளி விளக்காய் நின்று
குலம் சிறக்க வாழ்ந்திடுவாய் என்று
எண்ணியதெல்லாம் பாழாகிப் போனதே
எங்கிருந்தோ யமன் வடிவில் ஏவுகணை வந்து
எடுத்ததுவோ உன்னுயிரை அன்று

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

அப்பா, அம்மா, அக்கா,
அத்தான், அண்ணா,
தங்கை,மருமக்கள்



நீதிமானுடைய பெயர் புகழ் பெற்று விளங்கும்

ஞாபகார்த்த ஆராதனை

கடந்த 08.08.2016
திங்கட்கிழமை அன்று
கர்த்தருக்குள் நித்திரையடைந்த
எங்கள் குடும்பத்தலைவர்
அமரர்

பற்குணராஜா
பாலமுருகன்
(குகன்)



(அல்பா மிக்சர் உரிமையாளர்)

அவர்களின் நினைவாக இன்று (12.09.2016)
திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 12
மணியளவில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து
கொள்ளுமாறு அன்பாய் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட அனைவரும்
இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அல்பா மிக்சர்
பக்கஸ் லேன், உடுவில் வீதி, மானிப்பாய்.

குடும்பத்தினர்.


## தாயும் மகளும் மட்டக்களப்பில் கொலை

கொழும்பு, செப். 12

மட்டக்களப்பு ஏறாவூர் நகரில் தாயும் மகளும் நேற்று முன்தினம் இரவு கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

முகாந்திரம் வீதி, முதலாவது ஒழுங்கையில் உள்ள வீட்டில் கொலை இடம்பெற்றது. நூர்முஹம்மது சித்தி ஜனீரா (வயது-55) மற்றும் அவரது மகளான ஜனீரா பானு மாஹிர் (வயது- 34) ஆகியோரே கொலை செய்யப்பட்டனர். வீட்டின் கூரையைக் கழற்றி வீட்டுக்குள் நுழைந்துள்ள இனந்தெரியாத நபர்களே கொலையைச் செய்துள்ளனர் என்று முதற்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இது தொடர்புடைய மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-4)




அமரர் திரு சின்னத்துரை மனோகரன்

திதி ஆவணி மாதவளர்பிறை. ஏகாதசி. 12.09.2016

தோற்றம்
06 . 06 . 1944

மறைவு
25 . 08 . 2015

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அணையா நெருப்பாய்..................................

இன்று கண்டதும்
நேற்று நிகழ்ந்ததும்
காலவெளிகளைத் தாண்டி
நாளையும்
எம்மை வலிகளுக்குள்
சிதறிச்செல்லத்தான்
நீ
மீளாத்துயில் கொண்டாயோ -
உன் சுற்றம்
பெரிதென்றும்
உயர்வென்றும் தான்
ஆலவிருட்சமென
காக்க காத்திருந்த
உன்
உடன் பிறப்புக்களை மறந்திருந்தாயோ -
பாசப்போலிகளின் பெருவெறுப்பில்
கரைந்தழிந்தாயே தம்பி
வீழ் மீனாய் நாம்
நெஞ்செரிந்து போனோமடா -
உருவற்ற தொன்றான
உன்நினைவுகள் கடக்கவியலாதபடி "எமக்குள்
புகைந்து புகைந்து
சோகத்தை விசிறிக்கொண்டேயிருக்கிறதடா

[illegible] இறைஞ்சி நிற்கும், சகோதர சகோதரிகள்.
தகவல்: திருமதி சந்திரா கணபதிப்பிள்ளை


## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் செப். 12

இராசையா சிறிதரன் தொகுத்து வெளியிடும் கிருஷ்ணாமிர்தம் நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ். வண்ணை வேங்கடேசப் பெருமாள் கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நூலின் முதற் பிரதியை இ.ரமணீதரக் குருக்கள் வெளியிடுவார். (ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் தலைவிதியை நிர்ணயித்த சிறப்புமிக்க இடம் வட்டுக்கோட்டை

## வட்டு. இந்துக் கல்லூரியில் தெரிவித்தார் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன்



யாழ்ப்பாணம், செப். 12
வட்டுகோட்டை என்பது ஒரு சாதாரண இடம் அல்ல. 1976 ஆம் ஆண்டு இந்த நாட்டின் தமிழர்களுடைய தலைவிதியை நிர்ணயித்த இடம். இங்கு எடுத்த தீர்மானம் தான் இன்று தமிழர்களுடைய தலை விதியைத் தீர்மானித்துள்ளது.

இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற இரண்டு மாடி கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்டு இராஜாங்க அமைச்சர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

புதிய அரசின் 100நாள் வேலைத்திட்டத்துக்காக நான் முதன்முதலாக இந்தப் பாடசாலைக்கு வரும் போது இந்த மாணவர்கள் நிலத்திலே பாய் போட்டு அமர்ந்திருந்ததைப் பார்த்தேன். அப்போது என்னுடன் நாடாளுமன்ற உறுப்பினர். ஈ.சரவணபவனும் வந்திருந்தார். மாணவர்களுடைய நிலைமையைப்பார்த்து அவர்களுக்கு இந்தப் பகுதியிலே நல்ல கட்டம் ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டும் அல்லது மண்டபம் ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று எண்ணினேன்.

அந்த நேரத்திலேதான் பாடசாலைக்கு கட்டடம் ஒன்றை அமைத்துத் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் என்னிடம் கேட்டுகொண்டார். ஆகவே இந்தக் கட்டடத்தை அமைப்பதிலே நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியுடன் இருந்தார். அவரது வேண்டுகோளுக்கு இணங்க இந்தக் கட்டடத்தை அமைப்பதற்குரிய நடவடிக்கையை அமைச்சு மேற் கொண்டுள்ளது. அதற்கு அப்பால் இந்தப் பாடசாலையின் அதிபர் இன்னுமொரு விடயத்தைகையாண்டுள்ளார். எங்கே சொன்னால் அது நன்றாக உறைக்குமோ அங்கே சொல்லியிருக்கின்றார். திருமதி இராதாகிருஷ்ணனிடம் கூறியுள்ளார்.

சரவணபவன் என்னை நாடாளுமன்றத்திலே அல்லது கூட்டங்களிலே கண்டு எந்த நேரமும் நச்சரிப்பார். அவர்களுடைய பாடசாலைக்கு ஒரு கட்டடத்தைஅமைத்துக்கொடுத்து விடுங்கள். அவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள் என்று- அவருக்கு இந்தப் பாடசாலையில் உள்ள பிரியம் காரணமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் இன்று இந்தக் கட்டடம் செயல் வடிவமாகின்றது.

பொதுவாக மாகாண பாடசாலைகளுக்கு தேசிய அரசிடம் இருந்து நேரடியாக நிதி ஒதுக்கப்படுவது கிடையாது. அவற்றுக்கான நிதி மாகாண அமைச்சினூடாகவே ஒதுக்கப்படுகின்றது. ஆனால், இங்கு இவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு நாங்கள் எங்களுடைய அத்தியட்சகர் மருத்துவர் அபயசுந்தர மூலமாக இந்தப் பாடசாலைக்கு இரண்டு மாடிக் கட்டடம் அமைப்பதற்கு நேரடியாகநிதியை வழங்கியுள்ளோம். நாடாளுமன்றஉறுப்பினர்சரவணபவன் கூறியதைப்போன்று, யாழ். மத்தியகல்லூரி, இந்து கல்லூரி போன்ற பாடசாலைகளுக்குஒப்பானஒருபாடசாலையாக இந்தப் பாடசாலை அமையும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடுகளும் இல்லை.

எங்களுடைய கல்வி அமைச்சு பல்வேறு வகைகளிலே பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இந்த வருடத்திலே அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலைத் திட்டத்தின் மூலம் வடக்கு மாகாணத்துக்கு 4 ஆயிரத்து 100 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் ஆயிரம் மில்லியன் ரூபா இங்குள்ள தேசிய பாடசாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பெரியளவிலான நிதி புதிய அரசினூடாக உங்களுடைய பாடசாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் விக்ரோறியக் கல்லூரி, பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை, சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி என மூன்று பாடசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் நேற்று முன்தினம் என்னை அழைத்துச்சென்றார். அவர்களுடைய பிரச்சினைகளையும் எடுத்துக் கூறினார். வட்டுகோட்டை என்பது ஒரு சாதாரண இடம் அல்ல. இங்கு எடுத்த தீர்மானம் தான் இன்று தமிழர்களுடைய தலை விதியை தீர்மானித்துள்ளது. அந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மெய்கண்டான் பாடசாலையின் மண்டபத்தை எந்தக் காரணம் கொண்டும் அழிக்க கூடாது என்பதை கூறிவைக்க விரும்புகின்றேன்.

அது எமது வரலாற்று பொக்கிசமானது. இந்தக் கட்டடத்தை பாதுகாப்பதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்குபக்கத்திலே இன்னுமொரு கட்டடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நாங்கள் கூறியிருக்கின்றோம்- என்றார். (ற-21)

## கூட்டுறவாளர் தின விழாவும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், செப்.12
வடமாகாணபனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்திய 94 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவும், கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் சனிக்கிழமை சமாச மண்டபத்தில் நடைபெற்றது.

சமாசத் தலைவர் எஸ்.கணேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ. ஐங்கரநேசன், யாழ். மாவட்டச்செயலர் நா.வேதநாயகன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

2015 ஆம் ஆண்டில் சிறந்த அங்கத்தவர்கள், பணியாளர்கள் மற்றும் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள், உயர்கல்வி வாய்ப்புப் பெற்ற மாணவர்கள் போன்றோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன. 2015 ஆம் ஆண்டில் சிறந்த முறையில் இயங்கிய பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவு செய்யப் பட்டுக் கௌரவிக்கப்பட்டன. கடந்த காலங்களில் சங்கங்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்றி ஓய்வுபெற்ற சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர் பாராட்டுப் பெற்றனர்.

இந்தக் கூட்டுறவாளர் தின நிகழ்வில் சங்கங்களின் தலைவர்கள், பணியாளர்கள், உறுப்பினர்கள், சமாசப் பணியாளர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (ற-17)

# தமிழரசுக் கட்சியின் அலுவலகம் அம்பாறையில் நேற்றுத் திறப்பு

அம்பாறை, செப். 12
இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்டத்துக்கான தலைமைக் காரியாலயம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த தலைமைகாரியாலயம், அக்கரைப்பற்று - ஆலையடிவேம்பு பகுதியில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு தமிழரசுக் கட்சியின் சம்மாந்துறை தொகுதித் தலைவரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான தவராசா கலையரசன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம், நிர்வாகப் பொருளாளர் சபாபதிப்பிள்ளை மற்றும் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்




கள், தொண்டர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். நிகழ்வின் போது வறுமைக் கோட்டின் கீழ் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மடிக் கணினிகளும் வழங்கி வைக்கப்பட்டன. (வ-21)

# விபத்தில் பெண்கள் இருவர் படுகாயம்



கிளிநொச்சியில் ஏற்பட்ட விபத்து ஒன்றில் இரண்டு பெண் கள் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்திய சாலையில் சேர்க் கப்பட்டனர். குறித்த இருவரும் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுபவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. விபத்து நேற்று முன்தினம் கிளிநொச்சி - முரசுமோட்டை ஏ-35 வீதியில் இடம்பெற்றது. உழவனூர் பகுதியைச் சேர்ந்த பா.நிதர்சினி (வயது -25), நா.ஜெகதீஸ்வரி (வயது -32) ஆகிய இரு வருமே படுகாயமடைந் தனர். கிளிநொச்சி - பரந்தனில் இருந்து புளியம்பொக்கணை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை எதிரே வந்த கார் மோதியது என்று ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது என கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த இரு பெண்களும் உடனடியாக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மேலதிக விசாரணை கள் நடத்தப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவகற்றும் டிராக்டர்களில் இருந்து விழும் கழிவுகளால் அசௌகரியம்

## கரவெட்டிப் பிரதேச சபை மீது மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 12

கரவெட்டிப் பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் கழிவகற்றல் செயற்பாடுகளின்போது டிராக்டர்கள் மூலம் எடுத்துச் செல்லப்படும் கழிவுகள் உரிய முறையில் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்படுவதில்லை. கழிவுகள் வீதிகளில் கொட்டப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

விக்கினேஸ்வராக் கல்லூரி வீதி ஓரங்களையும், கரவெட்டி தெற்கு, கரவெட்டி மேற்கு ஆகிய கிராமங்களையும் டிராக்டர்களில் இருந்துவிழும்கழிவுகள்கொண்ட உரப்பை மூடைகள் அசுத்தப்படுத்துகின்றன என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பாக அண்மையில் நடைபெற்ற சனசமூக நிலையத் தலைவர், செயலாளர் கூட்டத்தில்- பல சனசமூக நிலைய தலைவர்களால் இந்த விடயம் குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டது.

மத்தொனி கிராம எல்லையில் குப்பை கொட்டுவதை நிறுத்தல் வேண்டும் எனவும், வீடுகள், சந்திகளில் கழிவு உரப்பைகள் போடுவது நிறுத்தப்பட வேண்டும்-மூடப்பட்ட வாகனங்களில் குப்பை ஏற்றிச் செல்ல வேண்டும்-கழிவகற்றல் தொடர்பாக கண்காணிப்பதற்கு சுகாதார மேற்பார்வையாளரை நியமிக்க வேண்டும் என்ற விடயங்கள் முன்வைக்கப்பட்டன. பிரதேச சபை செயலாளர் இது தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)

# இருபாலை கிழக்குக்கு தண்ணீர் விநியோகிக்க புதிய நீர்த்தாங்கி

## வலி.கிழக்குப் பிரதேச சபை அமைக்கின்றது

அச்சுவேலி, செப்.12

இருபாலை கிழக்குப் பகுதி, குடி தண்ணீர் விநியோகத்துக்கு நீர்த்தாங்கி மூலம் குடிதண்ணீர் விநியோகிப்பதற்கான 73 இலட்சம் ரூபா செலவில் வலி.கிழக்குப் பிரதேசசபையால் நீர்த்தாங்கி நிர்மாணிக்கப்படுகின்றது. புதிய நீர்த்தாங்கி நிர்மாணிப்பு வேலைகள் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு அருகில் உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் நீர்த்தாங்கி நிர்மாணிக்கப்படுகிறது.

இருபாலை கிழக்குப் பகுதி, குடி தண்ணீர் வசதி குறைவான பகுதியாக இருக்கின்றமையால் வலி.கிழக்குப் பிரதேச சபை பவுஸர் மூலம் நீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றது.

பிரதேச சபையால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படும் குடிதண்ணீர் போதாமல் இருப்பதாகவும் மாரிகாலம் மற்றும் பவுஸர் பழுதடைந்த வேளைகளில் மக்கள் குடிதண்ணீருக்கு அலைய வேண்டியுள்ளது என்றும்- தமக்கு குழாய் இணைப்பு மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்யவேண்டும் என பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

பொதுமக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு, வடக்கு மாகாணசபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதி மூலம் குடி தண்ணீர் விநியோகத்துக்கான நீர்த்தாங்கி நிர்மாணிக்கப்படுகின்றது. வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் யு.ஜெலீபன் தெரிவித்ததாவது:

இருபாலை கிழக்குப் பகுதி குடி தண்ணீர் விநியோகத்துக்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இருபாலை கோண்டாவில் வீதியில், இருபாலையில் நீர்த்தாங்கி நிர்மாணிக்கப்பட்டு ஆழ் துளைக் கிணறுமூலம்நீர்த்தாங்கிக்கான குடிதண்ணீர் நிரப்பப்பட்டு குழாய் இணைப்பு மூலம் குடி தண்ணீர் விநியோகம் செய்யப்படவுள்ளது- என்றார். (ற-11)

# அனுமதி வழங்கிய வயல்களில் விவசாயம் செய்வதற்கு தடை

## வன வளத் திணைக்களத்தினர் மீது துவரங்குளம் பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, செப். 12

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவின் துவரங்குளம் பகுதியில் பிரதேச செயலகம் அனுமதி (பொமிற்) வழங்கிய வயல் நிலங்களில் விவசாயம் செய்ய வன வளத் திணைக்களம் தடை விதிக்கின்றது.

இவ்வாறு பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் போருக்கு முன்னர் விவசாயம் புரிந்த நிலங்களுக்கு நீண்ட காலம் பதிவு செய்து- காத்திருந்து–அனுமதிப் பத்திரங்கள் பிரதேச செயலாளரால் தற்போது வழங்கப்பட்டுள்ளன. குடும்பத்துக்குத் தலா 2 ஏக்கர் என்ற ரீதியில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

> “58 குடும்பங்களுக்குத் தலா 2 ஏக்கர் நிலம் வீதம் வழங்கப்பட்டு, அதன் உரிமையாளர்கள் விவசாயம் செய்தனர். இந்த நிலங்களுக்கான அனுமதி பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.”

இந்தக் காணிகளில் போருக்கு முன்பும் – பின்னரும் விவசாயம் மேற்கொண்ட நிலையில், தற்போது வன வளத் திணைக்கள அதிகாரிகள், விவசாயிகள் அந்தப் பகுதிக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கின்றனர். எமது வாழ்வாதாரத்துக்கு உதவ முன்வரவேண்டும்- என்றனர்.

குறித்த பிரதேசத்தில் 58 குடும்பங்களுக்குத் தலா 2 ஏக்கர் நிலம் வீதம் வழங்கப்பட்டு அதன் உரிமையாளர்கள் விவசாயம் செய்தனர். இந்த நிலங்களுக்கான அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

1998ஆம் ஆண்டு ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்ததால் அங்கு காட்டு மரங்கள் வளர்ந்துள்ளன. அதனை தற்போது வனவள அதிகாரிகள் உரிமை கோருகின்றனர். இந்தப் பகுதியை மக்களுக்கே வழங்கும் வகையில் குறித்த நிலங்களைவிடுவிக்குமாறுகோரியுள்ளோம்- என்று மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ற-101)

# வடக்கு கல்வி அமைச்சுக்கான நிதி புத்தளம் பாடசாலைக்கு ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், செப். 12

'அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் அமைச்சர் ஒருவரின் பெயரில் புத்தளம் மாவட்டத்திலுள்ள பாடசாலை அபிவிருத்திக்கும் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆரம்பக் கல்வி கற்றல் வள நிலைய அமைப்பின் கீழ் குறித்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு குறித்த பணிக்கான கட்டடவேலை கூறுவிலை கோரலும் கடந்த 6 ஆம் திகதி பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அந்தப் பாடசாலைக்கு வட மாகாண நிதி தொடர்ந்தும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது. வட மாகாணத்தின் குறித்த பாடசாலைகள் போர்க் காலத்தில் இடம்பெயர்ந்து புத்தளத்தில் இயங்கியது. தற்போது சொந்த இடம் திரும்ப வேண்டும் அல்லது அந்த மாவட்டத்துடன் இணைய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறித்த பாடசாலைகளை புத்தளம் மாவட்டத்துடன் இணைப்பதற்கு இணங்கி அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ், புத்தளம் பகுதியில் இயங்கும் பாடசாலையையும் இணைக்க முடியாது. இது தொடர்பில் உடன் மீளாய்வு செய்யப்படும். இனிவரும் காலங்களில் வடக்கு மாகாண நிதி பிற மாவட்டத்துக்கு செலவு செய்ய முடி யாது. குறித்த பாடசாலை சொந்த இடம் திரும்பினால் மட்டுமே இது தொடர்பில் ஆராய முடியும்- என்று வடமாகாண பிரதம செயலாளர் தெரிவித்தார். (ற-4,101)

# பனம் கைப்பணி தையல் இயந்திரம் 14 பேருக்கு

யாழ்ப்பாணம், செப்.12

இந்தியாவில் இருந்து நாடு திரும்பி, மீளக்குடியமர்ந்த மக்களில் 14 பேருக்கு பனை அபிவிருத்திச் சபை பனம் கைப்பணிக்கான தையல் இயந்திரத்[illegible]தை விரைவில் வழங்கி வைக்கவுள்ளது.

14 பயனாளிகளும் சபையின் பயிற்சி நிலையத்தில், பனம் கைப்பணிப் பயிற்சியை பெற்றவர்கள் என்றும் – பனம் கைப்பணி பொருள்களை தையல் இயந்திரம் மூலம் வடிவமைக்கும் முகமாக இவை வழங்கப்படவுள்ளன–என்றும் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

35 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த இந்த தையல் இயந்திரம் மிக விரைவில் வழங்கப்படவுள்ளது. (ற-17)

# போதையை நாட்டிலிருந்து விரட்டினால் அபிவிருத்திக்குப் பெரும் நிதி கிடைக்கும்

## போதைத் தடுப்பு ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் மருத்துவர் சமந்தா சுட்டிக்காட்டு

அச்சுவேலி, செப், 12

போதையை நாட்டில் இருந்து விரட்டுவதன் மூலம் பல்வேறு பக்கவிளைவுகள், நெருக்கடிகளை தவிர்த்துக்கொள்வதோடு அதற்கு செலவு செய்யப்படும் தொகையை அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம். கடந்த வருடம் மது, புகை, போதைப் பொருள் ஆகிய மூன்றுக்கும் 360 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. போதையின் பாதிப்பை உணர்ந்தமையால்தான் ஜனாதிபதி உருவாக்கியுள்ள 14 செயலணிகளில் போதை தடுப்பு செயலணியும் ஒன்றாக இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கூறினார் போதைத் தடுப்பு ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் மருத்துவர் எஸ்.சமந்தா.

வலி.கிழக்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட போதையில் இருந்து விடுபட்ட நாடு விழிப்புணர்வு நிகழ்வு இருபாலையில் நடைபெற்றது.

இருபாலைச் சந்தியில் இருந்து பதாகைகள், கோசங்களுடன் ஆரம்பித்த ஊர்வலம் கோப்பாய் ஆசிரிய கலா சாலையை சென்றடைந்தது. அதைத் தொடர்ந்து கருத்தரங்கும் நடைபெற்றது.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெற்ற க்ருத்தரங்கில் கலந்து கொண்டு மருத்துவர் சமந்தா உரையாற்றினார். அதில் அவர் தெரிவித்ததாவது:

மது, புகை, போதைப்பொருள் உள்ளிட்ட போதைப் பாவனை இலங்கையை அச்சுறுத்திக் கொண்டு இருக்கின்றது. இதன் தாக்கத்தை உணர்ந்தமையால்தான், ஜனாதிபதி தான் பதவி ஏற்றதும் உருவாக்கிய 14 செயலணிகளில் ஒன்றாகப் போதைத் தடுப்பு செயலணியையும் உருவாக்கினார்.

போதைப் பொருளைப் பயன்படுத்துபவர் நோயாளியாவதோடு அவரது குடும்பமும் பாதிப்புக்கு உள்ளாகின்றது. மது, புகை, போதைப் பொருள் ஆகியவற்றுக்கு 2015 ஆம் ஆண்டில் தலா ஒவ்வொன்றுக்கும் 120 பில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் மொத்தம் 360 பில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. மாத்தறையில் இருந்து கொழும்பு வரை அதிவேக பாதை அமைப்பதற்கு செலவு 108 பில்லியன் ரூபாவே. 360 பில்லியன் ரூபாவைப் பயன்படுத்தி அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்க முடியும்.

போதைத்தடுப்பு, தனிமனிதன் குடும்பம் கிராமம், பிரதேசம், மாவட்டம், மாகாணம் நாடு என்ற வகை இல்லாமல் ஒழிக்கப்பட வேண்டும். போதையற்ற தேசம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும். எல்லோரும் ஒன்றுபட்டு இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்– என்றார்.

கோப்பாய்ப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் கே.மகேந்திரன், எஸ்.திலகரத்தினா உட்படப் பலர் உரையாற்றினர். போதைத் தடுப்பை வலியுறுத்தும் வகையில் கோப்பாய் பிரதேச செம்முகம் ஆற்றுகை குழுவின் புதுவாழ்வு நாடகமும் மேடையேற்றப்பட்டது. (ற-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையில் வாகனம் செலுத்திய பத்து பேர் தருமபுரத்தில் சிக்கினர்

## பொலிஸாரின் விசேட வீதிச் சோதனையில்

கிளிநொச்சி, செப்.12
அனுமதிப்பத்திரம் மற்றும் தலைகவசம் இன்றி மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய குற்றச்சாட்டில் கடந்த மூன்று நாள் களுக்குள் 10 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களிடம் இருந்து 10 மோட்டார் சைக்கிள்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

இவ்வாறு தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் கடந்த கடந்த மூன்று நாள்களாக நடத்தப்பட்ட விசேட வீதிச் சோதனையில் மது போதையில் வாகனம் செலுத்திய குறித்த 10 பேரும் கைது செய்யப்பட்டனர்.
வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்குடன் தருமபுரம் பொலிஸாரால் இந்த விசேட வீதிச் சோதனைகள் நடத்தப்பட்டன.
கைது செய்யப்பட்டவர்கள் வாகன அனுமதிப் பத்திரம், மற்றும் தலைகவசம் இன்றிப் பயணித்த குற்றத்திலும் ஈடுபட்டார்கள். அவர்கள் செலுத்திய 10 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்களில் சிலர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை 15 நாள்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறு உத்தரவிட்ட நீதிமன்று தண்டமும் விதித்தது - என்றார். (ற-21,ரி3)

# டெங்குக் கட்டுப்பாட்டு திட்டமிடல் கலந்துரையாடல்

சாவகச்சேரி செப். 12
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்குத் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அடுத்து சுகாதார திணைக்களத்துடன் இணைந்து சிறப்பு டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டத்தை முன்னெடுக்க நகர சபையினர் ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளனர்.
சபை எல்லைக்குட்பட்ட சாவகச்சேரி நகரம், கோயிற்குடியிருப்பு, அல்லாரை, மீசாலை கிழக்கு, கல்வயல், நுணாவில் கிழக்கு, நுணாவில் மேற்கு சங்கத்தானை, மீசாலை மேற்கு, சாவகச்சேரி வடக்கு, மண்டுவில் போன்ற பிரிவுகளில் பலர் டெங்குத்தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அறிக்கை தாக்கல் செய்ததை அடுத்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
சிறப்பு டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக சபை எல்லைக்குட்பட்ட மக்களிடம் ஆலோசனைகள் பெற்றுக் கொள்வதற்கான டெங்குக்கட்டுப்பாட்டு திட்டமிடல் கலந்துரையாடல் நாளை 13ஆம் திகதி பி.ப 2 மணிக்கு நகரசபை மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.
கலந்துரையாடலில் சபை எல்லைக்குட்பட்ட கிராம அலுவலர்கள், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், கிராம மட்ட கட்டுப்பாட்டுக் குழுக்கள், சனசமூக நிலையப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்றோரைக் கலந்து கொள்ளுமாறு நகர சபைச் செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார். (ற-9)

# வாழைக்குலை திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப்.12
வலி.கிழக்குப் பிரதேசத்தில் உள்ள வாழைத் தோட்டங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.
தற்போது வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பைப் பயன்படுத்தி திருடர்கள் இரவு வேளைகளில் வாழைத் தோட்டங்களில் வாழைக் குலைகளைக் களவாக வெட்டிச் செல்கின்றனர்.
சிறுப்பிட்டி, நீர்வேலி, கோப்பாய், நவாலி புன்னாலைக் கட்டுவன், ஊரெழு போன்ற பகுதிகளில் உள்ள வாழைத் தோட்டங்களில் இவ்வாறு வாழைக்குலைகள் களவாடப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.
கதலி வாழைப்பழத்தின் விலை கிலோ 140 ரூபாவைத் தாண்டியுள்ளது. திருடர்கள் கதலி வாழைக் குலைகளை அதிகளவு வெட்டிச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப் பட்டது. (ற-17)

# சிராட்டிகுளம் காட்டுப் பகுதியில் அத்துமீறிய மரம் தறிப்பு அமோகம்

## உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, செப். 12
முல்லைத்தீவு சிராட்டிகுளம் பகுதிக் காடுகளில் அத்துமீறிய மரம் தறிப்புச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. உரிய அதிகாரிகள் இது குறித்துப் பாராமுகமாக இருக்கின்றனர்.
இவ்வாறு பிரதேச மக்கள் குற்றஞ் சாட்டினர்.
இதுகுறித்துத் தெரிவிக்கப்பட்டாவது:
மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் மன்னார் மாவட்ட எல்லைக் கிராமமாக விளங்கும் சிராட்டிகுளத்தில் தற்போது 46 குடும்பங்களே வசிக்கின்றன. அதைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்துவோர் சட்ட விரோதமான முறையில் மரங்களைத் தறித்து அதனை மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்கின்றனர்.
இது தொடர்பில் அதிகாரிகளுக்குப் பல முறை தெரிவித்தும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

> " மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் மன்னார் மாவட்ட எல்லைக் கிராமமாக விளங்கும் சிராட்டிகுளத்தில் தற்போது 46 குடும்பங்களே வசிக்கின்றனர். அதைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்துவோர் சட்ட விரோதமான முறையில் மரங்களைத் தறித்து அதனை மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்கின்றனர். இது தொடர்பில் அதிகாரிகளுக்குப் பல முறை தெரிவித்தும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. "

கிராமத்தில் வசிக்கும் குடும்பத்தினர் விறகுத் தேவைக்காகப் பட்ட மரங்களை எடுத்தாலே கைது செய்யும் வனத்துறை அதிகாரிகள் இது தொடர்பாகக் கண்டும் காணாமல் இருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது- என்று பிரதேச மக்கள் குறிப்பிட்டனர்.
குறித்த விடயம் தொடர்பாக பிரதேச மக்களால் எனது கவனத்துக்குப் பலமுறை கொண்டுவரப் பட்டது. மக்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக உரிய திணைக்களங்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இது வரை வனவளத் திணைக்களமோ, பொலிஸாரோ உரிய தீர்வை வழங்கியதாகத் தெரியவில்லை- என்று மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ற-101)

# பாடசாலைகளுக்கு நிகராகத் தனியார்கல்வி நிலையம் அமைப்பது அசாத்தியம்

## கிளி. தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியத் தலைவர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, செப். 12
பாடசாலைகளுக்கு நிகராகத் தனியார்கல்வி நிலையங்களில் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கரைச்சிப் பிரதேச செயலாளர் கூறுகின்றார். அது நியாயமற்றது. இதுகுறித்து அவர் மீள் பரிசீலிக்க வேண்டும். இல்லாவிட்டால் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களை மூடுவதைத் தவிர வேறு வழியில்லை.
இவ்வாறு கிளிநொச்சி தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியத் தலைவர் வடிவேல் நகுலேஸ்வரன் தெரிவித்தார். கிளிநொச்சியில் கடந்தவாரம் செய்தியாளர் சந்திப்பு நடத்தப் பட்டது. அதில் ஒன்றியத் தலைவர் தெரிவித்ததாவது:
கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர், ஒரு பாடசாலையில் இருக்கின்ற அளவு வசதிகளை தனியார் கல்வி நிலையங்கள் கொண்டிருக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கின்றார். தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறுகின்றார். அவரால் தயாரிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அடங்கியஒப்பந்தத்தைஏற்றுக்கொண்டு பதிவு செய்து உரிமம் பெற வேண்டும் என்று பல தடவைகள் கடிதம் மற்றும் நேரடியான சந்திப்புகள் மூலம் வற்புறுத்துகின்றார். நிபந்தனைகளில் பல நடைமுறைச் சாத்தியமற்றவை. அவற்றைத் தளர்த்தி எமது பிரதேசத்துக்கு ஏற்ற வகையில் விதிமுறைகளைக் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கையை செயலாளர் ஏற்றுக் கொள்வதாக இல்லை.
கிளிநொச்சியில் உள்ள தொண்ணூறு வீதமான தனியார் கல்வி நிலையங்கள் வாடகை அல்லது குத்தகைக் காணிகளில் இயங்குகின்றன. முப்பது வருடத்துக்கு மேலாக தனியார் கல்வி நிலையங்களை நடத்துகின்றோம். வெறுமனே பணத்துக்காக மட்டுமன்றி பல மாணவர்களை இலவசமாகவும், பல மாணவர்களை ஐம்பது வீத கட்டணத்திலும் அனுமதித்து கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றோம். கிளிநொச்சி மாவட்டம் கல்வி வளர்ச்சியில் இலங்கையில் இறுதி மாவட்டமாகக் காணப்படுகிறது. கல்வியைப் பொறுத்தவரை பெற்றோர்கள் தனியே பாடசாலைகளை மட்டும்நம்பித்தங்களது பிள்ளைகளைக் கற்பிப்பது கிடையாது. அவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள்.
பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறைகள் உள்ள பாடங்கள் கற்பிக்கப்படுவது இல்லை. நாங்கள் அதை நிவர்த்தி செய்கின்றோம். தனியார் கல்வி நிலையங்களை வெறும் உழைப்புக்காக நடத்தவில்லை. எங்களுக்கும் பிள்ளைகளின் கல்வியிலும் மாவட்டத்தின் கல்வியிலும் அக்கறை உண்டு. தனியார்கல்விநிலையங்களில் போதுமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தியிருக்கின்றோம். ஏற்படுத்தவும் இருக்கின்றோம். பாடசாலைகளுக்கு நிகராகக் கோருவது நியாயமற்றது. இது தவிர வேறு சில விதிமுறைகளையும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது- என்றார்.
"யாழ். மேல் நீதி மன்ற தீர்ப்பின் பிரகாரமும், பிரதேச சபையின் சட்டத்திட்டங்களுக்கு அமைவாகவும் தனியார் கல்வி நிலையங்களை விதி முறைகளுக்கு அமைவாகப் பதிவு செய்து உரிமத்தை பெற்றுக் கொள்ளுமாறு பத்திரிகைகள் ஊடாகவும் நேரடியாகவும் பல தடவைகள் கூறியிருந் தோம். 17 கல்வி நிலையங்கள் பதிவு செய்து உரிமத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்களைச் சபையிடம் சமர்பித்துள்ளன. ஏனையவற்றில் முதற்கட்டமாக சபை நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்காத ஒன்பது கல்வி நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
மிகுதி கல்வி நிலையங்கள் தொடர்பிலும் நாம் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்"- என்று கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் கம்சநாதன் தெரிவித்தார். கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களுக்கு போதுமான அளவு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டன. அதன் பின்னரே இவ்வாறான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி தனியார் நிறுவனங்களுக்கு பொது அறிவித்தல் விடுக்கப்பட்டது. பின்னர் மே மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுமதிகளை எடுக்குமாறு கடந்த மே மாதம் 3 ஆம் திகதியும் அறிவித்தல் விடுக்கப் பட்டது. ஜூலை 20ஆம் திகதி நிறுவனங்களுடனான சந்திப்பு இடம் பெற உள்ளது என்று ஜூலை 17ஆம் திகதி பத்திரிகைகளூடாக அழைப்பு விடுத்திருந்தேன். செய்திகள் பிரசுரமாகியிருந்தன. அந்த சந்திப்பில் அனைத்து நிறுவனங்களும் கலந்து கொள்ளவில்லை.
அனைவருக்கும் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. கால அவகாசம் வழங்காமல் திீர் நடவடிக்கைகளை மேற்கொண்டால் தான் தவறு. அறிவித்தல்கள் வழங்கப்பட் டன. கூட்டங்கள் இடம்பெற்றன. கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. 17 கல்வி நிலையங்கள் பதிவு செய்துஉரிமத்தைபெற்றுக்கொள்வதற்கான ஆவணங்களை சபையிடம் சமர்பித்திருக்கின்றார்கள். ஏனைய கல்வி நிலையங்களில் முதற்கட்டமாக சபை நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்காத ஒன்பது கல்வி நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல்செய்யப்பட்டுள்ளது. மிகுதிகல்விநிலையங்கள் தொடர்பிலும்நாம்சட்டநடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்- என கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் கம்சநாதன் தெரிவித்தார். (ற-21,35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்னெலிகொட தொடர்பான விசாரணைகள் முடிந்தன

## இரு வாரங்களுக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்ப்பு

கொழும்பு, செப்.12

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணைகள் நிறைவு பெற்றுள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்தது.

சந்தேகநபர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யும் வகையில் இரு வாரங்களுக்குள் விசாரணையின் இறுதி அறிக்கை சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரகீத் எக்னெலிகொடவைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எட்டு இராணுவப் புலனாய்வு உறுப்பினர்களுக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டுப் பதிவு செய்வதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன என்று மூத்த புலனாய்வு அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை ஹோமா கம நீதிவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் எக்னெலிகொட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சட்டமா அதிபர் சார்பில் சட்டத்தரணி திலீப்ப பீரிஸ், சார்ஜன் பிரேமானந்த உதல்லாகமவின் வழிகாட்டலில் எக்னெலிகொட கடத்தப்பட்டமை குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணை மூலம் தெரியவந்தது என்று குறிப்பிட்டார்.

தனியார் தொலைபேசி நிறுவனங்களிடம் இருந்து பொலிஸாரால் பெறப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் மூலம் இந்த விடயம் வெளிப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, 'ரிவிர' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் உபாலி தென்னக்கோன் 2009 ஆம் ஆண்டு கடத்தப்பட்டமை தொடர்பான வழக்கிலும் பிரதான சந்தேகநபரான சார்ஜன் பிரேமானந்த உதல்லாகம பெயரிடப்பட்டார். உதல்லாகமவை உபாலி தென்னக்கோன் அடையாளம் காட்டியுள்ளார். (ந-4)

# சர்வாதிகாரப் போக்குடன் செயற்படுகின்றது அரசு

## குமுறுகின்றார் மகிந்த

கொழும்பு, செப்.12

தற்போதைய அரசு சர்வாதிகாரப் போக்குடன் ஆட்சி செய்கின்றது. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும், தற்போது நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச குமுறியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசு தவறான தகவல்களைப் பரப்பி, ஆட்சியைக் கைப்பற்றியது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் கலைத்து, புதிய அரசியல் கட்சி உருவாக்கப்பட வேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சி யினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்வில் சிறிலங்க சுதந்திரக் கட்சியினரும் கலந்து கொள்கின்றனர். அதனால் இரு கட்சிகளையும் கலைத்து விட்டு சிறிலங்கா சுதந்திர முன்னணி என்ற பெயரில் புதிய கட்சி ஆரம்பிகப்படவுள்ளது என்று பேசப்படுகின்றது - என்றார். (ந-4)

# சு.கவுடன் இணைந்து போட்டியிட தமிழ்க் கூட்டமைப்புக்கு விருப்பம்

## மேல் மாகாண முதமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.12

எதிர்வரும் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிட விருப்பத்துடன் உள்ளது.

இவ்வாறு மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவபிரிய தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் செய்தியாளர்சந்திப்பு இடம்பெற்றது. அதில் அவர் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவை இணைத்துக் கொண்டபோது அவரை ஏன் இணைத்தீர்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் பணியாற்றுவதற்கு விருப்பத்துடன் உள்ளோம் என்றும்– அன்றைய கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையால் ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் காணப்படுகின்றன - என்றார். (ந-4)

# கடன் சுமையைக் குறைப்பதற்கு வாய்ப்பு இல்லை

## -பந்துல

கொழும்பு, செப்.12

நாட்டின் கடன் சுமையைக் குறைக்க எந்த வாய்ப்புக்களும் இல்லை என்று கூட்டு எதிரணி சாடியது.

இதுகுறித்து கூட்டு எதிரணி உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்ததாவது:

2020ஆம் ஆண்டு, நாட்டின் கடன் சுமையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். எவராவது இவ்வாறு கூறுவார்களானால் அது பொய்யான வார்த்தைகளே. கடன் சுமையைக் குறைக்க ஒரு பெரும் புதையல் கிடைக்க வேண்டும் - என்றார். (ந-4)

# சு.கவின் கொள்கைக்கு இணங்கினால் தமிழ்க் கூட்டமைப்புக் கூட்டுச் சேரலாம்

## அமைச்சர் செனவிரட்ன கூறுகின்றார்



கொழும்பு, செப்.12

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின்கொள்கைகளுக்கு உடன்பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டுச் சேருவது பிரச்சினைக்குரிய விடயமல்ல.

இவ்வாறு தெரிவித்தார் மூத்த அமைச்சர் டபிள்யூ. டீ. ஜே. செனவிரட்ன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைக்கும் என்று மேல் மாகாண முதலமைச்சர் கூறியிருந்தார்.

அது குறித்து அமைச்சர் செனவிரட்ன தெரிவித்ததாவது:

இனவாத சிந்தனைப் போக்குடைய அரசியல் கட்சிகளுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டுச் சேர்வதற்கு எந்தத் தேவையும் இல்லை. கம்மன்பில போன்றவர்களின் கருத்துக்களைப் பார்க்கும்போது நாட்டில் ஒரு போதும் நல்லிணக்கம் ஏற்படாது என்று தோன்றுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தனிப்பட்ட கலந்துரையாடல்கள் நடைபெற்றனவா என்பது குறித்து எனக்குத் தெரியாது. எனினும் சு.கவின் கொள்கைகளுக்கு உடன்பட்டு த.தே.கூ. கூட்டுச் சேர்வதாயின் வரவேற்கத்தக்கது - என்றார். (ந-4)

# திஸ்ஸ காட்டிய ஒப்பந்தம் தற்போது நடைமுறையில்

## கூட்டு எதிரணி கூறுகின்றது

கொழும்பு, செப்.12

திஸ்ஸ அத்தநாயக்கவால் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது காண்பிக்கப்பட்ட ரணில் - மைத்திரி ஒப்பந்தம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று கூட்டு எதிரணி குற்றஞ் சாட்டியது.

ஹோமாகமவில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றிய கூட்டு எதிரணி உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். திஸ்ஸ அத்தநாயக்க கூறியது உண்மையான விடயமாகும் - என்றார். (ந-4)

# தாக்குதலுடன் கைதிகளுக்கு தொடர்பு!

கொழும்பு, செப்.12

கொழும் மகசின் சிறைச்சாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் தாக்கப்பட்டமைக்கும் சிறைக் கைதிகளுக்கும் இடையே தொடர்பு இருக்கலாம் என்று சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பேச்சாளர் தூஸர உப்புல்தெனிய தெரிவித்தார்.


அவர் தெரிவித்ததாவது:

பொரளையில் சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் மீது நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டது. இது தொடர்பில் விசாரணை நடத்தப்படுகின்றது - என்றார்.

குறித்த அதிகாரி மகசின் சிறைச்சாலைக்கு முன்பாக உள்ள விகாரைக்குச் சென்று திரும்பும் போது தாக்கப்பட்டார். வெட்டுக் காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவர் சிகிச்சை பெற்று வருகின்றார். (ந-4)

# மலேசியாவுக்கான இலங்கை தூதரை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும்

## வை.கோ கோரிக்கை



கொழும்பு, செப். 12

தமிழர்களுக்கு எதிராகச் செயற்படும் மலேசியாவுக்கான இலங்கைத் தூதரை அந்த நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும்.

இவ்வாறு தமிழகத்தைச் சேர்ந்த ம.தி.மு.கட்சியின் பொதுச் செயலாளர் வை.கோ கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் அவர் அறிக்கை வெளியிட்டார்.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

இலங்கையில், இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேநடந்தபோரில்இலங்கை இராணுவத்தின் உளவுப்பிரிவு அதிகாரியாக இருந்தவர் இப்ராகிம் சகீப் அன்சர். அவர் தற்போது மலேசியாவுக்கான இலங்கை தூதராக உள்ளார். இலங்கைத் தமிழர்களுக்காக ஆதரவுக் குரல் எழுப்பும் மலேசியா வாழ் இலங்கைத் தமிழ் இளைஞர்களை விடுதலைப் புலிகள் என முத்திரை குத்தி இலங்கை அரசிடம் ஒப்படைக்கும் செயலில் அவர் ஈடுபடுகிறார்.

மலேசியாவில் கடந்தாண்டு நவம்பரில் நடந்த உலகத் தமிழர் மாநாட்டில் பங்கேற்கச் சென்ற என்னை, அங்கு வரவிடாமல் தடுப்பதற்கான முயற்சிகளிலும் இப்ராகிம் சகீப் அன்சர் ஈடுபட்டார்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக பேசுபவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகள் என்ற மாயத்தோற்றத்தை மலேசிய அரசு உருவாக்குகிறது என மலேசியாவின் பினாங்கு மாநிலத் துணை முதல்வரும், உலகத் தமிழர் மையத்தின் தலைவருமான பேராசிரியர் ராமசாமி கண்டனம் தெரிவித்தார்.

தமிழ் இனத்துக்கு எதிராகத் தொடர்ந்து செயற்பட்டு வரும் இலங்கைத் தூதர் இப்ராகிம் அன்சரை, மலேசியாவை விட்டு வெளியேற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். இதையே ம.தி.மு.கவும் வலியுறுத்துகிறது - என்றுள்ளது. (ந-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தலில் அரசுக்கு நிச்சயம் தோல்வி

## ஆரூடம் கூறுகின்றார் மகிந்த



கொழும்பு, செப். 12
எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் அரசு நிச்சயம் தோல்வியடையும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
தற்போது ஐக்கிய தேசியக் கட்சியும் இல்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இல்லை.
நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. மக்கள் கடும் விசனத்தில் உள்ளனர்.
தேர்தல் இடம்பெறுமாயின் அதில் மக்கள் தங்களின் நிலையை அரசு நன்கு உணர்த்துவர் – என்றார். (ṛ-4)




### தேவரும் வடம் பிடிப்பர்

தேர்வடம் பிடிக்கத் தேவரும் ஓடிவந்து
தெல்லியூரில் இடம் பிடிப்பர்;
திசையெட்டும் அம்பாளின் அடியவர் வந்திங்கு
துர்க்கையின் வடம் பிடிப்பர்;
ஆரிடம் என்னதான் இருந்தாலும் அடக்கமாய்
அபிசேகப் பாற்குடம் எடுப்பர்;
அழுதவர் கண்ணீர் தீர்த்தமாய்ப் பெருகிட
அம்பாளிடம் திடம் பெறுவர்.

- கே.எஸ்.சிவஞானராஜா

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரை கைது செய்ய ஆலோசனை

கொழும்பு, செப். 12
மற்றுமொரு பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரை கைது செய்வதற்குப் பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவு, சட்ட மா அதிபரிடம் ஆலோசனை கோரியுள்ளது.
புத்தளம் மூத்த பொலிஸ் அதிகாரி அலுவலக நிர்மாணத்தில் இடம்பெற்றது என்று கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் குறித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.
பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறித்தகட்டடம்அமைக்கும்காலப் பகுதியில் புத்தளம் தொகுதியின் மூத்த பொலிஸ் அதிகாரியாகக் கடமையாற்றியுள்ளார்.
தற்பொழுது குறித்த சம்பவம் தொடர்பில் அந்தக் காரியாலயத்தின் பொலிஸ் அதிகாரிகள் இருவரும், கணக்காய்வாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டு விசாரணைமேற்கொள்ளப்படுகின்றது என்றுதெரிவிக்கப்பட்டது. (ṛ-4)

## பொலிஸ் பாதுகாப்பிலிருந்த இளைஞரைக் காணவில்லை

### பெற்றோர் குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.12
ஹம்பாந்தோட்டை பதகிரிய பகுதியில் நெல் மூடைகளை திருடிய குற்றச்சாட்டில்கைது செய்யப்பட்டு ஹம்பாந்தோட்டை பொலிஸாரின் பாதுகாப்பில் இருந்த இளைஞர் ஒருவர் காணாமற் போயுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள பெற்றோர் தமது 20 வயதுடைய மகனை ஹம்பாந்தோட்டை பொலிஸாரே கைது செய்து அவர்களின் பாதுகாப்பில் வைத்திருந்தனர்.
மகன் தற்போது காணாமற் போயுள்ளார் என்று கூறுகின்றனர். இதுவரை மகன் தொடர்பில் எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. ஆணைக்குழு விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளது.
இந்த விடயம் பொலிஸாருக்குப் பெரும் சிக்கல் நிலையை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ṛ-4)




## ஐ.தே.கட்சி விழாவில் ஜனாதிபதி கலந்து கொண்டமை தவறில்லை

### அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு



கொழும்பு, செப். 12
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் பங்குகொண்டதால் சுதந்திரக் கட்சிக்கு எந்த பாதிப்பும் இல்லை. இவ்வாறு விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.
கூட்டு எதிர்க்கட்சியின் சில உறுப்பினர்கள் வெளியிட்டுள்ள கருத்து குறித்து, குருநாகலில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
2015ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதிக்கு எந்தவகையில் உதவி புரிந்தது என்பது தெரியும். இந்த நிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொண்டதில் தவறில்லை என தாம் கருதுகின்றேன்.
ஒன்றாக இணைந்து செயற்பட்டாலும், தேர்தலில் பிரிந்து தனித்தனியே போட்டியிடுவோம் –என்றார். (ṛ-4)

### சந்நிதி முருகன்

செல்வச் சந்நிதி வேலனே ஈசனே முருகா
செல்வம் தந்து காத்திடுவாய் கந்தனே வேலா
பார் போற்றும் பாலனே பார்பதி பாலா
பார்ப்பனார் சேதம் ஓதும் கார்த்திகை வேலா
அடியவர் குறைதனைப் போக்கிடும் ஈசா
அன்பர்க்கு அன்பனான அப்பனே முருகா
தந்தைக்கு உபதேசம் செய்தவா வேதா
தீர்வொன்று பெற்றிட அருள்புரி ஈசா
வேல் கொண்டு வினை தீர்க்கும் ஏந்தலே வீரா
வேண்டுவார் வேண்டுவதை ஈந்திடும் தேவா

– நா.சண்முகரத்தினம் புத்தூர்

## வயோதிபத் தாய் கடத்தப்பட்டு கொலை

பெரிய நீலாவணையில் வயோதிபத் தாய் ஒருவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என்றுபொலிஸார்தெரிவித்தனர்.
பெரிய நீலாவணை பகுதியைச் சேர்ந்த சீனித்தம்பி பத்மா (வயது – 73) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.
கடந்த இரண்டு தினங்களுக்கு முன் காணாமல் போயிருந்த அவர் பின்னர் சடலமாக மீட்டார்.
அவர் அணிந்திருந்த தங்க ஆபரணங்கள் அனைத்தும் களவாடப்பட்டுள்ளன. அதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ṛ-4)

## மத்தள விமான நிலையத்தை தனியாரிடம் வழங்க நடவடிக்கை

மத்தள விமான நிலையத்தின் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு தனியார் நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கத் தேவையான ஆரம்பக்கட்டப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய [illegible] யாகவுள்ள பல வி[illegible] கண்டறியப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.
விமான நிலையத்தின் நடவடிக்கைகளை மீண்டும் முன்கொண்டு [illegible] தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்க விலை மனு கோரப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார். (ṛ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செல்வச்சந்நிதியானுக்கு
இன்று (12.09.2016)
திங்கட்கிழமை
12 ஆம் திருவிழா
பசித்திடும் உன் பக்த கோடிகள் அனைவருக்கும்
பசிப்பிணி போக்கிடும் அன்னதானக் கந்தனே -
பன்னிரு கரத்துடன் ஆறு திருமுகங்கள் கொண்ட உனக்கு
பன்னிரண்டாம் திருவிழா இன்று
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
New V.M.K
JEWELLERY
Dealers in 22Kt.gold Jewellery
No. 80 / 03 Kasthuriar Road, Jaffna.
Tel: 021 222 2515, 021 720 1117

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜனாதிபதிவரை சென்றுள்ள உடுவில் கல்லூரி விவகாரம்

கடந்த வாரம் நாட்டில் சில முக்கிய சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. அவைகளில் நல்லவையும் உண்டு. கவலையளிப்பவைகளும் உண்டு.

எம் நாட்டின் ஜனாதிபதி - சிறுபான்மை தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவை அமோகமாகப்பெற்று பதவியில் அமர்ந்துள்ள மைத்திரிபால சிறிசேன வட பகுதிக்கு வருகை தந்து பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டமை ஒரு புறமிருக்க, யாழ்.பொதுநூலகத்துக் கருகிலுள்ள திறந்த வெளிஅரங்கில் இடம்பெற்ற போதைப் பொருள் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் வைபவத்தில் கலந்து கொண்டமை ஒரு முக்கியமான நிகழ்வு எனலாம்.

நாட்டில் போதைப்பொருள் விற்பனை மூலம் அரசுக்கு அதிக வருமானம் கிடைப்பதாகக் கூறப்படும் நிலையில், அதனை முற்றாக ஒழிப்பதற்கான நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மத்திய, மாகாண அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முப்படைகளின் அதிகாரிகள் மற்றும் மாணவ மாணவியர் அனைவரும் எழுந்து நின்று தங்கள் வலது கரங்களை நீட்டி சங்கற்பம் செய்தமையானது வரவேற்கத்தக்கது என்பதுடன் இந்தப்பிரதேசத்திலிருந்து போதைப் பொருள்கள் முற்றாக ஒழிக்கப்படுவதற்கான முக்கியமான முதல் முயற்சியென்றும் குறிப்பிடலாம். வைபவத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் வெறும் சம்பிரதாயத்துக்காக சங்கற்பம் செய்ததாக அல்லாமல் தமது தரப்பிலும் தமக்குத் தெரிந்த அளவிலும் போதைப்பொருள்கள் பாவிக்கப்படுவதைத் தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

குறிப்பாக நிகழ்வில் கலந்து கொண்ட இளைஞர்களும் மாணவ, மாணவியரும் போதைப்பொருள்கள் எம் சமூகத்தில் பயன்படுத்தப்படும் இடங்கள் ஆள்கள் மற்றும் விவரங்களைக் கண்காணித்துத் தடுக்க முற்படுவது அவசியம். தங்களால் முடியாதவிடத்து அதற்கென விருக்கும் அதிகார மையங்களின் உதவியை நாட வேண்டும்.

நாட்டில் நீதிமன்றங்களின் செயற்பாடுகள் அரசியல் தலையீடு இன்றிச் செயற்படத் தொடங்கியிருப்பதற்கான சிறந்த உதாரணமாக முன்னாள் ஜனாதிபதியின் ஆலோசகராக விளங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் கொலை வழக்கில் முன்னாள் ஜனாதிபதியின் நெருங்கிய சகாவான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா மற்றும் நால்வருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பது சுட்டிக்காட்டப் படுகின்றது. ராஜபக்ச ஆட்சி இருந்திருப்பின் நிலைமை வேறாக இருந்திருக்கும் என்று பாரத லக்ஷ்மனின் புத்திரி ஹிருணிகா உட்பட பலர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

கடந்த வாரம் நிகழ்ந்துள்ள வரவேற்புக்குரிய முக்கிய சம்பவங்களில் இதுவும் ஒன்று எனலாம்.

கடந்த வாரம் உடுவில் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவமொன்று கவலையளிப்பதாக மட்டுமல்ல, கடந்த காலத்தில் மிக உயர்ந்த கல்விசார் சமூகத்தினரை உருவாக்கித் தந்ததொரு பாடசாலையில் இவ்வாறு ஒருசம்பவம் இடம்பெற்றிருப்பது குறித்துப் பலரும் கவலை தெரிவித்துள்ளார்கள்.

அதிபர் நியமனம் தொடர்பாக எழுந்த விவகாரம் கல்லூரிக்குள்ளேயே சுமுகமாகத் தீர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

அதிருப்திக்குள்ளாகும் சிறுமியரைக் கையாளும் தகுதியும்-திறமையும் உள்ளவர்கள் அவர்களைத் துரத்தித் துரத்தி அடித்திருக்கமாட்டார்கள். அதுவும் கல்லூரி வாயில்கள் மூடியிருந்த நிலையில் பிரசன்னமாயிருந்த பொலிஸார் அசமந்தமாகக் காணப்பட்ட நிலையில் விடயம் மல்லாகம் நீதிபதிவரை சென்றது. நீதிபதி யூட்சன் தமது கடமைகளை ஒதுக்கிவிட்டு கல்லூரிக்கு வந்து அமைதியை ஏற்படுத்தியுள்ளார்.

விடயம் இப்போது ஜனாதிபதி வரைக்கும் சென்றுள்ளது. நிச்சயமாக இது குறித்து கல்லூரி நிர்வாகம் மகிழ்ச்சி கொள்ள முடியாது. கல்லூரியின் பெயருக்கு ஏற் பட்டுவிட்ட அபகீர்த்தியைப் போக்கும் மார்க்கத்தைக் கண்டறிய வேண்டும். இனிமேலும் இவ்வாறு நிகழாமல் சுமுக நிலையில் கல்விச் செயற்பாடுகள் தொடரும் வகையில் காரியங்கள் இடம்பெறும் என்று எதிர்பார்ப்பாம்.

போராட்டத்தில் ஈடுபட்ட சிறுமிகளும் கல்லூரியின் சட்டதிட்டங்களை அனுசரித்துப்போகும் மனப்பான்மையுடன் செயற்படுவது அவசியமாகும்.

# புலிகள் தோற்றதற்குக் காரணம் என்ன? விளக்குகிறார் கமால் குணரத்ன

*கெரில்லாப் போர் முறையில் இருந்து மரபு சார் போர் முறைக்குப் புலிகள் மாற முற்பட்டமையும், சிறிலங்கா இராணுவம் மரபு சார் போர் முறையிலிருந்து விலகிப் புலிகளின் பாணியைப் பின்பற்றியமையும், ஒரே நேரத்தில் பல முனைகளில் களங்களைத் திறந்து போரிடும் வல்லமையை இராணுவம்வளர்த்துக்கொண்டமையுமே இறுதிப் போரில் புலிகள் தோற்கக் காரணம் என்கிறார் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன.*
*நேற்றைய சூரிய காந்தியில் வெளியான அவரது செவ்வியின் தொடர்ச்சி இது...*

**2005-2009 வரையான காலப்பகுதியில் வெற்றிகளைக் குவிக்கும் இராணுவமாக எப்படி இராணுவம் மாறியது?**

நாங்கள் கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் இதனை நான் இங்கு உறுதிப்படுத்த முடியும். இராணுவத்திடமும் அதன் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகாவிடமும் பயங்கரவாதத்தை அழிப்பதற்கான தெளிவான இலக்கு இருந்தது. போரில் அனுபவ முதிர்ச்சி பெற்றிருந்தவர் என்ற வகையில் லெப். ஜெனரல் சரத் பொன்சேகா புலிப் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அவர் தனக்குப் பின் இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்பவரிடம் போரைக் கையளிக்க மாட்டேன் என உறுதி பூண்டார். அவர் தனது வாக்குறுதியை நிறைவேற்றினார். ஆனால் அப்போதைய அரசின் முழுமையான ஆதரவில்லாது புலிகளை அவரால் அழித்திருக்க முடியாது. அரசு இராணுவத்தினரின் ஆளுமையைப் பலப்படுத்துவதற்கான அனுமதியை வழங்கியது. ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. 120,000 ஆகக் காணப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை 230,000 ஆக உயர்த்தப்பட்டது.

நீங்கள் போரை முடிவுக்குக் கொண்டுவாருங்கள் அதில் நாங்கள் தலையீடு செய்யமாட்டோம் என முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ச, சரத் பொன்சேகாவிடம் தெரிவித்திருந்தார். அரசு எமக்கு எல்லாவற்றையும் வழங்கியது. அத்தோடு அனைத்து வளங்களையும் ஆயுதங்களையும் வழங்கியது.

இந்தக் காலப் பகுதியில், இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஆற்றல்மிக்க கட்டளைத் தளபதிகளை அப்போதைய இராணுவத் தளபதி தெரிவு செய்தார். மூப்பு அடிப்படையில்தெரிவுசெய்யாது ஆற்றல், மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் கட்டளைத் தளபதிகளை நியமித்தார். இந்த நேரத்திலேயே நான் பிரிகேடியராகப் பதவி உயர்த்தப்பட்டேன். எனக்கு மேல் பல மூத்த தளபதிகள் இருந்த போதிலும் நான் ஒரு டிவிசனுக்கு கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டேன்.

லெப். ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு அப்போதைய பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் ஆசியும் கிடைக்கப் பெற்றது. நன்கு திட்டமிடப்பட்ட வகையில் கொமாண்டோக்கள் மற்றும் படையினர் களமிறக்கப்பட்டமையின் விளைவாக புலிகளின் தளங்களை வெற்றிகரமாக அழிப்பதற்கான இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

**புலிகள் ஏன் தோற்றார்கள்?**

2005 இற்கு முன்னர் போர் புரிந்த அதே இராணுவத்துடன் புலிகள் சண்டை பிடிக்கவில்லை என்பதே முக்கிய காரணம். இறுதிப் போரின் போது மேலும் துறைசார் வளர்ச்சியைப் பெற்றிருந்த வித்தியாசமான உளச்சார்பைக் கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்துடனேயே புலிகள் போர் புரியவேண்டியிருந்தது. எல்லா மட்டங்களிலும் நியமிக்கப்பட்டிருந்த கட்டளைத் தளபதிகள் சிறந்த அனுபவத்தைக் கொண்டிருந்தனர். நான் முன்னர் கூறியது போன்று நாங்கள் புலிகளின் பலவீனத்தை அடையாளங் கண்டுகொண்டு அவற்றிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு செயற்பட ஆரம்பித்தோம்.

நாங்கள் முன்னர் ஒரு மரபுசார் இராணுவமாகப் போர் புரிய விரும்பினாலும்கூட, நான்காம் கட்ட ஈழப்போரில் சிறப்புப் படைகள் மற்றும் கொமண்டோக்கள் தமது சிறிய குழுக்களைப் போரில் ஈடுபடுத்திப் போரை வெற்றி கொள்ள உதவினர். புலிகள் இந்த முறையையே முன்னர் பின்பற்றி எமக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருந்தனர். இந்தத் தடவை நாங்கள் போர் உத்திகளை மாற்றிக்கொண்டோம். இதன்மூலம் புலிகளுக்கு அச்சத்தைத் தோற்றுவித்து போரை வெற்றி கொண்டோம்.


பிரபாகரன் தனது கெரில்லா போர் முறைமையிலிருந்து மாற விரும்பிய அதேவேளையில் நாங்கள் எம்மாலானளவு மரபு சார் போரியலிலிருந்து எம்மை விலக்கிக் கொள்ள வேண்டும் என முயற்சித்தோம். இதுவே புலிகளின் மிகப்பெரிய தோல்வியாக இருந்தது. இதன் பின்னர் புலிகள் தமது சொந்த மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினர். இதுவே புலிகள் தமது மக்களின் ஆதரவை இழப்பதற்கான முக்கிய காரணியாகியது. உயர் போரியல் படையாக மாறிய பின்னர், பிரபாகரன் தனது படையை மரபுசார் படையாக மாற்றியமைத்தமையானது புலிகள் விட்ட மிகப் பெரிய தவறுகளுள் ஒன்று.

வேவுப் புலிகள், வெடிபொருள் வல்லுநர்கள், தற்கொலைக் குண்டுதாரிகள், அதனுடைய ஆட்லறிப் படையணி போன்ற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாழ்வுடன் கிட்டத்தட்ட முப்பதாண்டுகளாக விளையாடிய மனிதன் எனது கண்முன்னால் வீழ்ந்து கிடந்த அந்தத் தருணமானது, போர் வீரன் என்ற வகையில் என்னால் மறக்க முடியாத ஒரு தருணம். சேர்! நாங்கள் பிரபாகரனைக் கொன்றுவிட்டோம் என எனது வீரர்கள் மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்தார்கள். எமது இராணுவத்தின் அனைத்து டிவிசன் தளபதிகள் மற்றும் படையினரின் முழுமையான அர்ப்பணிப்பின் காரணமாக இந்தப் போரானது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது எனக் கூறுவதில் நான் பெருமையடைகிறேன். இது ஒரு கூட்டு முயற்சியாகும்.



உயர் போரியல் ஆற்றலைக் கொண்டிருந்த புலிகளை பிரபாகரன் மரபுசார் படையணியாக மாற்ற முற்பட்டமையாலேயே போர்க் களத்தில் புலிகள் தோற்றனர். இராணுவத்தினர் பல்முனைகளிலிருந்தும் தாக்குதலை நடத்தக் கூடிய உயர் வலுவுள்ளதாக மாறியமை புலிகளின் தோல்விக்கான மற்றொரு காரணம். இதனால், மனிதவலுவைக் குறைந்தளவில் கொண்டிருந்த புலிகளால் தொடர்ந்தும் போர்க் களத்தில் தாக்குப் பிடிக்க முடியவில்லை.
போரில் ஏற்பட்ட சோர்வு நிலை மற்றும் புலிகள் அமைப்பின் மூத்த கட்டளைத் தள்பதிகளின் வயதுகள் அதிகரித்ததால் அவர்களால் துடிப்புடன் செயலாற்ற முடியாமை போன்றனவே புலிகளால் போர்க் களத்தைத் தக்கவைத்திருக்க முடியாமைக்கான காரணங்கள் என புலிகளின் முன்னாள் மகளிர் பிரிவு அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.தமிழினி தான் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**
நான் தமிழினி எழுதிய நூலை வாசிக்கவில்லை. ஆனாலும் அந்தக் காரணங்களை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பிரபாகரன் இளமையாக இருந்தாலென்ன வயது போயிருந்தாலென்ன, அவர் தொடர்ந்தும் இரக்கமற்ற ஒருவராகவே விளங்கினார். போரின் இறுதிக் கணம் வரை பிரபாகரனின் தலைமைத்துவம் மிகவும் மேன்மை மிக்கதாகவே இருந்தது. புலிகளின் ஏனைய தலைவர்களான பானு, ரட்ணம் மாஸ்ரர், சூசை போன்றவர்களும் அசாத்தியமான கட்டளைத் தளபதிகளாக விளங்கினர். போரின் இறுதிச் சில நாள்களில் சூசை கட்டளை வழங்கியபோது எவரும் பின்னோக்கிச் செல்ல விரும்பவில்லை. இந்தத் தலைவர்களின் கட்டளையின் கீழ் புலிகளின் கொமாண்டோக்கள் சிறப்பாகச் செயற்பட்டனர்.

**பால்ராஜின் இழப்பு**
புலிகளின் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான பால்ராஜின் இழப்பு பெரியது. இவர் புலிகள் அமைப்பின் சிறந்த தலைவர்களுள் ஒருவர். இதேபோன்று புலிகள் அமைப்பின் சிறந்த கட்டளைத் தளபதிகளில் ஒருவரான கருணா அம்மானையும் புலிகள் இழக்க வேண்டியேற்பட்டது. இதேபோன்று புலிகளின் கட்டளைத் தளபதி தீபன் புதுக்குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழுந்தார். புலிகள் அமைப்பின் சிறந்த தளபதிகள் தொடர்ந்தும் உயிரிழந்தபோதிலும் புலிகளின் உயர் தலைமையானது போரின் இறுதி நிமிடங்கள் வரை தைரியத்துடனேயே போரை நடத்தியது.
இறுதிப் போரின்போது இராணுவம் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டது என்று மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் அனைத்துலக மனித உரிமை அமைப்புக்கள் குற்றஞ் சுமத்தின. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?
இறுதிப் போரின்போது டிவிசன் கட்டளைத் தளபதியாக இருந்தவன் என்கின்ற வகையில், நான் இத்தகைய குற்றச்சாட்டுக்களைப் பலமாக மறுக்கிறேன். போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்தினர் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் எவற்றிலும் ஈடுபடவில்லை. இது இராணுவத்துக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையிலான போர். போர்ச் சூழலில் நிச்சயமாக இழப்புக்கள் ஏற்படும். மனிதாபிமானச் சட்டத்தை நாங்கள் பின்பற்றிய பொதுமக்கள் மீதான இழப் புக்களைக் குறைப்பதற்கான சாத்தியமான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் முன்னெடுத் தோம். இதன் காரணமாகவே நாங்கள் எமது இராணுவ நடவடிக்கையை மனிதாபிமான நடவடிக்கை என்ற பெயரில் மேற்கொண்டோம். இந்த இராணுவ நடவடிக்கையின் அர்த்தத்துக்கு நாங்கள் முழுமையாக மதிப்பளித்தோம். நாங்கள் மக்கள் வாழ்ந்த பகுதிகள் மீது தாக்குதல் நடத்தவில்லை. பூச்சியப் பொதுமக்கள் இழப்பைப் பின்பற்றுமாறு அரசு எமக்கு அறிவுறுத்தியது. இதனை நாங்கள் பின்பற்றினோம்.
இறுதியாக, புலிகளின் தலைவர் இராணுவத்துடன் 45 நிமிடப் போரை நடத்தினார். அப்போது அவரை உயிருடன் பிடிக்க முடியும் என்பதில் நீங்கள் உறுதியாக இருந்தீர்களா?
எமது இராணுவத்தினர் அவரை மிக விரைவாகப் பிடித்துவிடுவார்கள் என்பதில் நான் மிகவும் உறுதியாக இருந்தேன். புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த மக்கள் பாதுகாப்புத் தேடி எமது பக்கத்துக்கு இடம்பெயர்ந்து வந்தபோது நான் இதனை உணர்ந்தேன். நாங்கள் வரைபடத்தைப் பார்த்தபோது, புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகள் மிக வேகமாக எமது கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதை நாம் அறிந்துகொண்டோம்.
பொதுமக்களுடன் சேர்ந்து புலிகளும் எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஓடிவந்தமையே இதற்குக் காரணம். இதனால் பிரபாகரனுடன் போர் புரியும் அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை நாங்கள் ஊகித்தோம். 18 மே 2009 அன்று போரானது முடிவுக்கு வந்தது. ஆனால் லெப். ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் எனக்குள் அந்தப் பெரிய கேள்வி ஒன்று இருந்தது. அதாவது பிரபாகரன் எங்கே? என்பதுதான் அந்தக் கேள்வியாகும்.
நாங்கள் வடக்கின் ஒவ்வொரு அங்குல நிலத்தையும் கைப்பற்றி விட்டோம் என அறிவிக்குமாறு நான் இராணுவத் தளபதியிடம் கேட்டபோது, அதற்கு அவர் பிரபாகரனை உயிருடன் பிடிக்காது போர் ஒருபோதும் முடிவுக்கு வராது எனக் கூறினார். ஒவ்வொருவரும் பிரபாகரனைப் பார்ப்பதற்காக ஆவலுடன் காத்திருந்தபோது, நந்திக் கடல் நீரேரியில் இடம்பெற்ற 45 நிமிடப் போரின் பின்னர் பிரபாகரனை நான்காவது விஜயபாகு காலாட் படையணி கொன்றுவிட்டதாக அறிவிக்கப் பட்டது.
பிரபாகரன் உயிருடன் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டு பின்னர், கொல்லப்பட்டார் என சிலர் கூறுகின்றனர். இது தொடர்பான தங்களின் கருத்து என்ன?
இது வதந்தி. தாக்குதலின்போது அவர் கொல்லப்பட்டார் என்பதே உண்மை. பிரபாகரன் அங்கிருந்தார் என்கின்ற தகவலானது மே 19 காலை வரை எவருக்கும் தெரியாது. இதுவே புலிகளுடனான எமது இறுதிச் சண்டைக் களமாக இருந்தது.
எமது வாழ்வுடன் கிட்டத்தட்ட முப்பதாண்டுகளாக விளையாடிய மனிதன் எனது கண்முன்னால் வீழ்ந்து கிடந்த அந்தத் தருணமானது, போர் வீரன் என்ற வகையில் என்னால் மறக்க முடியாத ஒரு தருணம். சேர்! நாங்கள் பிரபாகரனைக் கொன்றுவிட்டோம் என எனது வீரர்கள் மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்தார்கள். எமது இராணுவத்தின் அனைத்து டிவிசன் தளபதிகள் மற்றும் படையினரின் முழுமையான அர்ப்பணிப்பின் காரணமாக இந்தப் போரானது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது எனக் கூறுவதில் நான் பெருமையடைகிறேன். இது ஒரு கூட்டு முயற்சியாகும்.
பிரபாகரனின் இளைய மகன் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டார் எனக் கூறப்படுகிறது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? *(23ஆம் பக்கம் பார்க்க)*

# யாழ். மண்ணுக்குக் கிடைத்துள்ள அவப் பெயரைத் துடைத்து அழிப்போம்

யாழ்ப்பாணத்தில் மது பாவனை அதிகரித்துள்ளதால் மது விற்பனையின் மூலமாக அரசுக்கு அதிகவரி கிடைத்து வருவதாக ஜனாதிபதி யாழில் வைத்துக் கூறியமை இங்கு வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.
கல்வி, கலாசாரம், பண்பாடு, சமய விழுமியங்கள் ஆகியவற்றுக்குப் பெயர் பெற்றது எமது யாழ்ப்பாண மண். மொழிக்கான போராட்டத்தில் ஏராளமான உயிர்களை இழந்ததும் இந்த மண்தான். ஏராளமான புகழ் வாய்ந்த கல்விச்சாலைகளையும்,உலகத்தரம் வாய்ந்த பல்கலைக் கழகத்தையும் இந்த மண்ணில் காண முடிகின்றது. அதேவேளை போர் ஓய்ந்ததன் பின்னர் புற்றீசல் போன்று மதுபானசாலைகளும் இங்கு ஏராளமாக காணப்படுகின்றன. யாழ். நகரில் மாத்திரமல்ல ஏனைய சிறு நகரங்களில் கூட இவை அதிகளவில் காணப்படுகின்றன. அவற்றில் அமைக்கப்பட்டுள்ள காட்சியறைகள் விதம் விதமான மதுப் போத்தல்களைக் காட்சிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்கின்ற வீதிகளிலும் மது விற்பனை நிலையங்கள் குறைவின்றிக் காணப்படுவதால் மாணவர்கள் இவற்றைக் கடந்தே செல்லவேண்டியுள்ளது.
போரின் பின்னர் தமிழர் பகுதிகளில் இளைஞர்களைக் குறிவைத்துப் போதைப் பொருள்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் தாராளமாகவே இடம்பெறுகின்றன. பாடசாலை மாணவர்களும் இதிலிருந்து தப்பவில்லை. இதுவும் மது மற்றும் போதைப் பொருள்களின் பாவனை அதிகரித்தமைக்கு ஒரு முக்கிய காரணமாகும்.
மதுபாவனையாலும், புகையிலைப் பொருள்களைப் பயன்படுத்துவதாலும் ஏராளமானவர்கள் ஆண்டுதோறும் உயிரிழப்பதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. ஆனால் அரசு இது தொடர்பாக அலட்டிக் கொள்வதில்லை. ஏனென்றால் மதுவும், அதிகளவில் வருவாயை ஈட்டிக் கொடுப்பதால் அரசு இவற்றை ஒருபோதுமே தடை செய்யமாட்டாது.
ஆனால் மக்கள் மனம் வைத்தால் இவற்றை ஒதுக்கி வைத்துவிடலாம். ஜனாதிபதியின் உரை யாழ்ப்பாண மக்களைப் பற்றிய ஒரு தவறான கண்ணோட்டத்துக்கு வழி வகுத்துள்ளது. யாழ்ப்பாணத்தவர்கள் எந்தநேரமும் போதையில் மிதப்பவர்கள் என்றதொரு பிழையான எண்ணமும் ஏனையவர்களின் மனதில் உருவாகக் கூடும்.
ஆகவே எமதருமை யாழ்ப்பாணத்துச் சகோதரர்களே! இந்த அவப் பெயரைத் துடைத்தழிப்பது உங்களின் தலையாய கடமை. மது பாவனையைக் கைவிடுவதாக மதுப்பிரியர்கள் அனைவரும் சபதம் மேற்கொள்ள வேண்டும். மதுபான விற்பனை நிலையங்களை நாடுவதை உடனடியாகவே நிறுத்திக் கொள்ள வேண்டும். இதனால் உங்களது பணம் சேமிக்கப்படுவதுடன், யாழ். மண்ணின் அவப் பெயரும் அழிக்கப்பட்டுவிடும்.

மா.ரமணன்.
முதலாம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்த பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச்செய்தி



அருள் மழை பொழியும் அம்பிகையின் திருத்தேர் விழாச் சிறக்க எனது இதயபூர்வமான ஆசிச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். கேட்ட வரம் அருளும் துர்க்கா தேவியின் பெருமை அறியாதவர்களில்லை. எங்கள் தேவஸ்தானம் துர்முகி வருட மகோற்சவம் பல்வேறு சிறப்புக்களுடன் நடைபெற்று வருகிறது. அம்பாளின் திருவருளால் இவ் வாண்டு தென்திசை வாயில் கோபுரம் அடிக்கல் நாட்டப்பெற்று திருப்பணி நிறைவுறும் தறுவாயிலுள்ளமை பெருமைதரும் விடயமாகும் அம்பாளின் அருட்கடாட்சத்தால் எவ்வித குறையுமின்றி அனைவரையும் வாழவைக்கும் அன்னையின் திருத்தேர் விழாச்சிறப்புற அனைவரையும் வாழ்த்துவதுடன் திருத்தேர் சிறப்பிதழ் சிறக்கவும் வாழ்த்தி அமைகிறேன்.

**சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள் பிரதம குரு**
**ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்**
**துர்க்காபுரம், தெல்லிப்பழை.**

## தேரேறி வந்தருளும் தேவி நீயே


அருள்மிகு தெல்லிப் பதியமர்ந்த
அன்னையே மஹி மார்த்தனியே
பெருந்தேர் ஏறியே வந்தருள் தருவாய்
பெருமாட்டி எங்கள் துர்க்கையளே

அடியவர் அன்புக் கரங்களில் வடங்கள்
தொட்டே இழுத்திட எம் தாயே
ஆடியே வந்தருள் புரியுமென்தாயே
அங்கயற் கண்ணியே துர்க்கையம்மா

என்றும் உன்னருள் மாட்சிதந்தெம்மை
ஆளும் துர்க்கா புரத்தாளே
இன்றுன் அருளே எங்கும் துலங்கிட
எழில்மிகு தேரினில் வாருமம்மா



## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வரல



ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு மேல அமைந்த யாழ்ப்பாண நகரின் வடக்கே தெல்லிப்பழைக் கிராமத்தில் அமை கதிர்காமர் அவர்கள் 1750ஆம் ஆண்டளவில் இந்தியாவுக்குத் தலயாத் வேதாரணியத்தை அடைந்து அங்கிருந்து பாதயாத்திரையாக காசிவரை செ ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்து தேவிகடாட்சத்தினால் ஞானகுரு கிடைக்கப் அவர் 1760ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் திரும்பிய போது துர்க்கா உருவமொன்றையும் கையோடு கொண்டு வந்தார். காசியாத்திரையை மு கீரிமலையில் தீர்த்தமாடி அங்கிருந்து மூன்றுமைல் தூரம் நடந்து நடை தள

திருவருள் கருணையால் அவர் முன் ஒரு ஜோதி தோன்றி அவர் செ கட்டளையிட்டது. கதிர்காமர் தாம் கொண்டு வந்த இயந்திரத்தையும், திருமு துர்க்காதேவி தேவஸ்தானமாகக் காட்சி தருகின்றது. ஏறக்குறைய இருநூற ஒருவர் தோணி மூலம் காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்தார். அவர் அங் தங்கியிருந்தார். அக்காலத்தில் செல்வச் செல்வாக்கு மிகுந்த அப்பகுதி பெரி இயந்திரத்தையும்.

திருமுகக் கெண்டியையும் ஸ்தாபிக்கும்படி ஆணையிட்டதற்கு அமைய அவர் ஆலயத்தை ஸ்தாபித்து அந்தணரை ஆலய அர்ச்ச இதன் மூலம் கதிர்காமரின் ஆன்மார்த்த பூசை நிலையமாக இருந்த இவ் ஆலயம் பரார்த்த பூசை நிலையமாக விருத்தியடைந் தனிமுகாமையில் இருந்த போதும் நீண்டகாலமாக புனருத்தாரணம் செய்யப்படாமல் இருந்ததை உணர்ந்த முகாமையாளர் இவ் உறுதி சாதனம் இல.2851 மூலம் 11 பேர் கொண்ட அறங்காவலர் குழு ஒன்றை நியமித்து அவ் அறங்காவலர் குழுவினால் சில குறிப் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 05.05.1963இல் முன்னாள் கல்வித் திணைக்கள வித்தியாதரிசி திரு.சே.தியாகராசா தலை முயற்சியாலும் தெல்லிப்பழை வாழ் இளைஞர்களின் சிரமதான இயக்கம் மூலமும் பொதுமக்களின் ஆதரவினாலும் 08.09.196 பின்னர் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கமாக இயங்கி வருகின்றது.

1970ஆம் ஆண்டு தேவஸ்தான நிர்வாகசபைத் தலைவர் திரு.சே.தியாகராசா ஓய்வுபெற மகாஜன சிற்பி அமரர் தெ.து.ஜெய அர்ச்சனைச் சீட்டு முறையினை நிதி அலுவலகம் மூலம் செயற்படுத்தியும் 1976ஆம் ஆண்டு சித்திரத்தேர் அமைப்பிற்கான ஒப்பந்தம் இறைவனடி சேர்ந்தார். தேவஸ்தானத்தின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய ஆன்மீகத் தலைவி சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் 197 பின்னரும் இன்றுவரை பாரிய திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. அத்துடன் அம்மையார் அவர்கள் 15.06.2008இல் சிவபத செஞ்சொற்செல்வர். கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள் காலத்திலும் பாரிய திருப்பணிகள் நிறைவேறியமை குறிப்பிடக்கூடிய அம்சம

## 1978 தொடக்கம் இன்றுவரை நிறைவேற்றப்ப

| | | | | |
|---|---|---|---|---|
| ➤ சித்திரத்தேர் | 1978 | ➤ திருமஞ்சம் | 2009 | ➤ கைல |
| ➤ பொது அலுவலகம் | 1978 | ➤ சிவத்தமிழ்ச் செல்வி சிலை அமைப்பு | 2009 | ➤ தணி |
| ➤ ஞானசுரபி மண்டபம் | 1980 | ➤ திருமண மண்டபம் அழகுபடுத்தியமை | 2009 | ➤ நல்லு |
| ➤ இராஜகோபுரம் | 1981 | ➤ சிவத்தமிழ்ச்செல்வி நவகோண மண்டபம் | 2009 | ➤ துர்க் |
| ➤ அலங்கார நுழைவாயில் | 1981 | ➤ பாலஸ்தாபன கும்பாபிகேம் | 2010 | ➤ துர்க் |
| ➤ துர்க்காபுஷ்கரணி தீர்த்தத் தடாகம் | 1982 | ➤ புதிய மணிக்கோபுர அமைப்பு | 2010 | ➤ தெற் |
| ➤ அந்தணர் விடுதி | 1982 | ➤ கோபுர மணிமண்டபம் | 2010 | |
| ➤ சப்பறம் | 1985 | ➤ மஹாகும்பாபிகேம் | 2011 | |
| ➤ பக்தர் விடுதி | 1985 | ➤ துர்க்காபுரம் மகளிர் இல்லம் புதிய விடுதி | 2013 | |
| ➤ சரஸ்வதி மண்டபம் | 1987 | | | |
| ➤ புதிய அன்னதான மண்டபம் | 1988 | | | |
| ➤ அலுவலகர் விடுதி | 1988 | | | |

**நிர்வாக செயலாளர், ஸ்ரீதுர்க்காதே**

## விழா அனுச




அன்னையின் தேர்வடம் பிடித்து
அருள் பலம் பெறுவோம்
பாக்கியரட்ணம்
ஹாட்வெயார்
இல. 163, 165, பிரதான வீதி,
சங்கானை.
தரன் றேடர்ஸ்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



துதிப்போருக்கு துன்பம் போக்கும்
துர்க்கை அம்பாளே
எமக்குத் துணை
வினோ நகைப் பூங்கா
இல.185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்: இந்து இளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்

# தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## இன்று (12.09.2016) திங்கட்கிழமை

## வரலாறு

..கு மேலான பழமை வாய்ந்த தேவஸ்தானமாகும். ஈழத்திருநாட்டில் வடபால் ..ல் அமைந்துள்ள உழுகுடைப்பகுதியில் சைவ மரபிலே வாழ்ந்த பெரியார் ..தலயாத்திரை செய்யும் நோக்குடன் காங்கேசன்துறையில் தோணி ஏறி ..வரை சென்று அங்கு பத்து ஆண்டுகள் தங்கியிருந்து தமிழ், சமஸ்கிருதம் ..டைக்கப்பெற்று தேவி உபாசகரானார்.

..ர்க்காதேவி இயந்திரமொன்றும் வெண்கலத்திலமைந்த திருமுகக்கெண்டி ..ரயை முடித்துக்கொண்டு காங்கேசன்துறையை வந்தடைந்த இப்பெரியார் ..டை தளர அங்கிருந்த இலுப்பைத் தோப்பிலே இளைப்பாறினார்.

..அவர் கொண்டு வந்த துர்க்கா சக்கரத்தை அவ்விடத்தில் ஸ்தாபிக்கும்படி ... திருமுகக் கெண்டியையும் தாபனம் செய்த இடமே இன்று அருள்மிகு ஸ்ரீ ..இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு காஞ்சிபுரத்திலிருந்து அந்தணப் பெரியார் ..வர் அங்கிருந்து தெல்லிப்பழையில் உழுகுடைப்பகுதியில் ஒரு மரத்தடியில் ..தி பெரியார் நாகநாத உடையாருக்குத் தேவி கனவிலே தோன்றி துர்க்கா

..ய அர்ச்சகராக நியமித்தார்.

..யடைந்தது. இவ் ஆலயமானது கதிரேசபிள்ளை நாகநாதர் உடையாரின் ..ளா இவ்வாலயத்தை மீளவும் புனரமைக்க விரும்பி 26.04.1949 அன்று .. குறிப்பிடப்பட்ட திருப்பணிகள் நடைபெற்றன. எனினும் 1953ஆம் ஆண்டு ..சா தலைமையில் ஒரு திருப்பணிச் சபை நியமிக்கப்பட்டது. அச்சபையின் ..09.1965இல் மஹாகும்பாபிசேகம் நடைபெற்றது. இச்சிரமதான இயக்கமே

..து.ஜெயரத்தினம் அவர்கள் தேவஸ்தான தலைமைப் பொறுப்பினை ஏற்று ..பந்தம் நிறைவேற்றிய பின்னர் திடீரென நோய் வாய்ப்பட்டு 29.10.1976இல் ..யார் 1977ஆம் ஆண்டு தேவஸ்தானத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்ற .. சிவபதமடைந்த பின்னர் தேவஸ்தான தலைமைப் பொறுப்பினை ஏற்ற ..அம்சமாகும்.

## ..ப்பட்ட திருப்பணிகள்

| | |
|---|---|
| கைலாச வாகனம் | 2013 |
| தணிகாசல பூங்கா அமைப்பு | 2014 |
| நல்லூர் துர்க்காதேவி மணிமண்டப மூன்றுமாடிக் கட்டடம் | 2014 |
| துர்க்காதேவி வீட்டுத்திட்டம் 6 வீடுகள் அமைப்பு | 2015 |
| துர்க்காதேவி வேதாகம பாடசாலை ஆரம்பம் | 2016 |
| தெற்குவாசல் கோபுரத் திருப்பணி அத்திவார நிகழ்வு | 2016 |

தகவல்: நா.தவநாதன்
..ாதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## ஆசிச்செய்தி



தேசம்போற்றும் தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் தேர் ஏறிவரும் திருநாள் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். பல்லாயிரம் பக்தர்கள் பக்தியோடு வருகை தந்து வணங்கி வாழ்வு பெறும் இப்புனித நாள் சிறக்க அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

சகல செல்வமும் தந்து சஞ்சலம் போக்கும் சர்வசக்தியாக துர்க்காதேவி விளங்குகின்றாள். காசியிலிருந்து கங்கையின் திருவருளுடன் சித்தர் மகான் கதிர்காமர் கொண்டு வந்த துர்க்கா இயந்திரத்தின் சக்தி பெருஞ்சுடராகப் பிரகாசிக்கிறது.

ஆலயத்தைக் காலத்துக்குக் காலம் அறத்தோடு காத்தவர்கள் செய்த நற்பயனை நாம் இன்றும் காண்கின்றோம். உலகம் போற்றும் ஆன்மீக அன்னை. சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சிறந்த ஆளுமையில் உயர் வளர்ச்சி கண்ட இத்திருக்கோயில் இன்று பெரும் புகழ்பெற்று விளங்குகின்றது. ஆலயத்தின் திருப்பணிக்கும்.அறப்பணிக்கும் அகமலர்ந்து ஆதரவு நல்கும் அன்பர்கள் அனைவருக்கும் இந்நாளில் இதய பூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.எங்கள் தேவஸ்தான வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் தர்மகர்த்தாசபை. நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் தொண்டுப் பணியில் அயராது உதவும் தெல்லிப்பழை இந்து இளைஞர்சங்கம். துர்க்காபுரம் பெண்கள் தொண்டர்சபை, துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள். ஆலயப் பணியாளர்கள் அனைவரது பூரண ஒத்துழைப்புக்கும் இந்நாளில் வாழ்த்தினையும் நன்றியையும் கூறக் கடமைப்பட்டுள்ளேன். மஹோற்சவ தினங்களில் பொதுமக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு செயற்படும் வலி.வடக்குப் பிரதேச செயலகம். வலி.வடக்கு பிரதேச சபை. பாதுகாப்புக் கடமைகளை நிறைவேற்றும் பொலிஸ் திணைக்களம் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக. எல்லாம் வல்ல துர்க்காதேவி திருத்தேரில் வலம் வந்து எம் மண்ணில் அறமும் அமைதியும் நிலைக்க வழி தரவேண்டி அமைகிறேன்.

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தலைவர்.ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**

## எழுந்தருள்க தேரிலே

ஊற்றுப் புனலென உள்ளுற உள்ளுற
ஊறி வரும் ஒளியே !
காற்று வெளியிடை கனலிடை புனலிடை
கலந்து எழும் தெளிவே!
ஆற்றல், அறிவு, தெளிவு, நலம் தரும்
ஆனந்தப் பேரழகே!
தேற்றி எமையெல்லாம் தெய்வீக மாக்கிடத்
தேரில் வருபவளே!

பல்லுயிருள்ளும் பார்வைக்கு எட்டாமல்
படர்ந்திருக்கும் உணர்வே!
எல்லா உலகிலும் எல்லாப் பொழுதிலும்
இயங்கிடும் பேருயிரே!
கல்லாத எம்கவி கருணையினால் ஏற்கும்
களங்கமிலாக் கசிவே!
தெல்லி நகரினில் சித்திரத் தேரேறி
தரிசனம் தரவருவாய்!

கண்ணின் மணியாகி மணியின் ஒளியாகி
கனிவாகி நிற்பவளே!
பண்ணின் இசையாகிப் பாட்டின் பொருளாகி
பயின்றிருக்கும் அறிவே!
உண்ணின்று உருக்கி உருக்கி உருவாக்கும்
ஒப்பற்ற நாயகியே!
எண்ணவெளியிடை ஏகமாய் இருப்பவள்
எழுந்தருள்க தேரிலே!

## ..சரணை



தேசம் போற்றும் தெல்லிநகர்
துர்க்காதேவியின் தேர்விழா காண்போம்

BUTTERFLY BRAND
Pots and Pans
T.P.: 077 454 2223
High Quality

**KIRUTHIGA**
கிருத்திகா என்ரர்பிறைஸ்

Dealers in Stainless Steel Ware, Aluminum ware,plastic ware, Glass ware, Birthday Gift Items Etc

T.P.: 077 454 2223
52, சிவன் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

T.P.: 021 222 5222
52, Sivan North Road,
Jaffna.



அன்னையே தஞ்சம் என்று அடைக்கலம்
புகுந்தவர்க்கு அபயக்கரம் தந்து
அரவணைக்கும் தாய்

**யாழ்ப்பாண வணிக நிலையம்**
**302, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ளஞர் சங்கம் தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாதபலன்




## விருச்சிகம்

**செப்ரெம்பர் 1 முதல்31 வரை**

நல்லது, கெட்டது அறிந்து சமயோசிதமாகச் செயற்படும் திறமை உடைய விருச்சிக ராசியினரே! நீங்கள் எடுத்த வேலையை கொடுத்த நேரத்தில் செய்வீர்கள். இந்த காலகட்டத்தில் ராசியில் சனி சஞ்சாரம் செய்தாலும் ராசிநாதன் செவ்வாய் வாக்கு ஸ்தானத்தில் இருக்கிறார். வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். எல்லா விதத்திலும் நன்மையைத் தரும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். பணவரத்துக் கூடும். எதிர்பாலினத்தாருடன் பழகும்போது கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும். தொழில் ஸ்தானத்தில் சூரியன் ஆட்சியாக இருக்க தனாதிபதி குரு லாபஸ் தானத்தில் சூரியன் சஞ்சாரம் பெற்று அருளாசி வழங்குகிறார். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு லாபம் கிடைக்கும்.

பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள். தேவையான சரக்குகளின் கையிருப்பு இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம். பதவி உயர்வு கிடைக்கும். குடும்ப ஸ்தானத்தில் ராசிநாதன் செவ்வாய் இருக்கிறார். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும்.

குடும்ப விடயங்களில் சரியான முடிவுக்கு வர முடியாத விடயங்களில் கூட ஒரு முடிவு வந்து சேரும். உறவினர்களுடன் பேசும் போது கவனமாக பேசுவது நல்லது. வாகனங்களில் செல்லும்போதும் பயணங்களின் போதும் கவனம் தேவை. கலைத்துறையினருக்கு சுக்கிரனின் சஞ்சாரத்தால் எதையும் சாதிக்கும் திறமை அதிகமாகும். நினைத்த காரியத்தை நினைத்தபடி நடத்தி முடிக்க முயற்சிகளை மேற்கொள்வீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். அரசியல் துறையினருக்கு மனம் வருந்தும்படியான சூழ்நிலை ஏற்படும். மேலிடம் நீங்கள் சொல்வதை காதில் வாங்காதவர்போல் இருப்பார்கள். எனவே எல்லோரையும் அனுசரித்துச் செல்வதால் நன்மை உண்டாகும். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் இருக்கும். நினைத்த காரியத்தை செய்து முடிக்க எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். வீண் மனக்கவலை உண்டாகும். மாணவர்களுக்கு பாடங் களை படிப்பதில் ஆர்வம் உண்டாகும். கல்வியில் தேர்ச்சி பெறவும் கூடுதல் மதிப்பெண் பெறவும் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கும்.

பரிகாரம்: ஸ்ரீபைரவரை தீபம் ஏற்றி வழிபட்டுவர எல்லா நன்மைகளும் உண்டாகும். தடை நீங்கி காரியங்கள் வெற்றிகரமாக நடந்து முடியும்.

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவிக்கு இன்று தேர்



கலாவித்தகர்
திருமதி மலர்விழி கனகசபை

உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதி பராசக்தியான உமையவள் இலங்கையின், வடபால் யாழப்பாணத்திலே தம்மை வழிபடும் அடியார்களின் துன்ப, துயரங்களை நீக்கி, வல்வினை அகற்றி தெல்லிப்பழை எனும் அழகிய நகரிலே ஸ்ரீதுர்க்காதேவி அம்பிகையாக எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள். இத்தகைய சிறப்புமிக்க அம்பிகையின் 2016ஆம் ஆண்டுக்குரிய துர்முகி வருட மகோற்சவத்தின் சிகரம் என்று சொல்லப்படுகின்ற தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை மிக இனிதாக, எளிதாக, சிறப்பாக இடம்பெறுகின்றது. கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மகோற்சவ விழா தொடர்ந்து பன்னிரண்டு நாள்கள் இடம்பெற்று ஆவணிமாத திருவோண நட்சத்திர நாளிலே இந்த ஆலய முன்றிலில் அமையப்பெற்ற துர்க்கா 'புஷ்கரணி' தீர்த்தத் தடாகத்திலே நிகழும் தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெறும்.

அம்பிகையின் ஆனந்த, அற்புதமான தேர்த்திருவிழாவைக் கண்டு களிப்பதற்காக லட்சோப லட்சம் மக்கள் தெல்லி நகரலங இன்று கூடியுள்ளார்கள். இன்று காலை 9 மணிக்கு ஆலயத்தின் கிழக்குக் கோபுரவாசல் ஊடாக அம்பிகையானவள் அருட்கோல நாயகியாக, தங்க நகைகள் கண்ணைப் பறிக்க அசைந்து ஆடி ஆடி வருகின்ற காட்சியைக் காண கோடிக்கண்கள் வேண்டுமைய்யா! இதைப் பார்ப்பதற்கு எம்மக்கள் கொடுத்து வைக்க வேண்டும். இந்தக் கோயிலிலே நடைபெறுகின்ற ஒவ்வொரு திருவிழாவும் அம்பிகையின் அலங்கார பவனியாக அழகான சோடனைகளுடன் மலர் மாலைகளாலும், ஆபரணங்களாலும் சாத்துப்படியாகி விசேட மங்கள வாத்தியங்களுடன், மங்களகரமான கோலாகலத்துடன் இடம் பெறுவது வழக்கம்.

**அம்பிகையின் ஆனந்த, அற்புதமான தேர்த் திருவிழாவைக் கண்டு களிப்பதற்காக லட் சோப லட்சம் மக்கள் தெல்லி நகரில் இன்று கூடியுள்ளார்கள். இன்று காலை 9 மணிக்கு ஆலயத்தின் கிழக்குக் கோபுர வாசல் ஊடாக அம்பிகையானவள் அருட் கோல நாயகியாக, தங்க நகைகள் கண்ணைப்பறிக்க அசைந்து ஆடி ஆடி வருகின்ற காட்சியைக்காண கோடிக் கண்கள் வேண்டுமைய்யா!**

இந்தத் துர்க்கை அம்பாள் தேரிலே ஏறி ஆரோகணிக்கின்ற காட்சி பக்தி பூர்வமானது. அந்த அழகான சித்திரத்தேர் ஆடிஅசைந்த வண்ணம் அடியார்கள் வடம் பிடித்து இழுக்க திருவீதி வலம் வருகின்ற அற்புதமான ஆனந்தம் தருகின்ற காட்சி புனிதம் நிறைந்த அருட் காட்சியாகும். பெண் பக்தர்கள் ஒருபுறம் வடம் பிடித்திழுக்க ஆண்கள் ஆனந்தமயமாக மற்ற வடத்தைப் பிடித்திழுக்க அம்பிகையின் அருட் கடாட்சத் தேரானது ஆடி, அசைந்து தெருவீதி வலம் வருகின்ற காட்சி அருள் மயமும், அற்புதமானதுமாகும். துர்க்கா தேவியின் அருட்கடாட்சம் பெறுவதற்காக பக்தர்களால் இந்த ஆலயத்துக்குப் பல நேர்த்திகள் வைப்பதுண்டு. அந்த வகையில் திருமணம் கைகூடாத இளம் கன்னிப் பெண்கள் தமக்கு கூடிய விரைவில் வரன் கிடைக்க வேண்டுமென்று துர்க்காதேவியை எண்ணி விரதம் நோற்பர். அதிக எண்ணிக்கையில் வரும் இளம் கன்னியர்கள் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் தேசிக்காய் மூடியிட்டு நெய்விளக்கேற்றி வழிபடுவர். வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்து புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவியிலே தன்னை நினைந்து வழிபாடு ஆற்றித் துதிக்கத் திருவருள் புரிபவளும் இந்தத் துர்க்காதேவிதான்.

மறைந்த தலைவரான அமரர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வழிகாட்டலின் சிறப்புடன் திகழ்ந்த இந்த ஆலயம் தற்போது செஞ்சொல் செல்வர், ஆன்மிகப் பேச்சாளர் ஆறு. திருமுருகனுடைய தலைமையிலே மிகவும் சிறப்பாகப் பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றமை பெரும் சிறப்பாகும். துர்க்காதேவி ஆலயத்திலே பல்வேறு விதமான தொண்டுகள் மறைந்த அம்மையார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு சிறப்புற நடைபெறுகின்றன. துர்க்காதேவி மகளிர் இல்லம் என்று ஓர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டு ஆதரவற்ற இளம் மகளிரை அன்புள்ளம் காட்டி அரவணைத்து, ஆதரவு காட்டி கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. அத்துடன் அருள் ஒளி என்கின்ற ஓர் ஆன்மிக சஞ்சிகையும் வெளியிடப்படுகின்றது. ஆன்மிகம் சார்ந்த ஆழ்ந்த கருத்துக்களுடன் வெளிவருகின்ற இந்த நூல் மாணவ உலகுக்கு மிகவும் பயன் தரத்தக்கதாக உள்ளது. மேலும் ஆலயத்துக்கு மெருகூட்டுமாப்போல் அழகிய திருமண மண்டபமும் இங்கே அமைந்து இருப்பது வெகு சிறப்பாக இருக்கின்றது.

இந்த அம்பிகையின் அருள் மயமான தோற்றம் அடியார் குழாத்திற்கு உண்மையான பக்தியையும், நேய உணர்வையும் தருவதோடு அவர்களின் உள்ளங்களில் இனம் புரியாத ஆனந்தம் நிறைந்த மகிழ்ச்சியையும் தருகின்றது. துர்முகி வருட நல்லாட்சி அரசிலே நெருங்கி வருகின்ற சமாதானத்தீர்வு எமது நாட்டுக்கு நிறைவான தீர்வைத் தர வேண்டும் என்றும் இன்று தங்கத் தேரிலே ஆரோகணிக்கும் அம்பிகை தன்னை வழிபட வரும் பக்தர்களுக்கு வல்வினை அகற்றி, நல்வாழ்வு அளித்து நாட்டிலே சாந்தி, சமாதானம் நிலவ அருள் பாலித்து இந்த மண்ணிலே எல்லா மக்களும் இன்புற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ அருள் பாலிப்பாராக!

*கட்டுரையாளர்–*
*உதவிக் கல்விப்பணிப்பாளர்*
*(அழகியல்) தீவக கல்வி வலயம், வேலணை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறைகள் பாடசாலைகளாக மாறும் காலம் வரவேண்டும்


## இன்று தேசிய சிறைக்கைதிகள் தினமாகும்

"ஒரு மனிதன் உயர் நிலையில் இருந்தாலும், அவனிடத்தில் உயர் பண்பு இல்லையெனில் அவனை உயர்வானவன் எனக் கருதமுடியாது. அதுபோல் தாழ்நிலையில் இருந்தாலும் இழி குணம் இல்லாதவனைத் தாழ்ந்தவன் என்று கொள்ள முடியாது. மனிதன் தன் உணர்ச்சிகளைத் தானே ஆளவேண்டும். மாறான உணர்ச்சிகள் எம்மை ஆள்வதற்கு இடமளிக்கக்கூடாது. இது தொடர்பான சமூக விழிப்புணர்வுகள், சமய நற்சிந்தனைகள், உள வள ஆலோசனைகள், தியான முறைமைகள் தலைமைத்துவப் பயிற்சிகள் போன்றவற்றை கைதிகளுக்கு வழங்குவதன் மூலம் சிறையிலிருந்து விடுதலை பெறும் கைதிகளிடம் ஆரோக்கியமான விளைவுகளை அறுவடை செய்ய முடியும்."

விவேகானந்தனூர் சதீஸ்

மாங்கனி போன்ற இலங்கைத் தீவு பிரித்தானியரின் ஆழுகைக்கு உட்பட்ட காலப்பகுதியின் 1818 ஆம் ஆண்டளவிலேயே எமது நாட்டின் சிறைச்சாலைகள் நிறுவப்பட்டன. இந்த வகையில் அன்றய ஆட்சியினரின் தலைநகரமாக விளங்கிய கொழும்பு நகரத்தை மையப்படுத்தி முதலாவது சிறைச்சாலையாக வெலிக்கடை சிறைச்சாலை அமைக்கப்பட்டது. நாளடைவில் சனத்தொகை அதிகரிப்புக்கு ஈடாகக் குற்றச்செயல்களும் குறைவின்றி அதிகரித்தன. அதன் விளைவாக நாட்டில் சிறைக்கூடங்களின் தேவையும் அதிகரித்தது. இதனால் அன்று ஆங்கிலேயரால் ஆங்காங்கே பயன்படுத்தப்பட்டுவந்த 'குதிரைலாயங்கள்' தற்காலிக சிறைகூடங்களாக மாற்றப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த வகையில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அடுத்த படியாக கண்டி போகம்பரை சிறைச்சாலை (தற்போது தும்பறை) சிறைச்சாலை, மஹர சிறைச்சாலை போன்ற பிரதான சிறைச்சாலைகள் அமைக்கப்பட்டன. இன்று நாட்டின் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கி, சுமார் 22 சிறைச்சாலைகளும், 19 தடுப்பு நிலையங்களும் இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அபிவிருத்தி அடைந்து வருகின்ற எமது நாட்டில் வருடம் தோறும் பலகோடி ரூபாக்களைச் செலவிட்டு சிறைச்சாலைகள் பராமரிக்கப்பட்டிருக்கின்றமை கவலை தருகின்ற விடயமே என்றாலும், நாட்டில் நீதியும், நியாயமும் நிலை நிறுத்தப்பட்டு, குடிமக்களின் இயல்பு வாழ்வை உறுதிப்படுத்தவேண்டியது அவசியமல்லவா? அமைதியான இலங்கைத் தேசத்தை எதிர்காலச் சந்ததிக்கு கையளிக்கமுடியும். இது ஆட்சிப் பீடம் ஏறும் ஒவ்வொரு அரசினதும் தலையாய கடமை ஆகின்றது. இந்நாட்டில் பிறந்த ஒவ்வொரு குடிமகனும் தாம் செய்யும் தவறுகளைத் தாமாக உணர்ந்து கொண்டு தாய்நாட்டை நல்ல திசைநோக்கி நகர்த்த முன்வரவேண்டும். இது செயலுருப் பெறுமாயின் நாட்டில் உள்ள சில சிறைக்கூடங்கள் மூடப்பட்டு, அதற்குப்பதிலாக பாடசாலைகள் திறக்கப்பட முகாந்திரமாக அமையும். சிறைகளில் நாம் சந்திக்கின்ற கைதிகள் ஒவ்வொருவரும் தாம்செய்த தவறுக்கு ஒரு நியாயத்தைக் கற்பிக்க முயல்கின்றனர். இந்த விடயத்தில் அந்தத் தவறுகளைப் புரியவைத்து அவர்களது தவறான நியாயத்தை நியாயப்படுத்தலை நிர்மூலமாக்க வேண்டியது சிறைத் துறையினரின் கடமையாகும். பல கைதிகள் தொழில் இன்மையால் அல்லது போதிய வருமானம் இன்மையால் பிழையான வழிகளில் பணமீட்ட முயன்று சிறையில் இருப்பதை அவதானிக்க முடிகிறது ஒருவன் தான் வறியவன் என எண்ணிக்கொண்டு தீயசெயல்களின் மூலம் திரவியம் தேட முயல்வதால் அவன் வாழ்க்கையில் நிரந்தரமான வறியவனாகவே மாற்றப்படுகின்றான் என்பதே உண்மை. இதனை இன்றைய இளைய சமூகம் புரிந்துகொள்ளவேண்டும். இளம்தலை முறையில் ஒரு பகுதியினரைப் பார்த்தால் படிப்பில் கோட்டை விட்டுவிட்டு சிரமப்படாமல் பணமீட்டி சுகபோக வாழ்க்கை வாழத்தலைப்படுகின்றனர். இதற்கென அதிகமானவர்கள் தேர்ந்தெடுக்கும் வழிமுறை போதைப் பொருள் வியாபாரமே ஆகும். ஒரு தனிநபர் அல்லது ஒரு குடும்பம், சுகம் அனுபவிப்பதற்காகப் பல குடும்பங்கள் சீரழிந்து சின்னாபின்னமாகிப் போகின்றதைப் பார்க்கின்றோம்.




ஒரு மனிதன் உயர் நிலையில் இருந்தாலும், அவனிடத்தில் உயர் பண்பு இல்லையெனில் அவனை உயர்வானவன் எனக் கருதமுடியாது. அதுபோல் தாழ்நிலையில் இருந்தாலும், இழிகுணம் இல்லாதவனைத் தாழ்ந்தவன் என்று கொள்ளமுடியாது. மனிதன் தன் உணர்ச்சிகளைத் தானே ஆளவேண்டும். மாறான உணர்ச்சிகள் எம்மை ஆள்வதற்கு இடமளிக்கக்கூடாது. இது தொடர்பான சமூக விழிப்புணர்வுகள், சமய நற்சிந்தனைகள் உளவள ஆலோசனைகள் தியான முறைமைகள் தலைமைத்துவப் பயிற்சிகள் போன்றவற்றை கைதிகளுக்கு வழங்குவதன்மூலம் சிறையிலிருந்து விடுதலை பெறும் கைதிகளிடம் ஆரோக்கியமான விளைவுகளை அறுவடை செய்யமுடியும்.

தற்கால இளைஞர், யுவதிகள் வழிதவறிச் செல்ல முக்கிய காரணமாக அமைவது அவர்களது நட்பு வட்டாரமே என்றால் அது மிகையில்லை. ஒரு வருடைய குணத்தையும் குடிச்சூழலையும், கூடுகின்ற கூட்டங்களையும் ஆழமாக அறிந்த பின், அவருடன் நட்புப் பாராட்டவேண்டும். இதனைக் கைக்கொள்ளாது கண்டவர்களோடும் கைபிணைப்போமாயின் காலத்தால் மீட்க முடியாத சாக்கடை வாழ்வில் சிக்கிச் சீரழிய நேரிடும் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRIN
Twitter : UTHAYANPRINT



# மனம் திருந்துவதே மனிதப் பண்பு

காந்திபுரம் எனும் நாட்டை ஆட்சி செய்து வந்த மன்னன் அந்த நாட்டில் வாழ்ந்த மக்கள் மீது மிகுந்த கரிசனையும் அன்பும் செலுத்தி நல்லாட்சி புரிந்துவந்தான்.

அந்த அரண்மனையில் பணிபுரிந்து வந்த வேலையாள்கள் மீதும் அந்த அரசன் அன்புடனும் மரியாதையுடனும் நடந்து வந்தான். அங்கு பணி புரிந்து வந்த பணியாள்களும் அரசனுடன் அன்பும், மரியாதையும் விசுவாசமுமாகப் பணி புரிந்து வந்தார்கள்.

அன்று ஒரு நாள் அரண்மனையில் சுத்திகரிப்புப் பணி இடம்பெற்றது. வேலையாள்கள் அனைவரும் முழு மனதுடன் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டார்கள்.அரசனின் அறையைச் சுத்தம் செய்த வேலைக்காரன் ஒருவனின் கையில் ஒரு தொகைப் பணமும், நகையும் கிடைத்தன. அந்த வேலைக்காரன் அந்தப் பணத்தையும், நகையையும் தனதாக்க நினைத்து தனது வீட்டுக்கு எடுத்துச் சென்றான்.

அடுத்த நாள் அரசன் அந்தப் பணத்தைத் தனது தேவைக்காக எடுக்கச் சென்ற போது பணத்தையும், நகையையும் காணாமல் அதிர்ச்சி அடைந்தான். உடனடியாக அனைத்துப் பணியாள்களையும் அழைத்து எனது பணத்தையும் நகையையும் எடுத்தது யார்? எனக்கேட்டான். எவருமே பதில் சொல்லாமல் மௌனம் சாதித்தார்கள்.

உடனே "நான் மந்திரக் கண்ணாடி வைத்திருக்கிறேன். அந்தக் கண்ணாடியை உங்கள் முன்னால் கொண்டு வந்து வைக்கப் போகிறேன். அந்தக் கண்ணாடி திருடனை மட்டும் காட்டும்" என்று அரசன் மிரட்டிக் கூறினான்.

இதைக் கேட்டுப் பயந்த திருட்டில் ஈடுபட்ட வேலைக்காரன் தனது திருட்டை ஒப்புக் கொண்டான். அரசனுக்குப் பயங்கரமாகக் கோபம் வந்தது. "உடனடியாக இந்தத்திருடனை முதலைகள் வசிக்கும் குளத்தில் தூக்கி எறியுங்கள்" என்று தனது காவலர்களுக்குக் கட்டளையிட்டான். அந்த காவலர்களும் அவ்வாறே செய்தார்கள். அங்குள்ள முதலை ஒன்று அந்த வேலைக்காரனை விழுங்கியது. முதலையின் வயிற்றில் இருந்த அந்த வேலைக்காரன் தான் செய்த தவறை மன்னிக்குமாறு இறைவனிடம் வேண்டினான். இறைவனும் வேலைக்காரனை மன்னித்தார். மனந்திருந்திய வேலைக்காரனைக் கரையில் கொண்டுபோய் விடுமாறு முதலையிடம் கட்டளையிட்டார். முதலையும் அந்த வேலைக்காரனை வெளியில் கொண்டு வந்து விட்டது. அந்த வேலைக்காரன் உடனடியாக அரண்மனைக்குச் சென்று அரசனிடம் தன்னை மன்னித்து வேலையில் சேர்க்குமாறும், மறுபடியும் இவ்வாறான தவறைச் செய்யமாட்டேன் என்றும் மன்னிப்புக் கேட்டான். அரசனும் அவன் மீது இருந்த அன்பினாலும் அவன் தனது தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டதனாலும். அவனை மன்னித்து மறுபடியும் வேலையில் சேர்த்துக் கொண்டான்.

அந்த வேலைக்காரன் இறைவனுக்கும், அரசனுக்கும் நன்றி கூறினான்.

தனது தவறை உணர்ந்து மனம் திருந்தி மன்னிப்புக் கேட்டு மறுபடியும் அந்தத் தவறைச் செய்யாது இருப்பதே மனிதனின் சிறந்த பண்பாகும்.

*ம.றேம்சன்*



# வர்ணம் தீட்டுவோம் வாங்க




# வரலாற்றில் இன்றைய தினம்

1848 - சுவிற்சர்லாந்து சமஷ்டி ஆட்சி நாடாகியது.
1919 - பின்னாளில் நாஸிக் கட்சி என அழைக்கப்பட்ட ஜேர்மன் தொழிலாளர் கட்சியில், அடொல்ப் ஹிட்லர் இணைந்து கொண்டார்.
1923 - தற்போது சிம்பாவே என அழைக்கப்படும் தெற்கு றொடீசியா ஐக்கிய இராச்சியத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.
1940 - பிரான்ஸ் லாஸ்கோக்ஸில் குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
1948 - பாகிஸ்தான் தலைவர் முஹமட் அலி ஜின்னா சாவடைந்த மறுநாள் ஹைதரபாத்தினுள் இந்திய இராணுவம் நுழைந்தது.
1959 - லூனிக் - 11 ரொக்கட் சந்திரனுக்கு சோவியத் யூனியனால் ஏவப்பட்டது.
1977 - இனப்பாகுபாட்டுக்கு எதிரான செயற்பாட்டாளர் ஸ்டீப் பைகோ, தென் ஆபிரிக்காவில் பொலிஸ் தடுப்புக் காவலில் உயிரிழந்தார்.
1980 - துருக்கியில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
2002 - பருத்தித்துறை-நாகர் கோயில் வீதியைத் திறக்கக் கோரி புலிகளின் வடமுனைத் தளபதிகள் படை அதிகாரிகளுடன் சந்திப்பு.
2002 - நிமலராஜன் கொலை வழக்கின் சந்தேக நபர்களுக்கு வவுனியா மேல் நீதிமன்றம் பிணை வழங்கியது.
2003 - தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலிகை டீசலைக் கண்டு பிடித்ததாக அறிவிப்பு.
பச்சை நிற எலிகளை உருவாக்கி இந்திய விஞ்ஞானிகள் சாதனை.
2008 - பயணிகள் புகையிரதமும், சரக்குப் புகையிரதமும் லோஸ் ஏன்ஜெல்சில் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 25 பேர் சாவு.
2011 - செப்ரெம்பர் 11 நினைவு மியூசியம், நியூயோர்க் நகரில் பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது.




தண்ணீருக்கடியில் வெகுநேரம் நீந்த உதவும் மூச்சுக் கருவியின் பெயர் தான் ஸ்கியூபா. நீருக்கடியில் இது நுரையீரல் போன்று செயற்படும்.

இதனால் ஆழ்கடலில் சென்று அங்குள்ள நிலப்பரப்புக்களை ஆராயவும் எண்ணெய் எடுப்பதற்காக ஆராய்ச்சி செய்யவும் டொல்பின், சுறா மீன் ஆராய்ச்சியிலும் மற்றும் இராணுவத் தொடர்புகளுக்காகவும் கப்பற்படையிலும் பெரும் பங்கு வகிக்கின்றது.

சுவாசிக்கத் தேவையான ஒக்சிசன் சிலிண்டருடன் விடும் மூச்சை வாய் வழியாக வெளியே விடும் கருவியும் இதிலுள்ளது. இது ஒக்சிசனை மட்டும் உள்ளே அனுமதிக்கும். இதனால் சீரான மூச்சு ஓட்டம் கிடைப்பதால் கடலில் சில மணி நேரங்கள் நீந்தலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டில் போதைப் பழக்கத்தை ஒழிப்பது சாத்தியமானதா?

போதை வஸ்துவுக்கு எதிரான நாடு என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி செயலகத்தினால் முன்னெடுக்கப்படும் நிகழ்வு யாழ்ப்பாணத்திலும் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. இது எல்லோருக்கும் தெரியும். அந்த நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் இடம் பெற்றதும் தெரியும். நிகழ்வு நடக்கிறதாகவும் அந்த நிகழ்வில் கலந்து கொண்டு செய்திகள் சேகரிக்கிறதுக்கு ஊடகக் காரருக்கு அனுமதியள் தந்திச்சினம். சரி அங்கையும் ஒருக்காப் போய்ப் பாப்பம் எண்டிட்டுப் போனம். அடேங்கப்பா! பெரிய பெரிய கொட்டகைகள் போட்டு நிகழ்வு பிரமாண்டமா நடக்குது. அங்கை போறதுக்கு முன்னத்தைய காலம் போல செக்கிங்குகள் எல்லாம் இருந்தாலும், அதுகளையும் தாண்டி நிகழ்வுக்குப் போயாச்சு. இருக்கையளிலை யாழ்ப்பாணத்தின்ரை ஒட்டு மொத்த அதிகாரிகளும் வந்து இருந்தாச்சு. எங்கட மக்கள் பிரதிநிதிகளும் வந்திட்டினம். இனி ஜனாதிபதி மட்டும்தான் வரவேணும். கொஞ்ச நேரத்திலை அவரும் வந்திட்டார். நிகழ்வு நடக்குது.

மாவட்டச் செயலாளர் உரையாற்றுறார். மது வரித்திணைக்கள நிபுணத்துவர் உரையாற்றுறார், சனாதிபதி உரையாற்றுறார், இந்த உரையள் எல்லாம் போதைப் பொருள்களை யாழ்ப்பாணத்திலை இல்லாமல் செய்யிறதாத்தான் கிடக்குது. நல்ல விசயம். அங்கை நடனக் காட்சிகளும் நடக்குது. அதுவும் போதை எதிர்ப்புத் தொடர்பானதாத்தான் கிடக்குது. நல்ல விசயம். ஏன் எண்டா நிகழ்வு போதை வஸ்துவுக்கு எதிரானதெல்லோ, அதுதான். யாழ்ப்பாணம் தான் போதையில் முதலிடத்தில் உள்ள மாவட்டம். இங்குதான் அதிக குடிமக்கள் உள்ளார்கள். திறைசேரிக்கு இங்கிருந்துதான் அதிக வருமானம் வருகின்றது. கொடிய போர் இடம்பெற்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட குடாநாடு, போதை எனும் மிகப் பெரிய நோயில் அகப்பட்டுவிட்டது. கடலால் சூழப்பட்டுள்ளதால் கஞ்சா இறக்குமதி செய்யப்படுகின்றது, என்று ஜனாதிபதி மேடையில ஏறி முழங்கித் தள்ளுறார். அந்த நிகழ்விலை கலந்து கொண்ட எல்லாரும் போதை வஸ்துவுக்கு எதிராக இடது கையை நீட்டிச் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளுகினம். அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், பொலிஸார், இராணுவத்தினர், கடற்படைத் தளபதிகள், மாணவர்கள், கிராம அலுவலர்கள், சுகாதார அதிகாரிகள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் எண்டு முழுப்பேரும் இந்தச் சத்தியப் பிரமாணத்தை எடுத்துக் கொள்ளுகினம். இது தான் நிகழ்விலையே, 'ஹைலைட்'டா எனக்குப் பட்டிச்சு. என்னெண்டு பாத்தியள் எண்டா, ஒரு பொது நிகழ்விலை இவங்க எல்லாம் கலந்து கொண்டு சத்தியப் பிரமாணம் எடுக்கினம். சத்தியப் பிரமாணம் எண்டா என்ன? சத்தியப் பிரமாணம் ஏன் எடுக்கிறது? எண்டு நான் சொல்லித் தெரியவேண்டிய தேவை இல்ல எண்டு நினைக்கிறன். அங்கை சத்தியப்பிரமாணம் எடுத்த எத்தனபேர். குடிக்கிறது இல்ல? எத்தின பேர் புகைக்கிறது இல்ல? அங்க கலந்து கொண்ட மாணவர்கள் தவிர மிச்சமிருந்த ஆள்களிலை 60 வீதமான ஆள்கள் இந்தப் போதைக்கு அடிமையானவர்கள் எண்டுதான் சொல்ல வேணும். இல்லை எண்டு சொல்லட்டும் பாப்பம். இது ஜனாதிபதிக்கும் தெரிஞ்சிருக்க வேணும். அதாலைதான் அந்த மனுசன் உரையாற்றும்போதும், ஒரு விசயத்த சொல்லிச்சு. இஞ்சை வந்திருக்கிற ஆள்களிலையும் போதை பயன்படுத்திறவர்கள் உள்ளார்கள் எண்டு. சத்தியப் பிரமாணத்துக்குப் பிறகும் சத்தியமா அவையள் போதையைக் கைவிடப் போறது இல்லை. பிறகு ஏன் அவையளைக் கையை நீட்டச் சொல்லியும் சத்தியப் பிரமாணத்தை எடுக்கச் சொல்லியும் சொல்லிச்சினமோ தெரியாது? நாட்டின்ரை எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒரு பொது நிகழ்வில், இவ்வாறான வேடிக்கை நிகழ்வுகள் மன வருத்தத்தைத் தருவதாகவே அமைகின்றன.

குடாநாட்டில் போதையை ஒழிக்க வேண்டுமானால், அது பெரிய விடயம் அல்ல, சந்திக்குச் சந்தி முளைத்திருக்கும் மதுபானக் கடைகளை உடனடியாக மூட வேண்டும், இல்லாது போனால், நிலையங்களைத் திறந்து வைத்திருப்பதில் நேரக்குறைப்புச் செய்யப்பட வேண்டும், அதுவும் இல்லாது விட்டால், கடைகளுடைய எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும், பாடசாலை மாணவர்கள் போக்குவரத்துச் செய்யும் பாதையிலை இந்தக் கடைகள் இருக்கக் கூடாது. கள்ளு விற்பனை நிலையங்களும் அவ்வாறே. குடி போதையில் தீங்கு விளைவிப்போருக்குத் தண்டனைகள் அதிகமாக வழங்கப்பட வேண்டும்.யார்எவர்எண்டுபார்க்காமல் பொலிஸார் கைதுகளை மேற்கொள்ள வேண்டும். (இங்குள்ள பொலிஸாரிடம் இது சரிப்பட்டு வராது.) இவைகள் எல்லாவற்றையும் சரிநிகராகச் செய்து வந்தால், கண்டிப்பாக யாழ். குடாநாட்டில் இருந்து மட்டுமல்ல இந்த நாட்டில் இருந்தும் போதை என்ற அரக்கனை விரட்டி அடிக்கலாம். எங்கடை அரசு இது பற்றியெல்லாம் தயாராக இல்லாத இடத்து இவை பற்றி நாம் சிந்திப்பது முட்டாள்தனமானதே.



உடுவிலூர் கலா

# சமத்துவம் பேணி வாழுங்கள் பெண்களே...!

திருமணம் ஓர் ஆத்மார்த்தமான உறவு. வாலிப வயதையடைந்த பெண்ணுக்கும் ஆணுக்கும் துணையை சட்டரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஏற்படுத்திக் கொடுப்பது திருமணம். சட்டரீதியாக ஆணும் பெண்ணும் இணையும்போது கணவன் – மனைவி என்கிற சமூக அங்கீகரிப்புக் கிடைக்கிறது. பெண் பருவ வயதையடைந்ததும், பெற்றோர் பலவித அங்கலாய்ப்புகள், சிந்தனைகள், ஏக்கங்கள் என்பவற்றோடு வாழும் நிலை ஏற்படுகிறது. மணமகனைத் தேடும் படலம் ஏற்படும்போது சீதனம் என்கிற ஒன்றினால் பெரும்பாலான பெற்றோர் திக்குமுக்காடுகின்றனர். மணமகன் வீட்டினால் கேட்கப்படும் சீதன அடுக்குகளால் மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்கின்றனர்.

இவ்வாறெல்லாம் கஷ்டப்பட்டு திருமண வாழ்வுக்குள் மகளை இணைத்துவிட்ட பெற்றோர் யாவருமே மகிழ்ச்சியாக, நிம்மதியாக இருக்கிறார்களா என்றால், அது கேள்விக் குறியே. திருமணத்தோடு பெற்றோர் முகம் காணாத பெண்பிள்ளைகள், உறவினர் வீடு தெரியாதவர்கள், கணவன் காலடியில் சுழலும் பெண்கள் எனப் பெண்கள் மாறிவிடும் கட்டாயநிலை உண்டு. பெண்பிள்ளைக்கு வாழ்க்கை ஒன்று வேண்டும் என்பதற்காக பிரிவுகளைக் கூடச் சந்திக்க பெற்றோர் தயாராகஉள்ளனர். இன்றைய பெண்பிள்ளைகளில் அநேகமானோர் தாமே வாழ்க்கையை தேடிவிட்டு பெற்றோரை நிர்க்கதியாக்குகின்றனர். பெண்ணின் மனதைக்கட்டிப் போடவல்ல ஆணின் வார்த்தைகளை நம்பி, பெற்றோரை வெறுத்துத் திருமண பந்தத்தில் இணையும் பெண்கள் விரைவில் நீதிமன்ற வாசலை நோக்கிச் செல்கின்றனர். ஆசை அறுபது நாள் என்பதை ஒவ்வொரு பெண்பிள்ளையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.. பெற்றோரின் அன்பிலும் அரவணைப்பிலும் வாழ்ந்த பெண் அவர்களை வெறுத்து ஆண் துணையைத்தேடுவதா? திருமணம் என்பது வாழ்வின் பகுதியே தவிர முழுமையானதல்ல. திருமண பந்தத்தில் இணையும் பெண் கணவனின் அன்பிலும் அரவணைப்பிலும் திளைத்து பிறந்த வீட்டிலும், புகுந்த வீட்டிலும் ஒளியேற்றி வாழும் போதே ஒரு பெண்ணின் திருமண வாழ்க்கை முழுமையடையும்.

திருமணம் கட்டாயமானது. முழுமையானது என நினைத்து கஷ்டங்கள், துன்பங்களைத் தாங்கி பெண்ணுக்கு திருமணம் செய்து வைக்கும் பெற்றோர், முழுமையான வாழ்வைப் பெண்ணுக்குக் கொடுத்து விட்டோம் என மன நிறைவு அடைகின்றனர். ஆனால், திருமணமே பெரும்பாலான பெண்ணுக்கு நிரந்தர கண்ணீரையும், வேதனையையும் கொடுத்து விடுகிறது. திருமண வாழ்வினால் சந்தோசத்தைத் தொலைத்து விட்டு பல திருப்புமுனைகளைச் சந்தித்து இறப்பு பரியந்தம் வேதனைகளைச் சுமக்கிற ஏராளமான பெண்களை நாமறிவோம். ஒரு பெண் கணவனை நம்பியே குடும்ப வாழ்வில் இணைகிறாள். அந்த நம்பிக்கையின் ஆதாரமாக ஆண் இருந்து விட்டால் பெண் மகிழ்ச்சியாக இருப்பாள். தவறின், வேதனைதான். ஆண் தனது ஆண்மையை வக்கிர உணர்வுகளோடு இணைத்துப் பெண்களை அதிகாரம் செய்யும்போது சமயலறை தொடங்கி சயன அறை வரை ஆணாதிக்கம் பெண்ணை நெறிப்படுத்தத் தவறுவதில்லை. பலவித எதிர்பார்ப்புக்களோடு மண வாழ்வுக்குள் பாதம் பதிக்கும் பெண் மனம் கலங்கி வேதனைகளைச் சுமந்து வாழ்கிறாள். ஆடும் பம்பரமாய், கட்டளையை செவிமேற்கொள்ளும் சேவகனாய், உள்ளம் பதற, உதடு சிரித்து வாழும் பெண்களே அதிகம். திருமண வாழ்வின் முக்கியத்தை, கட்டாயத்தை உணரும் பெண்கள் திருமண வாழ்வின் ஒவ்வொரு வினாடியையும் பற்றிச் சிந்திக்க வேண்டும். நாள் பார்த்து அட்சதை தூவி அக்கினி சாட்சியாய் அடிமை வாழ்வுக்குள் பெண்கள் பிரவேசிக்கிறார்கள் என்பதே உண்மை. எந்த ஓர் ஆணும் ஏதோ ஒரு நிலையிலாயினும் ஆணாதிக்கத்தைத் தக்க வைக்கத் தவறுவதில்லை. ஓர் ஆண் திருமணம் மூலமாக ஆணாதிக்கத்தைத் தன் மனைவி மீது உரிமையோடு நெறியாள்கை செய்கிறான். இங்குதான் கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன் எனப் பெண்ணடிமைக்கான வித்துக்களைப் பெண்கள் விதைக்கிறார்கள்.

பெண் விடுதலை கிடைத்து விட்டது என்று குரல் ஒலிக்கின்ற இந்தக் காலத்தில் தான் பெண்ணடிமை வலுப்பெற்று விட்டது. குடும்பங்களில் பெண்ணடிமை முழுமையாக இடம் பெறுகிறது. பெண்களின் தற்கொலைகள் பெருமளவில் அதிகரித்து விட்டன, காரணம் ஆணாதிக்க கொடூரங்களே. திருமணம் என்பது மிகச் சாதாரணமாக இடம்பெறுகிறது. பின் விவாகரத்தும் தாராளமாக இடம்பெறுகின்றன. பெண்களே சிந்தியுங்கள். திருமணம் தான் வாழ்க்கை என ஆண்களின் பின் அலையாதீர்கள். வறுமை நிலையிலும் கௌரவமாக வாழ்வதே வாழ்க்கை. ஆண்களின் சபல புத்திக்கு இடம்கொடுக்காதீர்கள். உங்களுடைய திருமண வாழ்விலும் பெற்றோரைக் கௌரவப்படுத்தி வாழுங்கள். திருமண வாழ்வில் கால் வைக்கும்போது கௌரவமாகக் கால் வையுங்கள். ஆணுக்குப் பெண் சமனாக வாழும் நிலையை ஆரம்பத்திலேயே உருவாக்குங்கள். சமுதாயத்துக்குப் பயந்து ஆணுக்கு அடிமையாகும் நிலையைத் தவிருங்கள். ஒழுக்கத்தில் கண்ணாயிருங்கள். உடலும், உள்ளமும் இணைந்து வாழும் திருமண வாழ்க்கையில் பெண்களை அடிமைப் படுத்தி, கொடுமைப்படுத்தி பெற்றோரை, உடன் பிறப்புக்களை ஓரங்கட்டி வாழும் நிலையை வரவேற்று வாழாதீர்கள். இரு கரங்கள் தட்டி இனிய ஓசையெழுப்பி இல்வாழ்க்கை வாழ ஆயத்தமாகுங்கள். முடிந்த வரை வாழுங்கள். முடியாது போனால், உங்கள் பாதையில் போய்க்கொண்டேயிருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்:** முக்கியமான செயலை மறக்க நேரிடலாம், கவனம். குடும்பத்தினரின் ஆதரவு உண்டு. தொழில், வியாபாரத்தில் உருவாகின்ற இடையூறுகளை, சரி செய்வீர்கள். உணவு விடயத்தில் விழிப்புடன் இருக்கவும்.

**இடபம்:** சிலர் உங்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு மாறாகச் செயற்படலாம். பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியா பாரத்தில், புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வருமானம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** இலட்சிய நோக்குடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், பணவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்தி, மனம் மகிழ்வீர்கள்.

**கடகம்:** சிரமமான சூழலையும், திறம்படச் சமாளிப்பீர்கள். உங்களின் சேமிப்பை நண்பர்கள் பாராட்டுவர்கள். தொழில், வியாபாரம் செழித்து, தாராள இலாபம் கிடைக்கும். குடும்பத் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** எதிலும் முன்யோசனையுடன் ஈடுபடுவது நல்லது. தொழில், வியாபார வளர்ச்சிக்கு, நண்பரின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் திடீர்ச் செலவு ஏற்படலாம். உறவினர்களைச் சந்திக்கும் வாய்ப்பு உருவாகும்.

**கன்னி:** எவரிடமும் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், சராசரி அளவில் பணவரவு கிடைக்கும். பயன் அறிந்து, வெளியூர் பயணம் மேற்கொள்வது நல்லது.

**துலாம்:** புதிய முயற்சி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், மறைமுகப் போட்டி மறையும். அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். நிலுவைப்பணம் வசூலாகும். தாயின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** சுய தேவையைப் பூர்த்தி செய்ய முயல்வீர்கள். உறவினரின் செயலைக் குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபார வளர்ச்சியில், தாமதம் ஏற்படலாம். சுமாரான வருமானம் கிடைக்கும்.

**தனுசு:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு நன்மை காண்பீர்கள். அனைவரும் அன்பு பாராட்டும் சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியில், வருமானம் அதிகரிக்கும்.

**மகரம்:** நண்பரின் செயலில், குறை காண வேண்டாம். ஆரோக்கியத்தில், அக்கறை கொள்வது அவசியம். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். வாகனப் போக்குவரத்தில் அளவான வேகம் நல்லது.

**கும்பம்:** நீண்டநாள் கனவு, இனிதே நிறைவேறும். உறவினர், நண்பர்கள் பெருமையுடன் வாழ்த்துவர். தொழில், வியாபாரம் செழிக்க, அதிக அளவில் பணிபுரிவீர்கள். குடும்பத்துடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மீனம்:** பெருந்தன்மையுடன் பிறருக்கு விட்டுக் கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், இருந்த தடை விலகும். உற்பத்தி, விற்பனை செழித்து ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.




அலுவலகத்துக்கு தாமதமாக வந்த பெண் ஊழியரை முகாமையாளர் திட்டியதால். அப்பெண் தற்கொலை முயற்சி - செய்தி.

அடியே கேணச்சிரிக்கி. அப்படிப் பார்த்தா நாங்க எல்லாம் தினமும் தூக்குல தொங்கணுமே கொஞ்ச நெஞ்ச திட்டா வாங்கியிருக்கோம். முகாமையாளர் எங்கள கழுவிக் கழுவி ஊத்தினாலும் நாங்க எப்பவும்போல லேட்டா தானே அலுவலகக்கு வந்துக்கிட்டு இருக்கோம். பழகிப் போச்சு மக்கா.

## சீனியர்களுடன் கை கோர்க்கும் ஜி.வி.பிரகாஷ்குமார்



ஜி.வி.பிரகாஷ்குமார் கடைசியாக நடித்த படம் 'எனக்கு இன்னொரு பேர் இருக்கு'. டார்லிங் படத்தில் அவரை நாயகனாக அறிமுகப்படுத்திய சாம் ஆண்டன் இயக்கிய இந்தப் படம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. எனவே, தற்போது நடித்து வரும் புரூஸ் லீ, கடவுள் இருக்கான் குமாரு ஆகிய படங்களை ரொம்பவே நம்பியிருக்கிறார் ஜி.வி.பிரகாஷ்குமார். இவற்றில் எம்.ராஜேஷ் இயக்கத்தில் உருவாகி வரும் 'கடவுள் இருக்கான் குமாரு' படத்தை மிகவும் நம்பியிருக்கிறார். இந்தப் படம் தீபாவளியன்று வெளியிடப்பட உள்ளது. புரூஸ் லீ படமும் நிறைவடையும் நிலையில் இருப்பதால், 'கடவுள் இருக்கான் குமாரு' படம் வெளியான சில வாரங்களிலேயே அந்தப் படமும் வெளியாக இருக்கிறது.
இந்த நிலையில், தற்போது தனது அடுத்த பட அறிவிப்பை வெளியிட்டுள்ளார் ஜி.வி.பிரகாஷ்குமார். 'அடங்காதே' எனப் பெயர் வைக்கப்பட்டுள்ள இந்தப் படத்தை 'ஸ்ரீ கிரீன் புரடெக்ஷன்' நிறுவனம் தயாரிக்கிறது. சண்முகம் முத்துசாமி என்ற புதிய இயக்குநர் இயக்கயிருக்கிறார். இந்தப்படத்தில் ஜி.வி.யுடன் இணைந்து முக்கிய கதாபாத்திரம் ஒன்றில் நடிகர் சரத்குமாரும் நடிக்கிறார். அடங்காதே படத்தில் மூத்த நடிகரான சரத்குமார் உடன் இணைந்து நடிப்பதைப் போலவே, பாண்டிராஜ் இயக்கும் படத்தில் ராஜ்கிரண் உடன் இணைந்து நடிக்கிறார்.




காலையில 5 மணிக்கு எழுவதால் ஒரு பெரிய நன்மை உண்டு. 'போன்'ன சார்ஜ்ல போட்டுவிட்டு மீண்டும் தூங்கி விடலாம்... 9 மணிக்குள்ள அது 'புல் சார்ஜ்' ஆயிடும்!



**லிகிதா ரோஷினி** @Ro

உங்களுக்கு மதிப்பில்லை என்று நீங்கள் உணரும் இடங்களில் மௌனமாக இருக்கப் பழகுங்கள், காலப்போக்கில் உங்கள் மௌனம் உங்களுக்கான மதிப்பை அங்கே ஈட்டித்தரும்.

880 551




## சுடோக்கு எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | | | | | |
| | 5 | 3 | | | 6 | 1 | | 8 |
| 4 | 1 | 2 | | 8 | | | | |
| 1 | 4 | | | | | 8 | | |
| | 3 | | | | | | 4 | |
| | | 5 | | | | | 2 | 6 |
| | | | | 2 | | 9 | 8 | 7 |
| 5 | | 9 | 7 | | | 3 | | |
| | | | | | 9 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 1 | 9 | 6 | 4 | 7 | 3 | 5 |
| 7 | 4 | 3 | 1 | 2 | 5 | 9 | 8 | 6 |
| 5 | 6 | 9 | 8 | 3 | 7 | 1 | 2 | 4 |
| 2 | 3 | 6 | 5 | 1 | 9 | 4 | 7 | 8 |
| 4 | 8 | 5 | 6 | 7 | 2 | 3 | 9 | 1 |
| 9 | 1 | 7 | 4 | 8 | 3 | 6 | 5 | 2 |
| 1 | 5 | 4 | 3 | 9 | 8 | 2 | 6 | 7 |
| 6 | 9 | 2 | 7 | 5 | 1 | 8 | 4 | 3 |
| 3 | 7 | 8 | 2 | 4 | 6 | 5 | 1 | 9 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## இது புதுசு

ஹோல் அலங்கார தளபாடங்கள் அறிமுகமாகியுள்ளது. தொலைக்காட்சி மாத்திரமன்றி, வேறு பொருள்களையும் அமைவிடப்படுத்தக்கூடிய, சோகேஸ்சை உள்ளடக்கிய செல்ப்ஸ்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இந்தத் தளபாடம் மூலம், இட நெருக்கடியை தவிர்த்துக் கொள்ளலாம். இது 35 ஆயிரம் ரூபா முதல் விற்பனை செய்யப்படுகின்றன.

## நாளை

**ஆவணி-28**


செவ்வாய்க்கிழமை -13.09.2016
திதி: துவாதசி பி.இ.05.06
நட்சத்திரம்: உத்தராடம் மு.ப.08.57
ராகுகாலம்: 03.03-04.33 வரை
சுபநேரம்:10.33-12.03 வரை
ஆவணி ஓணம்



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 60 | 40 | 40 | 30 | 30 |
| கத்தரி | 60 | 50 | 80 | 70 | 40 | 40 | 90 | 30 |
| கரட் | 80 | 100 | 120 | 100 | 100 | 100 | 110 | 90 |
| மரவள்ளி | 80 | 90 | 80 | 80 | 80 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 60 | 40 | 80 | 40 | 40 | 40 | 100 | 50 |
| பாகல் | 100 | 70 | 160 | 80 | 100 | 120 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | 120 | 160 | 100 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 90 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 90 | 80 | 70 | 120 | 90 | 90 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 30 | 60 | 70 | 20 |
| தக்காளி | 40 | 60 | 50 | 60 | 40 | 80 | 120 | 35 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 | 100 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 40 | 20 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 30 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 70 | 80 | 100 | 70 | 100 | 200 | 80 |
| புடோல் | 50 | 40 | 35 | 60 | 40 | 40 | 70 | 30 |
| கோவா | 80 | 80 | 80 | 100 | 80 | 100 | 90 | 40 |
| வெண்டி | 80 | 80 | 80 | 80 | 40 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 180 | 160 | 80 | 170 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 120 | 80 | 100 | 90 | 90 |
| தேங்காய் | 40 | 35 | 50 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 180 | 200 | 300 | 140 | 300 | 200 | 120 | 180 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 120 | 80–100 | 100 | 200 | 80 |
| இராசவள்ளி | 100 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 160 | 150 | 150–200 | 140 | 160 | 200 | 80 | 100 |



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 800 | 700 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 800 | 600 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | 500 | 500 |
| சுறா | 500 | 650 | 500 | 800 | 800 | 700 | 550 |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 400 | 500 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 450 | 300 | 500 |
| முரல் | 300 | 500 | 300 | 500 | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 450 | 300 | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 300 | 200 | – |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 400 | 600 | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | 300 | 200 |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 400 | 400 | 150 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 300 | – | 250 |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 300 | 400 | – |

## நீங்க தினமும் சாப்பிடும் சில உணவுகள் உங்க மூளையின் ஆரோக்கியத்தை அழிக்கின்றன

உடலிலேயே மூளை மிகவும் முக்கியமான உறுப்பு என்பது அனைவருக்கும் தெரியும். மூளை சரியாக செயற்படாவிட்டாலோ அல்லது ஆரோக்கியமின்றி இருந்தாலோ, உடலின் இதரச் செயற்பாடுகளிலும் பாதிப்புகள் ஏற்படும்.

மேலும், இன்றைய காலத்தில் அறிவாற்றல் சிறப்பாக இருந்தால்தான், வேலையை தக்க வைத்துக்கொள்ள முடியும். அதற்கு மூளையின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் உணவுகளை அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஆனால் நாம் அன்றாடம் சாப்பிடும் சில உணவுகள் நம் மூளையின் ஆரோக்கியத்தைக் கெடுக்கிறது என்பது தெரியுமா? இவ்வாறான உணவுகளை தினமும் எடுத்துக் கொள்ளாமல் விடுவது மூளை மட்டுமன்றி உடலுக்கும் நல்லது.

**செயற்கை சுவையூட்டிகள்**

ஆய்வு ஒன்றில் உணவுகளில் சேர்க்கப்படும் செயற்கை சுவையூட்டிகள் மூளைச் செல்களை சிதைவுறச் செய்து, நாளடைவில் அல்சைமர் என்னும் ஞாபக மறதி நோய்க்கு வழி வகுக்கும்.



**மீன்**

குறிப்பிட்ட மீன்களில் அதிகப்படியான அளவில் மொர்குரி இருக்கும். இப்படி மொர்குரி அதிகம் நிறைந்த மீன்களை அடிக்கடி சாப்பிட்டால், மூளைச் செல்கள் பாதிக்கப்பட்டு, அதனால் கடுமையான மூளை பாதிப்பால் அவஸ்தைப்படக்கூடும்.

## சவ்வரிசி அப்பளம்



**தேவையான பொருள்கள்:**

சவ்வரிசி – 250 கிராம்
பச்சை மிளகாய் – 8
உப்பு – தேவையான அளவு
பெருங்காயம்
எலுமிச்சம் பழம் – 2

**செய்முறை**

முதலில் பச்சை மிளகாய், உப்பு, பெருங்காயத்தை மிக்ஸியில் விழுதாக அரைத்துக் கொள்ளவும்.

ஒரு பாத்திரம் அல்லது குக்கரில் தண்ணீர் வைத்து, கொதித்ததும் சவ்வரிசியைச் சேர்த்து கட்டி படாமல் கிளறிக்கொண்டே இருக்க வேண்டும்.

நிதானமான சூட்டில் ஒரு கொதி வந்ததும் அரைத்த மிளகாய் விழுதைச் சேர்க்கவும். தண்ணீர் தேவையானால் சிறிது சிறிதாக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சவ்வரிசி பாதி வெந்ததும், மேல் பாகம் கண்ணாடிபோல் ஆகி, உள்ளே சிறிதுமட்டும் வெள்ளை தெரியும்போது மூடிவைத்து, அடுப்பை அணைத்துவிடவும்.

உள் சூட்டிலேயே இன்னும் சிறிது வெந்து கலவை ஆறியதும், எலுமிச்சைச் சாறு சேர்த்து சுவைத்துப் பார்த்து திருத்தலாம். கெட்டியான விழுதாக இருக்கும் இந்தக் கலவையை சிறிய எலுமிச்சை அளவு உருண்டைகளாக உருட்டி, பிளாஸ்ரிக் பேப்பரில் வைத்து, தண்ணீரைத் தொட்டுத் தொட்டு, கையால் பெரிதாக அப்பளமாகத் தட்டவும்.

இரண்டு பக்கமும் வெயிலில் காய்ந்ததும் எடுத்துவைத்து விரும்பும்போது எண்ணெயில் பொரிக்கலாம்.

இந்த வகை அப்பளத்துக்கு சவ்வரிசிக்கு மொத்தமாக நீர்விட்டு கொதிக்கவிடக்கூடாது. சிறிது சிறிதாக குளிர்ந்த நீர் விட்டு கொதிக்கவிட்டால்தான் சவ்வரிசி ஒட்டாமல் வெந்து, கரையாமல் முத்து முத்தாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொமர்ஷல் வங்கியின் கிளிநொச்சிக் கிளை ஏற்பாட்டில் 'அருணலு' சேமிப்புக் கணக்கைப் பேணி 2015 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அண்மையில் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (த)

# மேலும் புலமைப் பரிசில்கள் வழங்கும் செலிங்கோ லைப்

செலிங்கோ லைப் தொடர்ந்தும் தனது 16 ஆண்டாகப் பிரணாம புலமைப்பரிசில் திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளது. இந்த நாட்டின் இளம் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆயுள்காப்புறுதியின் தலைமைச் செயற்றிட்டத்தின்கீழ் குறித்த சிறப்புப் புலமைப் பரிசில் நடைமுறைப்படுத்தப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டின் முதற்பகுதியில் வழங்கப்படும் இந்தப் புலமைப் பரிசில் திட்டம் 4 விசேட வகைப்பாட்டின் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. இதனடிப்படையில் 160 மாணவர்களுக்கு மொத்தம் 10 மில்லியன் பணத் தொகையை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள சுமார் 250க்கும் மேற்பட்ட செலிங்கோ லைப் கிளைகளின் ஊடாக இந்தப் புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த விண்ணப்பத்தை நவம்பர் மாதம் 30ஆம் திகதிவரை அனுப்பிவைக்க முடியும்.

செலிங்கோ லைசெலிங்கோ லைப் தொடர்ந்தும் தனது 16 ஆண்டாகப் பின் பிரணாம புலமைப்பரிசில் திட்டமானது பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்காகவும் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில்சிறப்புத்திறமையை வெளிக்காட்டும் மாணவர்களுக்காகவும் உருவாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியாகச் சிறந்த பெறு பேற்றைப் பெற்ற மாணவர்களும், க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தரம் பரீட்சைகளில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றவர்கள் மற்றும் தேசிய மட்டத்தில் விளையாட்டு, நாடகம், புத்தாக்கம் ஆகிய துறைகளில் சிறப்புத் திறமையை வெளிக்காட்டிய மாணவர்களும் பிரணாம புலமைப்பரிசில் திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியும்.

மேலும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாவட்ட ரீதியாக முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு விசேட பணப்பரிசில் தொகையும் வழங்கப்படவுள்ளது.

இதனடிப்படையில்தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியாக சிறந்த பெறுபேற்றைப் பெற்ற 25 மாணவர்களுக்கு 120,000 ரூபா பெறுமதியானப் பணப்பரிசில் 5 வருடங்களுக்கும், க.பொ.த சாதாரண தர பரீட்சையில் வெற்றி பெற்று குறித்த புலமைப்பரிசிலுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 84,000 ரூபா 2 வருடங்களுக்கும் மற்றும் க.பொ.த உயர்தரம் பரீட்சைகளில் சாதனை படைத்தவர்களுக்கு 144,000 ரூபா பெறுமதியான பணப்பரிசில் 3 வருடங்களுக்கும் வழங்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## யூனியன் வங்கி 2ஆம் காலாண்டில் வலுவான பெறுபேறுகள் பதிவு

UNION BANK

யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி மற்றும் அதன் துணை நிறுவனங்களான (குழுமம்) யு.பி பினான்ஸ் லிமிட்டெட், நஷனல் அசெட்ஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆகியன 2016 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் வரிக்குப் பிந்திய இலாபமாக 197 வீதம் என்ற குறிப்பிடத் தக்க வளர்ச்சி வீதத்துடன், குறிப்பட்ட காலப் பகுதியில் ரூ. 275 மில்லியனைப் பெற்றுள்ளது.

குழுமத்தின் வருவாயானது, 23 வீத வளர்ச்சியுடன் குறிப்பிட்ட காலப்பகுதியில் ரூ. 1,655 மில்லியனை ஈட்டியது. குழுமத்தின் மொத்தச் சொத்து ரூ. 88,946 மில்லியனாக விளங்குகின்றது. வங்கியின் குறித்த காலப் பகுதிக்கான வரிக்குப் பிந்திய இலாபம் ரூ. 154 மில்லியனாக அதிகரித்ததுடன், 156 வீத வருடா வருட அதிகரிப்பைப் பெற்றுள்ளது. நிலையான முன் னேற்றத்தைக் காண்பித்தவாறு, வங்கியின் மொத்தச் செயற்பாட்டு வருமானம், 23% வருடாவருட அதிகரிப்பைப்பெற்று ரூ.1665 மில்லியனாக உயர்ந்துள்ளதாகக் கூறப்பட்டது.

வர்த்தகக் கடன்கள், அட்டைகள் மற்றும் வர்த்தக பரிவர்த்தனைகள் முதன்மை பங்களிப்பாளர்களாக விளங்க, குறிப்பிட்ட காலப்பகுதியில் வங்கியின் நிகர கட்டணம் மற்றும் கமிஷன் வருமானம் முன்னைய வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 121வீத அதிகரிப்புடன் ரூ. 121 மில்லியன் மேம்பாட்டைவீதம் வெளிப்படுத் தியது. முதலீடுகள் மீதான நிகர ஈட்டல்கள் 251வீத வளர்ச் சியுடன், ரூ. 278 மில்லியன்களை பதிவு செய்தது. (த)

## நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் முதலீட்டாளர்கள் கூட்டம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் 2016ஆம் ஆண்டுக்கான முதலீட்டாளர் பொதுக்கூட்டம் 6ஆவது தடவையாகவும் வெற்றிகரமாக ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்தப் பொதுக்கூட்டம் வங்கியின் 2016ஆம் ஆண்டுக் கான முதலாம் காலாண்டின் மூலதன இலாபங்கள் மற்றும் வங்கி பூர்த்தி செய்த ஏனைய மைல்கல்களை முக்கியத்துவப்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மூலதன ஆலோசகர்கள், பங்குச்சந்தைத் தரகர்கள் மற் றும் நிதி முகாமைத்துவ அதிகாரிகள் போன்ற பலரும் கலந்து சிறப்பித்த இந்தப் பொதுக்கூட்டம் வங்கியின் நீண்டகால நோக்கு, செயற்றிறன்களை மேம்படுத்தும் முறைகள் பற்றியும் கவனிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## நாணய மாற்று விகிதம்

| | |
|---|---|
| பஹ்ரைன் (தினார்) | -386.34 |
| ஐ.இராச். (பவுண்டு) | -193.21 |
| ஐரோப்பியா (யூரோ) | -163.58 |
| சுவிஸ் (பிராங்) | -149.32 |
| ஐ.அமெ.(டொலர்) | -145.64 |
| கனடா(டொலர்) | -111.51 |
| ஆஸி.(டொலர்) | -109.80 |
| சிங்கப்பூர் (டொலர்) | -107.1[illegible] |
| கட்டார் (ரியால்) | [illegible] |

## நுட்பம்

# தைரியமா? தந்திரமா?

ஹெட்போனை செருகக்கூடிய துளை இல்லாமல் ஐபோன்-7, ஐபோன்-7 பிளஸ் ஸ்மார்ட் போன்களை வடிவமைத்த அப்பிள் நிறுவனம் பல விமர்சனங்களை எதிர்கொள்கிறது.

ஹெட்போன் துளை அப்புறப்படுத்தியதன் மூலம் அப்பிள் தைரியமான நடவடிக்கையை எடுத்துள்ளதென ஒருசாரார் கூற, இது அப்பிளின் வியாபார தந்திரம் என்று மறுசாரார் சாடுகிறார்கள்.

சகல வகை ஸ்மார்ட்போன்களிலும் 3.5 மி.மி துளை உள்ளது. இதில் ஹெட்போனை செருகுவதன் மூலம் போனிலுள்ள பாடல்களையும், ஏனைய ஒலி சமிக்ஞைகளையும் கேட்க முடியும்.

இந்தத் துளையில் செருகப்படும் ஹெட்போன் மூலம் அனலொக் வடிவில் ஒலி சமிக்ஞைகள் கேட்கின்றன.

அப்பிள் போனில் லைட்னிங் கனெக்டர் என்ற வசதி உண்டு. இதன்மூலம் டிஜிற்றல் வடிவில் துல்லியமான ஒலி சமிக்ஞைகளைக் கேட்கக் கூடியதாக இருக்கும்.

ஐபோன்-7 அறிமுக விழாவில் பேசிய அப்பிளின் சந்தைப்படுத்தல் தலைவர் பில் ஷில்லர், புதியதை நோக்கி நகர தைரியம் வேண்டும்- என்றார்.

அனலொக் ஹெட்போன் தொழில்நுட்பம் சொனி நிறுவனத்தின் ட்ரான்சிஸ்ற்றர் ரேடியோ காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். அதனை ஓரங்கட்டிவிட்டு புதியதை நோக்கி நகரும் தேவை பற்றி பலர் பேசுகிறார்கள்.

ப்ளொப்பி டிஸ்கில் இருந்து சீடி நோக்கி மாறிய போதும், சீடியில் இருந்து பென் டிரைவ் நோக்கி மாறியபோதும் பலர் விமர்சித்தார்கள். அந்த மாற்றங்களால் நன்மையே நிகழ்ந்துள்ளது. அதைப் போலத்தான் அனலொக் ஹெட் போனும் என்கிறார்கள் ஒரு சாரார்.



இது தவிர அனலொக் ஹெட்போனுக்குரிய கருவிகளைப் போனில் சேர்ப்பதற்கு அதிக இடம் தேவைப்படுகிறது.

இதன் காரணமாக, போன்களை மெல்லியதாக மாற்ற முடியவில்லை.

அனலொக் ஹெட்போனை அப்புறப்படுத்துவதன் மூலம் பற்றரியின் கொள்ளளவை அதிகரித்து, போனின் பயன்பாட்டு நேரத்தைக் கூட்டலாம் எனவும் அவர்கள் வாதிடுகிறார்கள்.

ஐபோன்-7 ஸ்மார்ட்போனை விலை கொடுத்து வாங்க பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் காத்திருக்கிறார்கள்.

இவர்கள் போனிலுள்ள ஒலியைக் கேட்பதற்கு இரண்டு வழிகள் உள்ளன. லைட்னிங் கனெக்டர் ஒருவழி. வயர்கள் இல்லாத ப்ளூருத் ஹெட்போன்கள் அடுத்த வழி.

இந்த இரண்டையும் விலைகொடுத்து வாங்க வேண்டிய தேவை வாடிக்கையாளருக்கு உண்டு. இந்தக் கருவிகளை விற்பனை செய்வது அப்பிள் நிறுவனம் என்பதால், இதன் மூலம் பயன்பெறப்போவது அப்பிள் நிறுவனம் தானென விமர்சகர்கள் சாடுகிறார்கள்.

இது தவிர, ஐபோன்களுக்காகப் புதிய ஹெட்போன்களைத் தயாரிக்கும் எந்தவொரு நிறுவனமும் அப்பிளின் லைசென்ஸைப் பெற வேண்டும். இது அப்பிளின் வருமானத்தையே அதிகரிக்கும்.

ஐபோன்-7 இற்காக தயாரிக்கப்படும் புது வகை ஹெட்போன்களை வேறெந்த ஸ்மார்ட் போனிலும் பயன்படுத்த முடியாது. அவற்றைப் பயன்படுத்த வேண்டுமாயின், ஏனைய நிறுவனங்களும் அப்பிளின் வழியைப் பின்பற்றி லைட்னிங் கனெக்டர் அல்லது ப்ளூருத் ஹெட்போன்கள் உள்ள போன்களை உருவாக்குவது அவசியம்.

இதில் முக்கியமான விடயம் யாதெனில், அப்பிள் நிறுவனம் கடந்த புதன்கிழமை அறிமுகப்படுத்திய ப்ளூருத் ஹெட்போனின் விலை 159 டொலர்கள். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் தோற்றதற்குக் காரணம் என்ன? விளக்குகிறார் கமால் குணரத்ன

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குற்றச்சாட்டை நான் முற்றாக மறுக்கிறேன். இவரை இராணுவத்தினர் ஒருபோதும் உயிருடன் பிடிக்கவில்லை. இது பிழையான குற்றச்சாட்டு.

இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றுவிட்டீர்கள். தற்போது நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?

30 ஆண்டுகளுக்கும் மேலாக நான் அணிந்த சீருடையைக் கழற்றிவிட்டேன். நான் வெற்றி பெற்ற சிறிலங்கா இராணுவத் தின் பெருமைக்குரிய வீரனாக செப்ரெம்பர் 5 ஆம் திகதி ஓய்வுபெற்றேன். நான் ஒருபோதும் தோல்வியுற்ற வீரனாக ஓய்வுபெற விரும்பவில்லை. ஆகவே நான் எனது கனவை நனவாக்கி விட்டேன். இனி நான் எனது குடும்பத்தாருடன் சாதாரண வாழ்க்கை வாழ்வேன்.

எனக்கு மட்டுமல்லாது, போரில் கட்டளையிட்ட எனது சக அதிகாரிகளும் தமது இளமைக்காலம் முழுமையையும் புலிகள் அமைப்புடன் போரிடுவதற்காக காடுகளில் செலவிட்டதன் மூலம் தமது வாழ்வை அர்ப்பணித்தனர். நாங்கள் அதிகளவான தியா கங்கள், ஈடுபாடுகள் மற்றும் அர்ப்பணிப்புக்களின் மூலம் சமா தானத்தை எட்டினோம். நிலையான சமாதானம் ஒன்றை நாட்டில் தொடர்ந்தும் தக்கவைத்திருக்க வேண்டியது இந்த நாட்டின் அரசியல் தலைமையின் பொறுப்பு என நான் கருதுகிறேன்.

நாங்கள் நல்லிணக்கம் தொடர்பாகக் கதைக்கிறோம். ஆனால் நில அதிகாரம், அதிகாரப் பகிர்வு, காவல்துறை மற்றும் நீதி சார் அதிகாரம், சிங்களவர் என்ற வகையில் கிளிநொச்சி வைத்தியசாலை பொறுப்பதிகாரியை நீக்குமாறு கோரிக்கை விடுத்தமை தொடர்பான கோரிக் கைகளை நாங்கள் செவிமடுக்கிறோம். தேசிய கீதத்தை நாங்கள் தமிழில் இசைத்தோம். ஆனால் மீளிணக்கம் இடம்பெறவில்லை. சமாதானத்தைக் குழப்பும் அண்மைய சில செயற்பாடுகள் தொடர்பாக அரசு விழிப்புடன் இருக்கவேண்டும். அரசியல் தலைமையானது இவற்றை அகன்ற திரையின் ஊடாகப் பார்க்க வேண்டிய தேவையுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் புத்துயிர் பெறுவார்கள் என நீங்கள் கருதுகிறீர்களா?

இந்தச் சூழலானது சரியான முறையில் கையாளப் படாவிட்டால், புலிகள் மீண்டும் புத்துயிர் பெறுவார்கள். ஏனெனில் 12,400 வரையான முன்னாள் போராளிகள் சமூகத்தில் வாழ்கின்றனர். இவர்கள் முழுமையான புனர்வாழ்வுப் பயிற்சிக்கு உட்பட்டாலும்கூட, பொதுமக்களுடன் 100 வீதம் ஒன்றிணைந்து வாழ்கின்றனர் எனக் கருதமுடியாது. இவ்வாறானதொரு சூழல் உருவாகினாலும் கூட பிரபாகரனின் தலைமைத்துவம் போன்று புதிய தலைமைத்துவமானது வினைத் திறனுடன் செயற்படாது.

புலிகள் அமைப்புத் தொடர்பான கருத்தியலானது தற்போதும் உயிர்பெற்று வாழ்வதால் இவர்கள் மீண்டும் புத்துயிர் பெறலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலானது ஈழம் மட் டுமே என்பதால் அவர்கள் தமிழ் அரசியல் தலைவர்கள் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

## தம்முடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத்து 200 மில்லி யன் ரூபாவில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங் கள் எவை என்பது தொடர்பில் தங்களுக்குத் தெரியாது எனவும், சபை உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

'வடக்கு மாகாண சபையின் முன்னைய வரவு - செலவுத் திட்ட விவாத உரையில் நான் ஒரு விடயத்தை குறிப்பிட்டிருந் தேன். அதிகாரிகள் தயாரித்துத் தரும் வரவு - செலவுத் திட் டத்துக்கு நாம் இங்கே இருந்து ஆதரவு தர முடியாது என் பதைச் சுட்டிக்காட்டியிருந்தேன். தற்போதும் அதனையே செய்துள்ளனர். எங்களது கருத்துக்கள் உள்வாங்கப்படாமல் அதிகாரிகளின் கருத்துக்களையே முதன்மைப்படுத்தி அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தயாரித்துள்ளனர். அமைச்சு மட்ட ஆலோசனைக் கூட்டத்தில், மக்களின் தேவைகள் - செய்ய வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஏதாவது தெரிவித்தால் அதற்கு சாக்குப் போக்குச் சொல்லி தட்டிக்கழிப்பார்கள். கொழும்பு அரசு நிதி தராது என்று சொல்வார்கள்.

10 ஆயிரத்து 200 மில்லியன் ரூபாவில் என்ன அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்வது என்பது எனக்குத் தெரியாது. எங்களிடமிருந்து அதற்கான ஆலோசனையும்பெறப்படவில்லை' என்று வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, எங்களிடம் வரவு - செலவுத் திட்டத்துக்கான கருத்துக்கள் எதனையும் உள்வாங்கவில்லை. கொழும்பு அரசின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்காக நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை உள்வாங்கியே வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கின்றார். ஆனால் வடக்கு மாகாண சபையினால் மேற்படி நிதிக் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ள போதும், அதில் எந்த அபிவிருத்தித் திட் டங்கள் மேற்கொள்வது என்பது தொடர்பில் எங் களிடம் எதுவும் கேட்கப்பட வில்லை என்றார். (வ-5)


## முன்பள்ளி...

வழங்கப்பட்டது. அதனடிப்படையில் வடக்கு மாகா ணத் துக்கு 54 ஆளணி அங்கீகரிக்கப்பட்டது. இந்த ஆளணி இன்னமும் நியமிக்கப்படாமல் வெற்றிடமாகவே உள்ளது. முன்பள்ளி ஆசிரியர்கள் நியமனத்துக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்பு தயாரிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாகவே இந்த வெற்றிடம் இன்னமும் நிரப்பப்ப டாமல் உள்ளது என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

சேவைப் பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்டு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்படும். பின்னர் அது கொழும்பு அரசின் பொதுச்சேவை ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும். அவற்றினால் ஒவ்வொரு தடவையும் திருத்தங்கள் முன்வைக்கப்படுகின்றன. இதனாலேயே சேவைப் பிரமாணக் குறிப்பை தயாரித்து முடிப்பதில் கால தாமதம் ஏற்படுவதாக, வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-5)

## மரண அறிவித்தல்

### பிரகாசம் மரியநாயகம் (ஞானம் ஐயா)



இல. 10. மத்தியகிழக்கு வீதி, குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரகாசம் மரியநாயகம்(ஞானம் ஐயா) கடந்த 08.09.2016 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி பிரகாசம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி. அ.இராசையாவின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற றெஜினாவின் (புஸ்பம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா , ஜோன்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் காலஞ் சென்றவர்களான அருளப்பு. பொன்னு. செல்லத்துரை ஆகியோரின் மைத்துனரும் ம.ஞானசீலன் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் யா. பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம். ஆ.வைத்தியசாலைகள்- தெல்லிப்பழை. ஊர்காவற்றுறை). கி.மேரிறோஸ்(பட்டு). யூலியற் சாள்ஸ்(ஜேர்மனி). ப.ஆனந்தி. சி.மேரிலில்லி(இளைப்பாறிய உத்தியோகத்தர் விற்பனை அபிவிருத்தி திணைக்களம். யாழ்ப்பாணம்). ஞா.யூலியஸ்(சுவிஸ்). ஞா.மோகன். ஞா.வனிதா. மோ.இராஜேஸ்வரி(ஜேர்மனி) ஆகியோரின் தகப்பனும் ஞா.மேரி மக்டலின். காலஞ்சென்ற கில்பட் மற்றும் சாள்ஸ்(ஜேர்மனி). கொன்சன். சொலமன். சூ.சிறில்(முன்னாள் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்). யூ.ரதி(சுவிஸ்). மோ.நளினி. மோகன்(ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் கி.றொ.றேகன் - செரிபா(ஆஸ்திரேலியா). கி.ஜெ.பிரபு - மொறின்(ஆஸ்திரேலியா). கி.ஜெ.துஷ்யந்தன்(ஜேர்மனி). கி.பொக்ஸன்(ஆஸ்திரேலியா). கி.பானுமதி. சந்துரு. ஞா.கிறேஸ்சுமதி(உள்ளகப் பயிற்சி ஆசிரியை - யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி). தமிழினி. கப்றினா. சியாந்தினி. லிபினா. ஞா.நிலக்சன்(மாணவன்- புனித பத்திரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம்). சாளிங்ரன். நதியா- சுமித் (ஆசிரியர் - வவுனியா நாகராசா வித்.). சிந்து - அமிர்தன் (சுவிஸ்). யூடி. சோபி. சாரா(சுவிஸ்) ஆகியோரின் பேரனும் றிசாந். சண்டீவ். றொனால்டோ. செரினா (ஆஸ்திரேலியா). மானிஸா. றெபிஷா. அன்றிசா. அன்றீசன். அன்ரீனா(சுவிஸ்) ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.09.2016) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பரி.மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பரி.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குருநகர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னலட்சுமி வீரசிங்கம்



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சரவணை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி வீரசிங்கம் நேற்று (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் தகனக்கிரியைக்காக நாரந்தனை 8ஆம் கட்டை கோம்ப மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புளியங்கூடல் வடக்கு,**
**வடக்கு ஒழுங்கை,**
**ஊர்காவற்றுறை.**

(J/4552)
(11,17,18)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### திருமதி இராசலட்சுமி இராசையா



சிந்துவாம்பிட்டி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு, சிவன்வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி இராசையா 10.09.2016 சனிக் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னத்தங்கம் தம்பதியினரது அருமை மகளும் இராசையாவின் அன்பு மனைவியும் அன்னலட்சுமி, தங்கலட்சுமி, செல்வலட்சுமி, சரோஜா, மல்லிகாதேவி, அருந்தவராசா, புனிதவதி(பிரான்ஸ்) ஆகியோரது அன்புச் சகோதரியும் சசிதரன்(லண்டன்), சசிகர், சிலோசனா, நவசீலன் (லண்டன்), நவநீதன்(லண்டன்) ஆகியோரது அன்புத் தாயாரும் ராயினி, குமுதினி, ஜெகானந்தம், செல்வி, ரேகா ஆகியோரது அன்பு மாமியாரும் கஜானன், ஆகாஸ், பிரனவீ, பிரகாஸ், கஜானி, கனிஸ்டா, கஜீபன், ஜெனுசினி, ஜெனுசன், ஜெனாத்தன், றோமிசியா, றிசிக் ஆகியோரது அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (12.09.2016) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் உரும்பிராய்கிழக்கு, சிவன்வீதியிலுள்ள அன்னாரது மருமகனது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிவன் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**பொ.ஜெகானந்தம்**
**(மருமகன்)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

கொண்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு போரின் போதும், அதற்கு பின்னரும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் பெரும்பாலானவை தொடர்பில் விசாரணைகள் இடம்பெறவில்லை. விசாரணை செய்யப்பட்டவிடயங்களில் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவில்லை.

இந்தநிலையில் ஐ. நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை உறுதியளித்த நீதி, உண்மை, மீண்டும் எழாத வன்முறை போன்ற பரிந்துரைகளில் பெரும்பாலானவை இன்னும் கிடப்பில் உள்ளன.

காணாமற்போனோர் அலுவலகம், காணாமற்போனோரின் உறவினர்களிடம் அவர்களின் உறவுகள் குறித்த தகவல்களைப் பகிர வேண்டும். அத்துடன் தகவல் அறியும் சட்டத்தின் மூலம் இரகசியத் தகவல்கள் என்ற விடயம், காணாமற்போனோர் அலுவலகத்துக்குப் பொருந்துவதை தவிர்க்க வேண்டும்.

காணாமற்போன தமது உறவுகளின் நிலை குறித்து அவர்களின் உறவினர்கள் இதன் போது தகவல்களை அறிந்து கொள்ள முடியும் என்று மன்னிப்புசபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

(வ-5)

## ஒருங்கிணைப்புக்...

சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் எப்போது நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது திங்கட்கிழமையிலும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் ஒவ்வொரு மாதத்தின் கடைசி திங்கட்கிழமையிலுமே நடத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இந்த மாதம் 26 ஆம் திகதியும், ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதியும், நவம்பர் மாதம் 28 ஆம் திகதியும், டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதியும் நடத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதியும், நவம்பர் மாதம் 7 ஆம் திகதியும், டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதியும் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (வ-5)

## தடை...

குளமாகிய இரணைமடுக் குளத்தின் சீரமைப்புப் பணிகள் இடம்பெறுகின்றன. இந்தக் குளத்தின் சீரமைப்புக்காக நடப்பு ஆண்டின் சிறுபோகம் நிறுத்தப்பட்டது.

குளச் சீரமைப்பு ஆரம்பித்த பின்னர், அதற்குத் தேவையான மண் பெறுவதில் இடர் நிலைமை ஏற்பட்டது. வனவளத் திணைக்களத்தினாலும், பின்னர் மாவட்ட எல்லை வேறுபாட்டினாலும் பணிகளில் தடங்கல் ஏற்பட்டது. இறுதியில் தொல்பொருள் திணைக்களத்தினாலும் இதற்குத் தடை ஏற்படுத்தப்பட்டது.

இதனால் குறித்த காலத்தில் குளத்தின் சீரமைப்பு முடிவுறாத நிலைமை ஏற்பட்டது. அத்துடன் அடுத்த ஆண்டும் சிறுபோக விவசாயம் தடைப்படும் அபாயம் ஏற்பட்டது. இதனையடுத்து இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.


இதற்கிடையில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு சென்றிருந்தார். ஜனாதிபதி மேற்படி விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே நேற்று முதல் மண் அகழ்வுப் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் மண் அகழ்வு மேற்கொண்ட இடத்தினை தவிர்த்து வேறு ஓரிடத்தில் அகழ்வதற்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(வ-5-10)

செல்வச்சந்நிதி ஆலய உற்சவத்தை முன்னிட்டு மாபெரும்
புத்தக மலிவு விற்பனை
இடம் :- மெத்தை வீட்டு கந்தசுவாமியார் மடம்
காலம் :- 09.09.2016 - 18.09.2016
குறிப்பு:- அனைத்துப் புத்தகங்களும் 15% - 50% வரை விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.
யாழ்.புத்தகசாலை,
மணிக்கூட்டு வீதி,யாழ்ப்பாணம்.
077 834 9507, 021 492 7625, 021 492 7568

### கண்ணீர் அஞ்சலி



10.09.2016 சனிக்கிழமை
சிவபதமடைந்த எனது உயிர் நண்பன்
**வேலாயுதம் முருகமூர்த்தி**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நண்பன் - S.S. பான்சி உரிமையாளர்.

(9ஆ/4556)(11,17,18)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**நாகராசா அகிலன்**

தோற்றம் 22.11.1991 — மறைவு 26.08.2015
திதி: 12.09.2016



அகிலத்தில் உயர்வாக
அகிலா நாம் வாழ்வதற்கு
அரபு தேசத்தில் அயராது
உழைத்த உன்னை - காலன்
காவு கொண்டு ஓராண்டு சென்றாலும்
எங்களுக்கு ஒரு நாளாய் தோன்றுது ஐயா!
ஒரு நூறு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உன் நினைவில் ஒரு கணமும் மாறாது மெய்யாய்

விசவெட்டி,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்



திருமதி **விஜிதா பவளராஜ்**

யாழ். நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜிதா பவளராஜ் அவர்கள் (08.09.2016) வியாழக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் அமிர்தவாசம் - ஜெஸ்லி மெற்லில்டா தம்பதியரின் செல்வப்புதல்வியும் சோமசுந்தரம் பவளராஜ் அவர்களின் அன்புமனைவியும் பூர்விகா, தமயந்தி, தட்சயா ஆகியோரின் அன்புத்தாயும் சோமசுந்தரம் - சரஸ்வதி தம்பதியரின் அன்புமருமகளும் அனித்தா, ரோபேட் (நெல்சன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் குகதாஸ், மதிவாணி, மதிவதனி ஆகியோரின் பாசமிகு அண்ணியும் சுரேஸ், லின்டா ஆகியோரின் அன்பு மைத்துனியும் நவீனகுமார் காலஞ்சென்ற சிவபாக்கியநாதன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் றொஹே, றேபேக்கா ஆகியோரின் அன்பு அத்தையும் தர்மிதன், அச்சுவினி, அபிலட்சியா (டர்சிகா) ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்களை கீழ் காணும் தொலைபேசி ஊடாக தொடர்புகொள்ளவும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
சோமசுந்தரம் குடும்பத்தினர்
023 2222548, 077 6182788

1 ஓர் ஆண்டு நிறைவில் எங்கள் சலுகைகள் (YEAR OFFERS!)
AUTO MAASTERS
× 50% வரையிலான விலைக் கழிவு
× இலவச வாகன பரிசோதனை (Scanning and Checkup)
× அக்டோபர் வரை...

BODY SHOP
] Accident Repairs
] Booth Painting
] Tinkering & Painting
] Under Coating
] Vehicle Modification

Mechanical Repairs
] Engine Repairs
] Scanning
] Engine Tune UP
] Auto A/C Repairs
] Electrical Repairs

WHEEL Solutions
] Wheel Alignment
] Wheel Balancing
] Tyre Changing
] Tyres (Dunlop/Maxxies)
] Alloy wheels
] Wheel covers

Services
] Snow Body Wash
] Interior Detailing (Auto Maasters Special)
] Exterior Detailing (Cut & Polish)
] Under Garage Wash
] Lubricants

× சுத்திகரிக்கப்பட்ட நீரினால் வாகன சுத்திகரிப்பு (R O Plant filtering system)
Total Vehicle Solutions
automaasters@gmail.com 077 393 1 393 077 761 7761 021 221 6363 automaasters
No.63,Nedumkulam Road, Ariyalai, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகளை சுமுகமாக தீர்க்க பெற்றோர் விருப்பம்

யாழ்ப்பாணம், செப். 12

உடுவில் மகளிர் கல்லூரியில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவிகளின் பெற்றோருக்கு இடையே நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட பலர் பிரச்சினையை வளர்க்க வேண்டாம். அதனை சுமுகமாக முடிப்போம் எனத் தெரிவித்தனர். இதனால் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. அதனையடுத்து அவர்கள் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதன் பின்னர் எஞ்சியிருந்த 14 பேரைக் கொண்டு சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டு மூன்று தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் மாற்றத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த மூன்றாம் திகதி 13 மாணவிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாணவிகளின் போராட்டத்தை தொடர்ந்து மல்லாகம் மாவட்ட நீதிபதி ஏ.யூட்சன் பாடசாலைக்குச் சென்று சகல தரப்பினருடனும் கலந்துரையாடி போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருந்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை, அருட்தந்தையர்கள் சிலர் நேற்று மதியம் நேரில் சென்று சந்தித்துக் கலந்துரை யாடினர். முதலமைச்சர், சட்டத்துக்கு உட்பட்ட வகையில் என்னால் என்ன செய்ய முடியுமோ அதனைச் செய்வேன் என்று பதிலளித்தாக, சந்திப்பில் கலந்துகொண்ட மதபோதகர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளின் பெற்றோருக்கான சந்திப்பு சுன்னாகத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டது. சந்திப்பு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்ட நேரத்தில் மூன்று பேர் மாத்திரமே அங்கு பிரசன்னமாகியிருந்தனர். பின்னர், 30 பேர் வரையில் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கருத்துத் தெரிவித்த பெற்றோர், தமது பிள்ளைகள் பழைய அதிபர் மீதான அன்பு காரணமாக அவரின் சேவைக்காலம் நீடிக்கப்பட வேண்டும் என்று கோரி போராட்டம் நடத்தினார்கள். அந்தப் போராட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் பிள்ளைகளை விட்டிருந்தோம். பிள்ளைகளின் கோரிக்கை கவனத்தில் எடுக்கப்படாது புதிய அதிபர் நியமிக்கப்பட்டு விட்டார். பழைய அதிபருக்காகப் போராடிய பிள்ளைகள் மீது புதிய அதிபரின் நிர்வாகம் பழிதீர்க்கும். கல்வி – விளையாட்டுச் செயற்பாடுகளில் இருந்து ஒதுக்கும் நிலை ஏற்படலாம். இவ்வாறு எமது பிள்ளைகள் அச்சம் கொண்டுள்ளனர். அதனால் பாடசாலைக்குச் செல்வதற்குப் பயப்படுகின்றார்கள்.

மாணவிகளைப் பழிதீர்க்கும் செயற் பாட்டுக்கு உட்படுத்த கூடாது என்று தென்னிந்திய திருச் சபையின் பேராயர் டானியல் தியாகராஜாவிடம் கோரிக்கை முன்வைப்போம்.

எமது பிள்ளைகள் தோற்றுப் போனோம் எனும் மன நிலையில் இருக்கின்றார்கள். அவ்வாறு இருப்பதனால், ஏதேனும் விபரீத முடிவுக்கு போய் விடுவார்களோ என்று அஞ்சுகின்றோம். பழைய அதிபரின் சேவைக் காலத்தை குறைந்தது இரண்டு வருடத்துக்கு நீடிக்க வேண்டும்.

இந்தக் கருத்துக்கு கூட்டத்தில் கலந்து கொண்ட ஒரு சில பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்தனர். தனது சகோதரி முறையிலான தங்கை உடுவில் மகளிர் கல்லூரியில் படிப்பதாகத் தெரிவித்துக் கொண்டு கூட் டத்துக்கு வந்த இளைஞர்கள் சிலர், பழைய அதிபரின் பணி நீடிக்கப்படக் கூடாது என்று கருத்துத் தெரிவித்த பெற்றோருடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. வந்திருந்த பெற்றோர்களில் ஒரு தொகுதியினர் வெளியேறினர். எஞ்சிய சிலரை வைத்துக் கொண்டு கூட்டம் நடந்தது. அதில் சங்கம் உருவாக்கப்பட்டது. (வ-5-37-101)

## நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் அமைதியை ஏற்படுத்தும் நடவடிக்கை மிக மெதுவாகவும் ஏனைய நடவடிக்கைகள் வேகமாகவும் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒரே தடவையில் நல்லிணக் கத்தை ஏற்படுத்த முடியாது. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி – கடின உழைப்பு – அர்ப்பணிப்பு – கவனமாகச் செயற்படுதல் – தொடர்ச்சி தன்மை – உறுதியான செயற்பாடுகள் என்பன அவசியம்.

பாதிக்கப்பட்டவர்கள், பொதுமக்கள் அடங்கலாக பன்னாட்டு சமூகமும் பொறுமை இழந்திருக்க கூடும். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும் நிலையில், ஆபத்தான விடயங்களைக் கையிலெடுத்தால் அனைத்தையும் இழக்க நேரிடும்.

முன்எச்சரிக்கையுடன் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். அரசின் அணுகுமுறை மிக மெதுவான ஒன்றாக கருத முடியும் – என்றார். (வ-5)

## வடக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைக்கென அரசினால் 4 ஆயிரத்து 131 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. வடக்கிலுள்ள தேசியப் பாடசாலைகளுக்கு ஆயிரத்து 402 மில்லி யன் ரூபா ஒதுக்கப்பட்டது. மாகாணை குறித்தொதுக்கப்பட்ட நிதியாக ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது என்றார். (வ-4)

## மரண அறிவித்தல்கள்

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

### முத்தையா நாகராசா (பத்தர்)



யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா நாகராசா (பத்தர்) நேற்று (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா-இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சந்திரலேகாவின் (ராணி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற கிருஷ்ணசாமி மற்றும் சத்தியபாமா, காலஞ்சென்ற நல்லையா மற்றும் செல்வமணி, குணரெத்தினம், காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் சோமலிங்கம், இந்திராதேவி, பாலராஜா, புஸ்பவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவபாலன் (சேருகன் நகைத் தொழிலகம்), நந்தபாலன் (சஞ்சிகா ஜுவல்லறி), பாலறஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரவதனி, மதிவதனா, விஜயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் சேருகன், கேசிகன், சஞ்சிகா, கம்ஷிகா, கனிஷிகா, ஜனுஷ்யா, இந்துலயா, லிதுனயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சிவபாலன்
(பெரிய கண்ணன்)
சேருகன்நகைத் தொழிலகம்
பாங்சால் வீதி,
சின்னக்கடை.

நந்தபாலன்
(சின்னக் கண்ணன்)
சஞ்சிகா ஜுவல்லறி
கண்டி வீதி, சாவகச்சேரி.

இத்தியடிப் பிள்ளையார் கோயிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

**021 5610960, 077 5983997**

### வைரமுத்து அருணகிரி

தோற்றம்
1938 . 06 . 19



மறைவு
2016 . 09 . 11

கதிரிப்பாய் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து அருணகிரி அவர்கள் நேற்று (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து மற்றும் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரனும் மீனலோசினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாலசுந்தரம் (தொண்டமானாறு பழைய விதானையார்) மற்றும் இராசநாயகி தம்பதியரின் அன்புமருமகனும் பவானி (இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபன வெளிக்கள உத்தியோகத்தர், உ.ப. தவிசாளர் கோப்பாய் மத்தியஸ்தர் சபை), அஜந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் விக்கினேஸ்வரராசா, கிரண்டி ஆகியோரின் அன்புமாமனாரும் நிருபா, பிரவீன், இஷிகா, அஷ்வினி, நரேந்திரன் ஆகியோரின் அன்புப்பேரனும் சரோஜினி, கமலலோஜினி, விமலலோஜினி, ஹரிச்சந்திரன், ஜெயச்சந்திரன், ஞானச்சந்திரன், பத்மலோஜினி, பாலச்சந்திரன், இராமச்சந்திரன், யோகச்சந்திரன், பிரேமச்சந்திரன், சிவௌஜினி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கதிரிப்பாயில் உள்ள இல்லத்தில் நடைபெற்று நாளை (13.09.2016) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் கதிரிப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
077 7290450
075 7607199
கதிரிப்பாய், அச்சுவேலி.

## மரண அறிவித்தல்கள்

### தர்மலிங்கம் தர்மபாலா (பாலா)



பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தர்மபாலா (பாலா) கடந்த (10.09.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தர்மலிங்கம் மற்றும் விமலாதேவி தம்பதியரின் அருந்தவப் புதல்வனும் குமுதினியின் அன்புக் கணவரும் தர்மலிங்கம் காலஞ்சென்ற மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் பத்மநாதன்(ஜேர்மனி), அரசி, குணசேகரம்-பத்மாவதி, தங்கமலர், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் விஜ்யகுமார் ஆகியோரின் அன்புப் பெறாமகனும் சிவாஜினியின் அன்பு மைத்துனரும் கவீந்திரராசாவின் அன்புச் சகலனும், அன்னம்மா, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் மனோன்மணி, மகேஸ்வரி, ராஜேஸ்வரி, யோகேஸ்வரி, லலீலா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

.அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.09.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 9789464

பொற்பதி வீதி,
கொக்குவில்.

### திரு. கணபதிப்பிள்ளை பேரின்பநாயகம்

(Managing Director - Trans Atlantic Travels Trans Atlantic Inn and Pacific Lanka Enterprises)
(Srilanka Managing Director - Premier International, Australia)

பிறப்பு
16 . 07 . 1954



இறப்பு
09 . 09 . 2016

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், மல்லாவி கொழும்பு, ஆஸ்திரேலியா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பேரின்பநாயகம் அவர்கள் (09.09.2016) வெள்ளிக்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அவர்கள் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை,பராசக்தி தம்பதியரின் அன்புப்புதல்வரும் கார்த்திகேசு கமலாம்பிகை தம்பதியரின் அன்புமருமகனும் புட்கலாதேவி (ஆஸ்திரேலியா) அவர்களின் அன்புக்கணவரும் பிரதீபன் (ஆஸ்திரேலியா), பிரசாந் (ஆஸ்திரேலியா), திவ்யா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவமணிதேவி (ராணி - கனடா), தில்லைநாதன் (Ex Member of Parliament Srilanka -கனடா), கனகலிங்கம் (பாலன் - கனடா), லோகநாதன் (Councilor, City of Markham,கனடா), தேவநாதன் (கனடா), Dr.சரோஜாதேவி (அமெரிக்கா), கையிலாயநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் அம்பலவாணர் (கனடா), கனகாம்பிகை (கனடா), புனிதவதி (கனடா) Dr.ராஜேஸ்வரி (கனடா), வசந்தாதேவி (கனடா), Dr.சிவனேஸ்வரன் (அமெரிக்கா), யோகநாதன் (கனடா), பரமேஸ்வரி (சந்திரா - கனடா), கதிர்காமநாதன் (கனடா), கலைவாணி (கனடா), மாலினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அவர்களின் இறுதி நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை 16.09.2016 அன்று இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்பு-
புட்கலாதேவி (மனைவி - ஆஸ்திரேலியா)
தொ.பே. +6187120459
105, Kidds Road Dovtan, Victoria 3177 Australia.
பிரதீபன் (மகன் - ஆஸ்திரேலியா)
செ.பே +61452430404
பிரசாந் (மகன் - ஆஸ்திரேலியா)
செ.பே +61422433096
[illegible] (சகோதரி கனடா)
தொ.பே +61452430404
[illegible] (இலங்கை)
செ.பே +9477071465


தகவல் :
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செரீனாவை வீழ்த்துவேன் என ஒருபோதும் நினைக்கவில்லை

### பிளிஸ்கோவா தெரிவிப்பு

அமெரிக்க ரென்னிஸ் தொடரிலிருந்து செரீனா வில்லியம்ஸை வெளியேற்றியமையை நம்ப முடியவில்லை எனத் தெரிவித்தார் பிளிஸ்கோவா. பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடர்களில் ஒன்றான அமெரிக்க ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்றது. பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டமொன்றில் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீராங்கனையான செரீனாவும், பத்தாம் நிலை வீராங்கனையான பிளிஸ்கோவாவும் மோதினர். 2:0 என்ற செற் கணக்கில் பிளிஸ்கோவா வெற்றிபெற்று செரீனாவை வெளியேற்றினார். இதனையடுத்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். செரீனா வில்லியம்ஸ் போன்ற சம்பியன் வீராங்கனையை தோற்கடித்தது வியப்புக்குரிய விடயமாகும். இதை என்னால் நம்பவே முடியவில்லை. அரையிறுதியில் செரீனாவை எதிர்கொள்வேன் என்றோ அவரை வீழ்த்துவேன் என்றோ ஒருபோதும் நினைக்கவில்லை. உணர்வுபூர்வமான மகிழ்ச்சியில் திளைக்கிறேன் என பிளிஸ்கோவா மேலும் தெரிவித்தார். இறுதியாட்டத்தில் பிளிஸ்கோவாவை வீழ்த்தி சம்பியனானார் கெர்பர். (ம)





## அமெரிக்கத் தொடர்; கெர்பரிடம் கிண்ணம்

அமெரிக்க ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியனானார் கெர்பர்.

நடப்பு வருடத்தின் கடைசி ரென்னிஸ் தொடரான அமெரிக்கத் தொடர் அந்த நாட்டின் தலைநகர் நியூயோர்க்கில் நடைபெற்றது. நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில்ஜேர்மனின்கெர்பரைஎதிர்த்து செக்குடியரசின் பிளிஸ்கோவா மோதினார்.

ஆட்டத்தின் முதல் செற்றை 6:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார் கெர்பர்.

அடுத்த செற்றை 6:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார் பிளிஸ்கோவா. மூன்றாவதும், இறுதியானதுமான செற்றில் வெற்றிபெறுபவரே ஆட்டத்தின் வெற்றியாளர் என்ற நிலையில், அந்த செற்றை 6:4 என்ற அடிப்படையில் கைப்பற்றிய கெர்பர் முடிவில் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் பன்னாட்டு ரென்னிஸ் சம்மேளனம் அடுத்ததாக வெளியிடவுள்ள தரப்படுத்தலில் கெர்பர் முதலிடம் பெறுவது உறுதியானது.

கடந்த மூன்று வருடங்களாக முதலிடத்தில் நீடித்து வந்த செரீனா இரண்டாம் இடத்துக்கு பின்தள்ளப்படுவார். (ம)

## மனோகர் மீது தாக்கூர் தாக்கு

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தற்போதைய தலைவரான அனுராத் தாக்கூர், முன்னைய தலைவரான மனோகரின் செயற்பாடுகள் மீது சில விமர்சனங்களை முன்வைத்தார்.

இந்திய கிரிக்கெட் சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் இரு பெரும் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மனோகர் இந்திய கிரிக்கெட் சபையிலிருந்து விலகி, பன்னாட்டு கிரிக்கெட் சபையிடம் சென்றார். இதனை மையமாக வைத்தே அனுராத் தனது விமர்சனங்களை முன்வைத்தார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக மனோகர் செயற்பட்டபோது எமக்கெதிராக இரு பெரும் வழக்குகள் நடைபெற்றன. ஒன்று எமது பிரதான வருமானமான விளம்பரங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் மற்றது ஐ.பி.எல். தொடரை இந்த வருடத்தில் நடத்துவது தொடர்பாகவும் (அதிக வறட்சி காரணமாக புனே, குஜராத்தில் நடத்தத் தடை விதிக்கப்பட்டது) இருந்தது.

இரண்டு விடயங்களும் அதி முக்கியமானவை. அப்போது மனோகர் இந்திய கிரிக்கெட் சபையின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகி, பன்னாட்டு கிரிக்கெட் சபையிடம் சென்றார். இது கப்பல் ஒன்று மூழ்கும்போது பயணிகளைக் காப்பாற்றாமல் கப்டன் தப்பிச் செல்வதற்கு நிகரானது என தாக்கூர் மேலும் தெரிவித்தார். (ம)



## மாரியப்பனுக்கு 2 கோடி தமிழ்நாடு அறிவித்தது

பரா ஒலிம்பிக் தொடரில் தங்கம் வென்ற தமிழ் வீரர் மாரியப்பனுக்கு 2 கோடிகளை பரிசாக அறிவித்தது தமிழ்நாட்டு அரசு. பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் மாற்றுத்திறனாளிகளுக்கான பரா ஒலிம்பிக் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான உயரம் பாய்தலில் இந்தியாவின் சார்பாகக் களமிறங்கிய தமிழ்நாட்டு வீரர் மாரியப்பன் தங்கம் வென்றார். இதையடுத்து அவருக்கு பாராட்டுக்கள் பல தரப்பிடமிருந்தும் குவிந்து வருகின்றன. இந்தியப் பிரதமர் மோடி, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, தமிழ்நாட்டின் முதல்வர் ஜெயலலிதா, கிரிக்கெட் பிரபலங்கள், சினிமா நட்சத்திரங்கள் எனப் பலரும் தமது வாழ்த்துக்களைக் குவித்து வருகின்றனர். தமிழ்நாட்டு அரசு அவருக்கான பரிசுத்தொகையாக 2 கோடியை அறிவித்தது. (ம)



## இந்தியாவை சமாளிப்பது கடினம் என்கிறார் நியூசியின் வில்லியம்சன்

இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் சமாளிப்பது கடினம் எனத் தெரிவித்தார் நியூசிலாந்து அணியின் தலைவரான வில்லியம்சன்.

இந்தியாவுக்கு நீண்ட தொடர்களுக்காகச் சுற்றுப்பயணம் செய்யவுள்ளது நியூசிலாந்து. இந்த இரு அணிகளுக்கும் இடையில் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரும், மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரும் நடைபெறவுள்ளது. செப்ரெம்பர் 22, செப்ரெம்பர் 30, ஒக்ரோபர் 8 ஆம் திகதிகளில் முதல் மூன்று டெஸ்ட் ஆட்டங்களும் நடைபெறவுள்ளன.

ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் ஆட்டங்கள் முறையே ஒக்ரோபர் 16, 19, 23, 26, 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இந்தத் தொடருக்காக நேற்றுமுன்தினம் நியூசிலாந்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே வில்லியம்சன் இந்தியாவை சமாளிப்பது கடினம் என வெளிப்படுத்தினார்.



இந்திய அணி அதன் சொந்த மண்ணில் மிகவும் பலமானது. சுழலுக்கு ஏற்ப ஆடுகளங்கள் அமைக்கப்படும் என்பதை அறிவோம். அங்குள்ள ஆடுகளங்களில் அதிலும் குறிப்பாக டெஸ்ட் ஆட்டங்களுக்குரிய ஆடுகளங்களில் சுழல் பந்துவீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்படுவார்கள். இந்தியாவை சமாளிப்பது கடினமாக அமையப்போகிறது என்று வில்லியம்சன் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழுக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், செப்.12
இளைஞர் கழகங்களுக்கு இடையிலான தேசிய மட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ். மாவட்ட இளைஞர் கழகத்துக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.
யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற வெண்கலப் பதக்கத்துக்கான இந்த ஆட்டத்தில் யாழ். மாவட்ட இளைஞர் கழக அணியை எதிர்த்து இரத்தினபுரி மாவட்ட இளைஞர் கழக அணி மோதியது. 32:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றது யாழ். மாவட்ட இளைஞர் கழக அணி. (ம-23)






# சென். பற்றிக்ஸ் கல்லூரி தேசியத்தில் சம்பியனானது

## வெள்ளி, வெண்கலமும் வடக்கிடம்

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டக் கால்பந்தாட்டத்தில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனானது. இந்தப் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தை இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியும், வெண்கலப் பதக்கத்தை மன்னார் சென். லூசியஸ் கல்லூரியும் தமதாக்கின.
அநுராதபுரத்தில் தொடர் நடைபெற்றது. நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது. இரண்டுமே வடக்கு மாகாண அணிகள். எனவே தங்கம், வெள்ளி என்பன வடக்கு மாகாணத்துக்கே கிடைக்கும் என்று உறுதியாகிய நிலையில், ஆட்டம் நடைபெற்றது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதியின் 33 ஆவது நிமிடத்தில் பற்றிக்ஸின் முதல் கோலைப் பதிவுசெய்தார் வினிதன்.
பதிலடி கொடுக்க முனைப்புக் காட்டியது சென். ஹென்றிஸ். ஆனால், பற்றிக்ஸின் ஆட்டம் படிப்படியாக வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்தது. வேறெந்த மாற்றமும் ஏற்படாத நிலையில் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் கிண்ணம் வென்றது சென். பற்றிக்ஸ்.
முன்னதாக இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மன்னார் சென். லூசியஸ் கல்லூரி அணியை எதிர்த்து அநுராதபுரம் சென். ஜோசப் கல்லூரி அணி மோதியது. இதில் மன்னார் சென். லூசியஸ் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது.
தேசியமட்டப் போட்டிகளில் ஒரு விளையாட்டுப் பிரிவில் வடக்கு மாகாணத்தின் அணிகள் முதல் மூன்று இடங்களையும் கைப்பற்றுவது இதுவே முதல் தடவை. மொத்தத்தில் நடப்பு வருட தேசியமட்ட கால்பந்தாட்டத்தில் வடக்கின் 15 வயதுப் பிரிவு கால்பந்தாட்ட அணிகள் ஆகச் சிறந்த அடைவு மட்டத்தை பெற்றுக்கொடுத் துள்ளன என்றால் அது மிகையாக இருக்கப் போவதில்லை. (ம-23-422)

# வடக்குக்கு இரு பதக்கங்கள் வென்று கொடுத்த சகோதரிகள்

யாழ்ப்பாணம், செப். 12
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட சைக்கிளோட்டத்தில் வடக்கு மாகாணத்துக்கு சகோதரிகள் இருவர் வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்று கொடுத்தனர்.
அநுராதபுரத்தில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவி என்.விதுசனா வெள்ளிப் பதக்கத்தையும், வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் மாணவி என்.நிதர்சனா வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். இவர்கள் இருவரும் சகோதரிகள். சகோதரிகள் மூலமாக ஒரே போட்டியில் வடக்குக்கு இருபதக்கங்கள் கிடைத்தமை விளையாட்டு ஆர்வலர்களால் பாராட்டப்பட்டது. (ம-23-422)




என்.விதுசனா
என்.நிதர்சனா




# மெதடிஸ்த பெண்கள் பாடசாலை தேசியமட்டக்கபடியில்சம்பியன்

## நெல்லியடி மத்திக்கு வெள்ளி

கரணவாய், செப். 12
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டக் கபடித் தொடரில் 15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது. நெல்லியடி மத்திய கல்லூரி அணிக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது. மாத்தறை உயன்வத்த கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் பெரும் போராட்டத்தின் பின் 21:19 என்று முன்னிலை வகித்தது மெதடிஸ்த பெண்கள் பாடசாலை. இரண்டாம் பாதியில் மெதடிஸ்த பெண்கள் அணி சிறிது ஆதிக்கம் செலுத்தி முடிவில் 46:34 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-108-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றிக்ஸுக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், செப். 12
பாடசாலைகளுக்கு இடையிலானதேசிய மட்ட கால்பந்தாட்டத்தில் 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில்கிண்ணியா மத்திய கல்லூரி அணியை வீழ்த்தி வெண்கலத்தை வென்றது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி.
அநுராதபுரம் மகளிர் பாடசாலை மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கிண்ணியா மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெண்கலப் பதக்கத்தை தனதாக்கியது. (ம-422-23)

## பாகிஸ்தான் முகாமையாளராக வசீம் பரி நியமிக்கப்பட்டார்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முகாமையாளராக அந்த அணியின் முன்னாள் வீரர் வசீம் பரி நியமிக்கப்பட்டார்.

பாகிஸ்தான் அணியின் முகாமையாளராக ஆலம் செயற்பட்டு வந்தார். இவரது பதவிக்காலம் இந்த மாதத்துடன் முடிவடைகிறது. அவருடனான ஒப்பந்தத்தை நீடிக்க பாகிஸ்தான்



கிரிக்கெட் சபை விரும்பவில்லை. இந்த நிலையில் அணியின் புதிய முகாமையாளராக அந்த அணியின் முன்னாள் வீரரான வசீம் பரி நியமிக்கப்பட்டார். (ம)



## யாழ். மாவட்ட இளைஞர் கழகம் வெள்ளியை உறுதிப்படுத்தியது

யாழ்ப்பாணம், செப். 12

இளைஞர் கழகங்களுக்கு இடையிலான தேசியமட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணி இறுதிக்குத் தகுதி பெற்றது. இதன்மூலம் அந்த அணிக்கு குறைந்த பட்சம் வெள்ளிப்பதக்கமாவது கிடைப்பது உறுதியானது.


யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ். மாவட்ட இளைஞர் கழக அணியை எதிர்த்து இரத்தினபுரி மாவட்ட இளைஞர் கழக அணி மோதியது. இதில் யாழ். மாவட்ட இளை ஞர் கழக அணி 16:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத் துக்குத் தகுதி பெற்றது. இந்த மாதம் 23 ஆம் திகதி யாழ். மாவட்ட இளைஞர் கழகமும் மொனராகலை மாவட்ட இளைஞர் கழக அணியும் தங்கத்துக்காக மோதவுள்ளன. (ம-23)


## காயமே தோல்விக்கான காரணம் செரீனா வில்லியம்ஸ் தெரிவிப்பு

அமெரிக்க ரென்னிஸ் தொடரில் தோல்வியடைந்து வெளியேறியமைக்கு, காயமே பிரதான காரணம் எனத் தெரிவித்தார் நட்சத்திர வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ்.

அமெரிக்க ரென்னிஸ் தொடரின் அரையிறுதி ஆட்டமொன்றில் நட்சத்திர வீராங்கனையான செரீனா வில்லியம்ஸை எதிர்த்து பிளிஸ்கோவா மோதினார். இந்த ஆட்டத்தில் செரீனா வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2:0 என்ற நேர் செற் கணக்கில் அதிர்ச்சி கொடுத்தார் பிளிஸ்கோவா. இந்த நிலையிலேயே தனது தோல்விக்கான பிரதான காரணமாக காயத்தைக் குறிப்பிட்டார் செரீனா.

இந்த தொடரின் தொடக்கத்தில் இருந்தே எனது இடது முழங்காலில் வலி இருந்தது. நான் 100 சதவீதம் உடல்தகுதியுடன் இல்லை. எனது நகர்வுகள் மிகவும் சாதாரணமாகவே அமைந்தன: ஏராளமான தவறுகளைச் செய்தேன். தோல்விக்கு, காலில் ஏற்பட்ட காயத்தைத்தான் சொல்லியாக வேண்டும் என்று செரீனா மேலும் தெரிவித்தார். (ம)





## யுனைற்றெட்டை வீழ்த்தியது சிற்றி

இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் பலம்வாய்ந்த மன்செஸ்டர் யுனைற்ரெட்டை வீழ்த்தியது மன்செஸ்டர் சிற்றி. மன்செஸ்டர் யுனைற்ரெட் அணியில் போக்பா, ரூனே, இப்ராகிமோவிக் போன்ற தலைசிறந்த வீரர்கள் இருந்தமையால் அந்த அணிக்கான வாய்ப்பு அதிகம் என்று கருதப்பட்டது. ஆனால் ஆட்டத்தின் முதலாவது நிமிடம் முதல் சிற்றி சிறப்பாகவே ஈடுகொடுத்தது. ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் சிற்றி அணியின் கெவின் டி புருய்னே முதல் கோலைப் பதிவு செய்தார். 36 ஆவது நிமிடத்தில் சிற்றி அணி இரண்டாவது கோலைப் பதிவுசெய்தது. 42 ஆவது நிமிடத்தில் இப்ராகிமோவிக் யுனைற்ரெட்டின் முதல் கோலைப் பதிவு செய்தார். முதல் பாதியின் முடிவில் சிற்றி 2:1 என்று முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படாத நிலையில் வெற்றிபெற்றது மன்செஸ்டர் சிற்றி. (ம)

வடமாகாணப் பரீட்சைகளுக்கான வகுப்புக்கள்
இன்றைய வகுப்புக்கள்
* காலை 9.00-3.00 மணிவரை சமூர்த்தி
* மு.ப 11.00-4.00 மணிவரை நன்நடத்தை, ஆய்வு உத்தியோகத்தர் வகுப்புக்கள் நடைபெறும்
T.P 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி வெண்கலத்தை தனதாக்கியது

### வரலாற்று அடைவாகவும் பதிவு

கரணவாய், செப். 12

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டக் கபடித் தொடரில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணி வெண்கலம் வென்றது.

மாத்தறை நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற வெண்கலப் பதக்கத்துக்கான இந்த ஆட்டத்தில், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து தல்சிலா தேசிய பாடசாலை அணி மோதியது. ஆட்டத்தின் பெரும்பாலான நேரத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி முடிவில் 54:32 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் 112 ஆண்டுகால வரலாற்றில் அந்த அணி வென்ற முதல் தேசியமட்டப் பதக்கமாக இது பதிவானது. (ம-108-422)

## கூலிவேலை செய்து குடும்பத்தைக் காத்தார்; மாரியப்பனின் தாய் உருக்கமான கருத்து



பரா ஒலிம்பிக் தொடரில் தங்கம் வென்ற தமிழ்நாட்டு வீரர் மாரியப்பன், கூலி வேலைகள் செய்ததாக அவரது தாயார் தெரிவித்தார்.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்றுவரும் மாற்றுத்திறனாளிகளுக்கான இந்தத் தொடரில் ஆண்களுக்கான உயரம் பாய்தலில் இந்தியாவின் சார்பாக களமிறங்கிய தமிழ்நாட்டு வீரர் மாரியப்பன் தங்கப் பதக்கத்தை வென்றார். தொடர் நடைபெற்றுவரும் பிரேஸிலில் இருந்து மாரியப்பன் இன்னும் தாய்நாடு திரும்பவில்லை. அவரது தாயாரிடம் இந்திய ஊடகமொன்று கண்ட நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மாரியப்பன் தனது ஐந்தாவது வயதில் லொறி விபத்தில் வலது காலை இழந்தார். எனக்கு மூன்று மகள்களும் உள்ளனர். கணவர், பிள்ளைகள் சிறு வயதில் இருந்தபோதே இறந்து விட்டார். எனவே எனது குடும்பத்தின் பொருளாதாரத்தை எண்ணி பிள்ளைகளுடன் சாவடைய எண்ணினேன். ஆனால் மாரியப்பன் 'வறுமை ஓர் நாள் மாறும்' எனத் தெரிவித்தார். பயிற்சிகளையும் மேற்கொண்டு ஏனைய நேரங்களில் கூலி வேலைகளுக்கும் சென்று குடும்பத்தைக் காப்பாற்றினார். தற்போது ஒலிம்பிக் தொடரில் சாதித்துள்ளார். அவர் இந்தியாவுக்கு பெருமை சேர்த்தமையை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன் என மாரியப்பனின் தாயார் மேலும் தெரிவித்தார். மாரியப்பனின் தாயார் வீடுவீடாகச் சென்று மரக்கறிகளை விற்பனை செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.